# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 275 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 11, சனிக்கிழமை 27.08.2016


## நிந்தவூரில் விவசாயிகள் போராட்டம்

அம்பாறை, ஓக. 27

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கிரான் கோமாரிப் பகுதியில் தாம் காடு வெட்டித் தோட்டங்களாக்கிய காணிகளை மீளப் பெற்றுத் தர வேண்டும் என்று கோரி நிந்தவூரில் விவசாயிகள் நேற்றுப் பெரியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

(விரிவு: பக்.06)

## நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட

# 5 பொலிஸார் மீது கொலைக் குற்றச்சாட்டு

### தாக்கல் செய்ய சட்ட மா அதிபர் திணைக்களம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 27

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்தவரும் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருப்பவருமான சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸார் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்படவுள்ளது. இந்த 5 பேரையும் உள்ளடக்கிய 8 பொலிஸாருக்கு எதிராகச் சித்திரவதைக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவுள்ளன.

சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்த பின்னர் அவரைச் சித்திரவதைசெய்துகிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் எறிந்தார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இவர்கள் மீது இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க சட்ட மா அதிபர் திணைக்களம் பணித்துள்ளது. குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளருக்கு இது குறித்த நெறிப்படுத்தல்களைத் திணைக்களம் வழங்கியது.

இது தொடர்பான தகவலை யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் பிரதிநிதி மல்லாகம் நீதிமன்றில்

>> 23ஆம் பக்கம்

## பலாலி தளத்தைச் சுற்றிய பகுதிகள் விடுவிக்கப்படா

### தளபதி மகேஸ் சேனநாயக்க ஆணித்தரம்

யாழ்ப்பாணம், ஓக. 27

பலாலி வானூர்தித் தளத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் தற்போதைய நிலமையில் விடுவிக்கப்படமாட்டா. அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் விரும்பினால் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களில் சொந்த இடங்களில் காணிகள் இல்லாத 621 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதற்கான உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்த நிகழ்வு நேற்றுக் கீரிமலையில் இடம்பெற்றது.

சொந்த

>> 24ஆம் பக்கம்

வடக்குக் கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட

## ரூ. 6,000 மில்லியன் திரும்பியது

### ஆளுநர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 27

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 6 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி திறைசேரிக்கு திரும்பியுள்ளது. அந்த நிதியை மீள எடுக்கலாம் என்றால், அதனை கிளிநொச்சியில் பொருளாதார வலயம் அமைக்கப் பயன்படுத்துவேன்.

இவ்வாறு கிளிநொச்சியில் தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே.

கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த வடக்கு மாகாண

>> 24ஆம் பக்கம்



## செப். 2இல் யாழ்ப்பாணம் வருகிறார் பான் கீ மூன்

யாழ்ப்பாணம், ஓக. 27

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் யாழ்ப்பாணத்திற்கு எதிர்வரும் 2ஆம் திகதி வருகை தரவுள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் கூரே, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசுவார். பளை

>> 24ஆம் பக்கம்

நாட்டை முன்னேற்றக் கைகோருங்கள்

## புலம்பெயர் சமூகத்துக்கு மங்கள பகிரங்க அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

புலம்பெயர் மக்கள் பல துறைகளில் திறமையாகவுள்ளனர். அவர்கள் அந்தத் திறமையைக் கொண்டு எமது நாட்டை அபிவிருத்தி செய்ய எம்முடன் கைகோர்த்துச் செயற்படவேண்டும். காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. விடமுடியாத காணிகளின் பெறுமதிக்கு ஏற்ப உரிமையாளர்களுக்கு பணம் வழங்கப்படும். இன்னும்

>> 23ஆம் பக்கம்

## ஈழத்துக்காகப் போராடியது அருவருக்கிறது

### சொல்கிறார் சேரன்



சென்னை, ஓக. 27

இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடியதை நினைக்கும் போது அருவருப்பாக இருக்கின்றது.

இவ்வாறு இயக்குநரும் நடிகருமான சேரன் தெரிவித்தார்.

திருட்டுத்தனமாகப் படத்தை இணையத்தளத்தில் வெளியிடுபவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று சொல்கின்றார்கள். இலங்கைத் தமிழர்களுக்காக நாம் – திரையுலகமே ஒன்று திரண்டு குரல் கொடுத்துப் போராடியிருக்கின்றோம்.

எங்களுடைய பல விடயங்களை இழந்துவிட்டு அவர்களுக்காகப் போராடி இருக்கின்றோம். ஆனால் அதைச் சார்ந்த சிலர் இவ்வாறு செய்கின்றார்கள் என்று கேள்விப்படுகின்ற போது, ஏன் இவர்களுக்காக இதைச் செய்தோம் என்று அருவருப்பாக இருக்கின்றது என்றார் இயக்குநர் சேரன்.

(விரிவு: பக்.11)

## பட்டினிப்போரில் ஈடுபடும் குடும்பத்தில் கணவன் – மனைவி வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, ஓக. 27

காணிப் பிணக்கொன்றில் ஏழு வருடங்களாக அநீதி இழைக்கப்பட்டதாகத் தெரிவித்து நேற்றுமுன்தினம் பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரில் கணவனும் மனைவியும் நேற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

காணியை விற்ற பின்னர் அந்த காணிக்கு வீட்டுத்திட்டத்தை தரக் கோரியே அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

செல்வபுரம் பகுதியில் உள்ள காணி ஒன்றில் 1983ஆம்ஆண்டுமுதல் வாழ்ந்துவருகின்றோம். எமது காணியைப் பிறிதொரு நபர் உரிமை கோரி வந்த நிலையில் காணிப்பிணக்கு 7 வருடமாக காணப்படுகின்றது. வீட்டுத்திட்டத்தில் வழங்கப்பட்ட வீட்டை அமைப்பதற்கு அந்தக் காணியை பிறிதொருவர் உரிமை கோருகின்றார். இன்று வரை எமக்கான நீதி வழங்கப்படவில்லை. நீதியை பெற்றுத்

>> 24ஆம் பக்கம்

## தெல்லிப்பழை இளைஞர் இருவர் புத்தளத்தில் நடந்த விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 27

புத்தளத்தில் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், தெல்லிப்பழையைச் சேர்ந்த இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். 9 பேர் படுகாயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சிலாபம் – புத்தளம் முதன்மைச் சாலையில் ஆராச்சிகட்டுவ பிரதேசத்தில், காரும் வானும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

'இரண்டும் நேருக்கு நேர் வேகமாக மோதிக் கொண்டதில் கடுமையான சேதங்கள் ஏற்பட்டன' என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

>> 24ஆம் பக்கம்

## இணைந்த நேர அட்டவணை செப். 7 முதல் நடைமுறைக்கு

### பின்பற்றத் தவறும் பஸ் சாரதிகளுக்கு தண்டனை என்கிறார் வடக்கு அமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக. 27

மக்களுக்கு சௌகரியமானதும் [illegible] மான [illegible] வதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை, வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் ஆகிய [illegible] முதல் வடக்கில் இணைந்த நேர அட்டவணை நடைமுறைக்கு வருகிறது.

இவ்வாறு அறிவித்தார் வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

>> 23ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




# யாழ்.நகரில் இரண்டு குவிவாடிகள் சேதம்

## திட்டமிட்டு உடைக்கப்பட்டதா என ஆராய்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஓக.27
யாழ். நகரின் பிரதான வீதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு குவிவாடிகள் சேதமடைந்து காணப்படுகின்றன. அது விபத்தினால் உடைந்ததா அல்லது திட்டமிட்டு உடைக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. அது தொடர்பில் ஆராயப்படுகிறது.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த குவிவாடிகளை வாகனங்கள் முட்டிசேதப்படுத்தியதற்கான அறிகுறிகள் அங்கு காணப்படவில்லை. யாரும் வேண்டும் என்று கற்களால் எறிந்து சேதப்படுத்தியிருக்கலாம் போல் தெரிகின்றது.
கே.கே.எஸ். வீதியில் யாழ். இந்துக்கல்லூரிச் சந்தி மற்றும் நாவலர் வீதியில் பாப்பையா கடைச்சந்தி ஆகிய இடங்களில் வீதிகளின் திருப்புமுனைபக்கமாகப்போடப்பட்ட இந்த குவிவாடிகளே இவ்வாறு உடைத்து சேதப்பட்டுள்ளன.
மாநகரப் பகுதியில் மொத்தமாக பத்து குவிவாடிகள் பிரதான சந்திகளின் திரும்புமுனைப் பக்கமாக பொருத்தப்பட்டன. பிரதான வீதிகளில் விபத்துக்களை தடுக்கும் முகமாக வீதியால் வாகனங்கள் திரும்புவதற்கும், மற்றைய வாகனங்களின் வருகையைக் கண்காணிப்பதற்கும் இந்தக் குவிவாடிகள் போடப்பட்டன. மக்களின் போக்குவரத்துத் தேவைக்காகப் போடப்பட்ட இந்தக் குவிவாடிகளை பேணிப்பாதுகாப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும் - என்றார். (வ-17)

# 30 கிலோ கஞ்சாவுடன் வடமராட்சியில் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஓக. 27
வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் 30 கிலோ கஞ்சா போதைப்பொதிகள் மீட்கப்பட்டது. சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளதோடு கடத்தல் நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியதாக மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி சமிந்த சிறிமான்ன தெரிவித்தார்.



இதுதொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
கஞ்சா பொதிகள் மாமுனை பகுதியூடாக வேறொரு பகுதிக்கு கைமாற்றப்பட இருப்பதாக தகவல் கிடைத்தது. அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில், மாமுனை வீதியூடாக நேற்றுக் காலை 5.30 மணியளவில் வேகமாக பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மடக்கிப் பிடிக்கப்பட்டது. அதனைச் சோதனையிட்டபோதே 20 கிலோ எடையுடைய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. அதனை வேறொருவருக்கு விற்பனைக்காகக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனைக் கொண்டு சென்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற மாமுனையைச் சேர்ந்த வீரசிங்கம் கேதீஸ்வரன் என்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.
உடனடியாக அலுவலகம் கொண்டு வரப்பட்ட சந்தேக நபரிடம் தீவிர விசாரணைகள் மேற்கொண்டது. அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் மாமுனையில் உள்ள வீடொன்றில் தேடுதல் நடத்தப்பட்டது. அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 கிலோ கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன. .
சந்தேகநபர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் -என்றார். (வ-4,109,26)

# இளைஞனின் சாரதி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஓக. 27
ஆபத்தான முறையில் ரயில் கடவையை கடந்து சென்ற இளைஞருக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றம் தண்டம் விதித்ததோடு, அவருடைய சாரதி அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துமாறும் உத்தரவிட்டது.
கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம், ஆரிய குளம் பகுதியில் அமைந்துள்ள ரயில் கடவையை ரயில் வரும் வேளையில் கடந்து சென்றார் என்ற குற்றச்சாட்டை இளைஞருக்கு எதிராகப் பொலிஸார் பொலிஸார் முன்வைத்தனர்.
இந்த வழக்கு கடந்த புதன்கிழமை யாழ். நீதிவான் மன்றில் விசாரணைக்கு வந்தது. இளைஞருடைய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்டது. அவர் தன் மீதான குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அதனையடுத்து இளைஞரை 5 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டபதில் நீதிவான் சறோஜினி இளங்கோவன். அவருடைய சாரதி அனு மதிப்பத்திரத்தை 3 மாதங்களுக்கு இடைநிறுத்துமாறும் தீர்ப்பளித்தார். (வ-4-103)

# தெய்வீக இசை இறுவட்டுக்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 27
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தெய்வீக இசை இறுவட்டுக்கள் அறிமுகவிழா மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு நாளை நடைபெறுகிறது என அறிவிக்கப்பட்டது.
நல்லூர் மயிலூரான் மணிமண்டபத்தில் மாலை 7 மணிக்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் கலந்து கொள்கிறார். (வ)

# பெரும்பான்மை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புக்கு மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27
இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக 6 பேர்தான் முடிவெடுத்தனர். பொதுமக்களைப் பாதிக்கும் வகையில், அதில் ஈடுபட நாம் தயாரில்லை. 30ஆம் திகதி பணிப் புறக்கணிப்பு இடம்பெறமாட்டாது.
இவ்வாறு அறிவித்தனர் இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண சாலையைச் சேர்ந்த பெரும்பான்மை ஊழியர்கள் .
இதுதொடர்பில் யாழ்ப்பாண சாலையைச் சேர்ந்த 175 ஊழியர் கையொப்பமிட்டு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
7 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தத் தகவல் முற்றிலும் தவறானது. தனியே 6 பேர் பணிப்புறக்கணிப்புச் செய்வது எவ்வாறு ஊழியர்கள் அனைவரையும் சாரும். எமது சாலையில் 96 வீதமான ஊழியர்கள் சபை விதிகளுக்குக் கட்டுப்பட்டுக் கடமையாற்றி வருகின்றோம். எமது சாலை முகாமையாளரினதும், பிரதான பிராந்திய முகாமையாளரினது வருகைக்கு பின்னர் யாழ்ப்பாண சாலை மிகவும் முன்னேற்றமடைந்தது. எமது சாலையிலுள்ள சுமார் 6 ஊழியர்கள் மற்றைய ஊழியர்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் கதைகளைப் பரப்பி நிர்வாகத்தை செயலிழக்க வைக்க முயற்சிக்கின்றனர்.
இப்படியான செயற்பாடுகளுக்கு நாம் ஒரு போதுமே இடமளிக்கமாட்டோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-21,ரி7)

# யாழ்ப்பாணத்தில் ஏற்பாடாகிய பேரணி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக.27
தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருந்த மக்கள் பேரணி, தொண்டமனாறு செல்வச்சந்நிதி உற்சவம் மற்றும் மட்டக்களப்பில் நடைபெறும் முத்தமிழ் விழா போன்ற காரணங்களால் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது.
இவ்வாறு தமிழ் மக்கள் பேரவை உறுப்பினரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்பு, அத்துமீறி விகாரை அமைப்பது உள்ளிட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியே இந்தப் பேரணியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. (வ -101)

# மீனவர்கள் இருவருக்குத் தண்டம்; வலைகளை அழிக்கவும் உத்தரவு

முல்லைத்தீவு, ஓக. 27
நந்திக் கடலேரியில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடித்த இரண்டு மீனவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்த முல்லைத்தீவு நீதிவான் மன்றம் கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்குமாறு உத்தரவிட்டது.
முல்லைத்தீவு, நந்திக் கடலேரியில் கடந்த 23ஆம் திகதி சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றஞ்சாட்டி இரண்டு மீனவர்களை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினர் கைது செய்தனர். அத்துடன் அவர்கள் பயன்படுத்திய வலைகளும் கைப்பற்றப்பட்டன.
இது தொடர்பான வழக்கு கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு நீதிவான் மன்றில் விசாரணைக்கு வந்தது. மீனவர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டமையையடுத்து இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான் கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்குமாறும் உத்தரவிட்டார்.
இதேவேளை, நந்திக் கடலேரியில் அநாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்த 2 இலட்சம் ரூபா பெறுமதியான 94 தொகுதி தடைசெய்யப்பட்ட வலைகளைக் கைப்பற்றிய அதிகாரிகள், அவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். (வ-115)

# சிறப்புத் தேவையுடையோருக்கு கற்பித்தல்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.27
சிறப்புத் தேவையுடையோருக்கு கற்றல் நடவடிக்கைகள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பார்வை தெரியாதவர்களை விட, ஏனைய சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் முழுமையாக இந்த வாய்ப்பைப் பெற்று கல்வியைத் தொடரலாம் என சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி சு.நோபேட் உதயகுமார் தெரிவித்தார்.
பார்வைக் குறைபாடு தவிர்ந்த ஏனைய சிறப்புத் தேவைக்குரிய அனைத்து மாணவர்களுக்கான கல்வி வசதிமூன்று ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இடம்பெற்றுவருகின்றன. சங்கானை கோட்டத்திற்கு உட்பட்ட சிறப்புத் தேவை மாணவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தலாம் என்றார் சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி. (வ-50)

# தவறிய பணம் கண்டெடுப்பு

சாவகச்சேரி ஓக. 27
சாவகச்சேரி நீதி மன்ற வளாகத்திற்கு முன்பாக ஒரு தொகுதி பணம் கடந்த வாரம் கண்டெடுக்கப்பட்டது. இதனைத் தவற விட்டவர்கள் தொடர்பு கொள்ளுமாறு நீதி மன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (வ- 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய் கடலோரத்தில் தடுப்பணை அமைக்கத் தென்பகுதி மீனவர் இடையூறு

முல்லைத்தீவு,ஓக. 27

25 மீனவ குடும்பங்களுக்கு வீடுகளும், அவர்களின் பாவனைக்கான மலசல கூடங்களையும் அமைத்து வழங்கினால் மட்டுமே, கொக்கிளாய் கடலோரத்தில் உவர் நீர்த் தடுப்பணை அமைப்பதற்கு அனுமதிப்போம்.

இவ்வாறு அடம்பிடிக்கின்றனர் கொக்கிளாயில் தங்கியிருந்து தொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள்.

கொக்கிளாய் கரையோரத்தில் கிராமங்களுக்குள் கடல்நீர் உள் நுழைவதனால் கிராமத்தின் நிலம் உவர் அடைவதோடு, குடிநீர் பாதிப்பும் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அந்தப் பகுதியில் உவர் நீர்த் தடுப்பணை கட்டுவதற்கான நிதி இடர் முகாமைத்துவ அமைச்சினால் ஒதுக்கப்பட்டது.

இந்த நிதி மூலம் அந்தப் பகுதியில் தடுப்பணை அமைக்க பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டவேளையில், அங்கு தென்னிலங்கையில் இருந்து வந்து தங்கி நின்று மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மேற்படி அணையைக் கட்டவிடாது இடையூறு விளைவித்தனர்.

இவ்வாறு கட்டுமானத்திற்கு இடையூறு விளைவித்த மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அந்தப் பணியை முன்னெடுக்க முடியுமா என ஆராய இடர் முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயலகம் உள்ளிட்ட திணைக்களங்கள் இணைந்து கொக்கிளாய் மீனவர்களுடன் நேற்றுமுன்தினம் சந்திப்பை மேற்கொண்டன.

எமது தொழிலுக்குத் தற்போதைய பிரதேச செயலாளர் ஒத்துழைப்பதில்லை. எம்மால் விடுக்கப்பட்ட வீட்டுத்திட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளை அவர் சட்டங்களைக் காரணம் காட்டி நிராகரிக்கின்றார். அவற்றை நிறைவேற்றித் தரும் சந்தர்ப்பத்திலேயே உவர் நீர் தடுப்பு அணை அமைக்க அனுமதிப்போம் என இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட தென்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு தென்பகுதி மீனவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் கரை துறைப்பற்று பிரதேச செயலாளர் குணபாலன் தெரிவித்ததாவது:

கொக்கிளாயில் தொழில் நிமித்தம் தங்கியுள்ள மீனவர்கள் வாடி அமைக்க அனுமதி கோரினர். அவ்வாறு அவர்கள் கோரிய இடம், தமக்குச் சொந்தமானது என அதன் உரிமையாளர் ஆவணத்துடன் கோருகின்றார். இதன் காரணத்தினால் வாடி அனுமதி வழங்கப்படவில்லை.

அதேபோன்று வீட்டுத்திட்டம் மாவட்டத்தில் வதியும் சொந்தக் காணியுடைய குடும்பங்களுக்கே வழங்க முடியும் . அவ்வாறான சந்தர்ப்பத்தில் நிலமே அற்ற, தொழில் நிமித்தம் தங்கியுள்ளவர்களுக்கு எவ்வாறு வழங்குவது - என்றார்.

இதேவேளை உவர் நீர் தடுப்பணை கட்டுவதற்கு தென்னிலங்கை மீனவர்கள் இடையூறு விளைவிப்பதனால், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(வ -101,ரி7)

# இளம் கர்ப்பிணிப் பெண் திருமலையில் கொலை

இளம் கர்ப்பிணிப் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்ட நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் திருகோணமலையில் இடம் பெற்றது. இரத்தின புரி, கலவான பகுதியைச் சேர்ந்த அனுசிகா (வயது - 19) என்ற இளம் கர்ப்பிணிப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டார்.

அம்பலாங்கொட பகுதியைச் சேர்ந்த சிமெந்து தொழிற்சாலையில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்துவரும் நபரைத் திருமணம் செய்து திருகோணமலையில் வாடகை வீடொன்றில் வாழ்ந்துவந்துள்ள நிலையிலேயே அவர் கொலை செய்யப்பட்டார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்ததாகத் திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் கர்ப்பிணி பெண்ணின் சடலம், அவர் வசித்த வீட்டில் துணிகளால் மூடப்பட்டிருந்தது எனவும், இக்கொலை எப்போது செய்யப்பட்டது? எவ்வாறு செய்யப்பட்டது? என்பது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. (வ-21)

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை .(ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

தகைமைகள்:- விற்பனை உதவியாளர்.

- க.பொ.த (சாதாரணம்) கற்றிருத்தல் வேண்டும்..
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- வயதெல்லை 19-45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை,அடையாள அட்டை போட்டோப்பிரதி ஆகியவற்றை இணைத்து 10/09/2016 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

பிற்குறிப்பு. மாத சம்பளமாக ரூ.25000 வழங்கப்படும்.

[illegible]

## தேவை

களஞ்சியசாலை உபயோகத்திற்கு விலாசமான வீடு அல்லது கட்டடம் மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் தேவை.

தொடர்பு.076-8219414

## வேலையாள் தேவை

தச்சு வேலை.MDF,கிச்சன் பான்றி கபேட் வேலை தெரிந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு.076-8219414

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி Dialog Company இற்கு முன்பாக அமைந்துள்ள 110 அடி நீளமும் 19 அடி அகலமும் கொண்ட மாடிக்கடை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு. 0771962465

## சாரதி தேவை

பலாலி வீதி, திருநெல்வேலியில் இயங்கிவரும் கருணாலயம் அன்னை கிருஷ்ணாபாய் சிறுவர் இல்லத்திற்கு 40 தொடக்கம் 60 வயதிற்குட்பட்ட பொறுப்பான. சாரதி அனுமதிப்பத்திரம் உடைய முச்சக்கர வாகன சாரதி உடன் தேவை.

தொடர்பு: 021 222 8490

## விற்பனைக்கு

ஒரு வருட யமுனா பாறி கிடாயும், சினையுடன் யமுனாபாறி மறி ஆடும், ஒரு வருட நாம்பன் கன்றும், பொக்கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், வெள்ளடியன், மணிதாரா, சில்க்கி, முயல்

தொடர்பு: மயூரன் பாம் சென்ரர், .
நீர்வேலி கந்தசாமி கோயில் பின் வீதி.
077 015 8690

## உதவியாளர் தேவை

சாவகச்சேரியில் 4வயதுடைய பிள்ளையைப் பகல் நேரத்தில் (7.30 - 3.00 வரை) பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை.

076 845 7042

## சிறுவர் இல்ல மேற்பார்வையாளர்கள் தேவை

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கு பெண் மேற் பார்வையாளர்கள் (Matron/ Home Mothers) தேவைப்படுகின்றனர். க.பொ.த உயர்தரம் கல்வி கற்றவராகவும் 30வயது-60வயதுக்கு இடைப்பட்டவராகவும் இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும் இல்லப்பிள்ளைகளின் பராமரிப்பு,உளவியல் சம்பந்தமான பயிற்சி நெறிகள்,பின்பற்றியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரி சுயவிவரக்கோவையுடன் விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய கடைசித் தேதி

**04.09.2016**

அனுப்பவேண்டிய முகவரி:-தலைவர்,துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.

கடித உறையின் இடதுபக்க மூலையில் இல்லமேற்பார்வையாளர் எனக்குறிப்பிட வேண்டும்.

தலைவர்
துர்காபுரம் மகளிர் இல்லம்,தெல்லிப்பழை.










## கேள்வி அறிவித்தல்

வேள்ட் விஷன் லங்காநிறுவனத்தின் நிதி– 2016
வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், வடமாகாணம்

| திட்டத்தின் பெயர் | ஒப்பந்த இல |
|---|---|
| 1. Reinstatement of Trench cut for laying water Supplying of Resettlement Village (Nelliyan – Ponnalai WaterSchme) | NP/14/41(17)/2/W.V -01/2016 |

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், தகுதிவாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப பட்ட வாறுகட்டுமானவேலைகளுக்காககோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடிகட்டடம் மற்றும் நிலக்கீழ் நீர்க்குழாய் பொருத்துதல் வேலைக்கான பொருத்தமான தரத்தில் இக்ராட் (ICTAD) பதிவுமேற கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : **0212250144**, மின்னஞ்சல் : valiwestps@gmail.com)) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணிவரை 09.09.2016 வரையிலானகாலப்பகுதியில் கேள்வி ஆவண்ங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாள்ர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம் எனும் இடத்திலிருந்து27.08.2016ம் திகதியிலிருந்து 09.09..2016 ஆம் திகதி வரைகாலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஒன்றை "செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம்" எனும் முகவரிகுபதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கலாம் அல்லதுஅலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடவேண்டும். மறு பிரதியை "பிரா / உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் ,யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் 09.09.2016ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்து ஏழு–24.11.2016) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (மில்.ரு) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41 (17)/2/ W.V - 01/2016 | Reinstatement of Trench cut for laying water Supplyingof Resettlement Village (Nelliyan – Ponnalai Water Schme) | 5.37 | 03 மாதங்கள் | C 7, அதற்கு மேல் (கட்டடம் மற்றும் நிலக்கீழ் நீர்க் குழாய் பொருத்துதல்) | 54,000.00 | 21.12.2016 |

10. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக் கட்டடத்தில் 02.09.2016 அன்று மாலை 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்,
வடமாகாணம்.
27.08.2016

(C 25062)(10'18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல், தளபாட காட்சி அறைக்கு

01. Electrician - Rs.18000/=
02. Showroom Marketing Sales & Executives (Girls)- Rs.18000/=
03. Showroom boys -Rs.18000/=
04 Heavy Vehicle Drivers - Rs 25000/=
   - 25 Days Work for Month
   - Time 9.00 AM 8.00 PM

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

கிங்ஸ் எலக்ரோனிக்ஸ், வேம்படி சந்தி அருகில்
12, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஜ.3985) (13.) 021 454 6699

## வேலையாள்கள் தேவை

நுணாவில் சந்தி, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சுஜித் என்ரர்பிறைசஸ் நிறுவனத்திற்கு

- அலுவலக எழுதுவினைஞர் (clerk)
- பணம் வசூலிப்பவர்
- விற்பனைப் பிரதிநிதி மற்றும் பட்டா வாகனம் வாடகைக்கும் தேவை.(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதி, உணவு, இலவசம். சிங்களம் பேசத் தெரிந்திருத்தல் நல்லது)

(6824)(13.18)

021 227 0586, 076 850 4007

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
## விலைமனு கோரலுக்கான அழைப்பு
## வாகன சுத்திகரிப்பு சேவை - 2016/2017

யாழ்ப்பாணம் பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமைவாய்ந்த வாகன சுத்திகரிப்பு நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

1. யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவை

| பெறுகை இல ( 1 ) | வாகன விவரம் ( 2 ) |
|---|---|
| RDHS/VS/2015/01 | பாரஊர்தி (7), பேருந்து (4), நோயாளர் காவுவண்டி (31), சிற்றூர்தி (6), பிக்கப் (18), முச்சக்கரவண்டி (07), உந்துருளி (2),ஜீப் (3), கார் (01) |

- வாகன சுத்திகரிப்பு சேவைக்கு மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர பணம் ரூபா 1,000.00 உம்
- உத்தரவாத முறி ரூபா 10,000/= உம் செலுத்தப்படவேண்டும்.

1. விலைக்கேள்விதாரர் மேற்படி சேவைகளுக்கான ஒரு தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினை அலுவலக நேரங்களில் இல.572/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம் - 021 222 2278/6253 Ext 20) மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினைப் பூர்த்திசெய்து மேற்காட்டிய குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 29.08.2016 தொடக்கம் 09.09.2016 வரையான காலப்பகுதியில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கேள்விகள் 13.09.2016 ஆம் திகதி 10 மணிக்கு முன்னதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேடியாகவோ கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக் கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி க. நந்தகுமாரன்**
**தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.** (சி.25056) (13.18)

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of Staff Canteen | 500.00 | 60,000.00 | 91 | 2.89 | C 8 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 29.08.2016 up to 08.09.2016 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 09.09.2016, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
27/08/2016.
(C 25060)(10.18)

## சாயி சங்கீதா




சகல விதமான இசைக்கருவிகள், உதிரிப்பாகங்கள் உண்டு.
U.G. 53, பீப்பல்ஸ் பார்க், கேஸ் வேர்க் வீதி, கொழும்பு 11.
தொலைபேசி: 0112 384222 / 0727 834 834
உங்கள் மனங்கவரும் சங்கீதக் கருவிகளை யாழ் நகரிலும் பெறலாம்.

## வைரவிழா

யாழ்ப்பாணம், ஓக.27

தெல்லிப்பழை கிழக்கு திருமகள் சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சனசமூக நிலைய முற்றத்தில் நடைபெறவுள்ளது என நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ற-ரி)

## மணமகள்கள் தேவை

ஜேர்மனி, பிரான்ஸ், சுவீடன் போன்ற நாடுகளில் வசிக்கும் மணமகன்களுக்கு மணமகள்கள் தேவை.

077 835 5485

## வேலையாள்கள் தேவை

தையல் வேலை தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை-சாவகச்சேரி.

077 444 0349

## ஆங்கில வகுப்புகள்

O/L, 2016, Dec மாணவர்களுக்கு ஆங்கில இலக்கணம், வினாவிடை வகுப்புகள். யாழ்ப்பாணம், சங்கானை.
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
தொடர்பு: 077 675 1649

## புத்தகங்கள் விற்பனைக்குண்டு

புத்தகங்கள், பழையசஞ்சிகைகள் என்பன விற்பனைக்கு உண்டு. 6 - 11 கணித, விஞ்ஞான, ஆங்கில, A/L பௌதிகவியல், இணைந்த கணிதம், சமய மற்றும் பொதுவான புத்தகங்கள் சனி, ஞாயிறு மட்டும் தொடர்பு. 8 - 4வரை, தமிழ் / ஆங்கில மொழிகளில்.

077 242 3400
(J.4097) (14,17,18)

## தேவை

JCB வாகனம் இயக்கக்கூடிய சாரதி உடனடியாகத் தேவை. (J.4098) (14,17,18)

077 190 3827

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
## களஞ்சிய பாவனைக்கு வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் களஞ்சியப் பாவனைக்கு யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அல்லது யாழ் நகருக்கு அண்மிய பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது. இதனை வழங்க விரும்புபவர்கள் 09.09.2016 ஆம் திகதிக்குள் தொடர்புகொள்ளவும்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்**
**இல.572 / 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி: இலக்கம்: 021 222 6253 (சி.25057) (13.18)

## கைதடி தெற்கு மின்னொளி சிக்கன கடன்வழங்கும் கூட்டுறவுச் சங்கம்

### வெள்ளிவிழா

**இடம் :-**
**கைதடி தெற்கு சனசமூக நிலைய கலையரங்கம்**
**காலம் :-**
**27.08.2016 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி**
**தலைவர்**
**திரு.வே.சின்னத்தம்பி**
**முதன்மை விருந்தினர்கள்**
**திரு.கேசவன் - சயந்தன் (வடமாகாண சபை உறுப்பினர்)**
**திரு.பொன்.மோகன்**
**(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)**
**கௌரவிப்பு -**
**25 வருட காலம் சேவையாற்றிய தலைவர், சங்க மூத்த உறுப்பினர்கள், சேமிப்புக் கூடிய உறுப்பினர்கள்.**
**பல்கலைக்கழக, கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர் கலை நிகழ்வும் இடம்பெறும்.** (See/4067)(13.18)

**தலைவர் - கைதடி தெற்கு மின்னொளி சி.க.வ.கூ.சங்கம்**


## P.P.T Express இன் மற்றும் ஒரு விரிவாக்க சேவை





- பகல் இரவு சேவையாக விஸ்தரிந்துள்ளது
- காலை 6.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து யாழ் நகர் வந்து, காலை 7.30 மணிக்கு கொழும்பு நோக்கிப் பயணிக்கும்.
- கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை செல்லும்.
- காங்கேசன்துறையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் ஊடாக கொழும்பு நோக்கிப் பயணிக்கும்.
- வழமைபோன்று இரவு சேவைகளும் நடைபெறுகின்றன.
  மேலும் இலங்கையின் முதற்தர துரித வெளிநாட்டு பொதிகள் சேவைகளூடாக உங்கள் உறவுகளின் இல்லங்களுக்கு பொதிகள் துரிதமாக கையளிக்கப்படும்.
- யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் பொதிகள் சேவை நடைபெறுகின்றன.



இலங்கையில் சுற்றுலா பயணத்துக்கு உரிய பஸ்சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

email : info@ppttravel.com web : www.ppttravel.com

Colombo - 06
#296 A1, Galle Road, Wellawatte, Colombo - 06.
076 6036204 / 011 2364999. Fax: 011 2361144

Colombo - 12
#182 Central Road, Colombo-12,
077 5755175 / 011 4375790

Jaffna
#183, K.K.S. Road, Jaffna.
077 5731318 / 0214923240

Point Pedro
Arasadi Lane, Point Pedro.
021 4923724 / 077 573 6003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 27

சைவத்தமிழ் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான அவசியமானதும் அவசரமானதுமான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை கொக்குவில் சைவமகாசபை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

எமது சிவபூமி சைவ ஆலயங்களின் வளாகங்களிலும் சைவர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பகுதிகளில் வேற்றுமத சின்னங்களும் வழிபாட்டு தலங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. எமது புனித மரபுரிமைகளையும் பண்பாட்டு அடையாளங்களையும் பாதுகாப்பது தொடர்பாகவும் இது தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடுவதுடன் நல்லூர் திருவிழா நாள்களில் மக்களை தெளிவுபடுத்தும் செயற்திட்டங்களை சைவ மகாசபையும் ஏனைய சைவ அமைப்புக்களும் இணைந்து முன்னெடுக்க உள்ளன. இதில் கலந்து கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ற-ரி3)

## வியாபார உரிமம் பெறாதோர் மீது வழக்குத் தாக்கல்

கிளிநொச்சி, ஓக.27

இந்த ஆண்டுக்கான வியாபார உரிமம் பெறாத 30 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் குறித்த நபர்கள் இனங்காணப்பட்டனர்.

வியாபார உரிமம் பெறாதவர்கள் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச சபைச் செயாலாளர் குறிப்பிட்டார். (ற-ரி3)

## கந்தப்பசேகரம் வீதி விரைவில் சீரமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ். நகரிலுள்ள கந்தப்பசேகரம் வீதி விரைவில் தாரால் சீரமைக்கப்படும் என்று யாழ். மாநகர ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

முனீஸ்வரன் வீதிக்கு குறுக்கே செல்லும் இந்த வீதி கடந்த சில வருடங்களாக சீரமைப்பு இன்றிய நிலையில் உள்ளது. இந்த வீதியும் வீதிக்கு பக்கமாகச்செல்லும் வடிகால்களும் புனரமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ற-17)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயக் காணிகளை மீளத் தருமாறு நிந்தவூர் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, ஓக. 27

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கிரான் கோமாரி பகுதியில் தாம் காடு வெட்டி தோட்டங்களாக்கிய காணிகளை மீளப் பெற்றுத் தர வேண்டும் என்று கோரி நிந்தவூரில் விவசாயிகள் நேற்றுப் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

கிரான் கோமாரி விவசாயிகள் அமைப்பின் ஏற்பாட்டில் நிந்தவூர் பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கிரான் கோமாரி விவசாயிகள் அமைப்பின் தலைவர் ஐ.எல்.அகமட்லெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்தொகையான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

1957 தொடக்கம் 1960 ஆண்டுகாலப் பகுதியில் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் எம்.எம்.முஸ்தபாவின் முயற்சியால் நிந்தவூர் மக்களுக்காக கிரான் கோர் மாரிகண்டத்தில் தலா 5 ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டன.

காணி உத்தரவுப்பத்திரம் மூலம் வழங்கப்பட்ட இந்தக் காணிகளில் நிந்தவூர் விவசாயிகள் காடுகளை வெட்டி செப்பனிட்டு விவசாயம் செய்தனர். நாட்டில் நிலவிய சூழ் நிலை காரணமாக விவசாயிகள் தமது காணி களுக்குள் சென்று விவசாய நடவடிக்கை களைத் தொடர முடியாத நிலைமை யேற்பட்டது.

நாட்டில் சுமுக அமைதி நிலை தோன்றியதும் தமது காணிகளுக்குள் உரிமையாளர் களான விவசாயிகள் சென்றபோது வனத் திணைக் களத்தினரும், இராணுவத்தினரும் காணிகளுக்குள் செல்லவிடாது தடைவிதித் தனர்.



### எதிர்ப்பு

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அம்பாறை மாவட்ட அரச அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் பலருக்கும் மனுக்களையும், நேரடி முறைப்பாடுகளையும் கிரான் கோமாரி விவசாயிகள் சங்கம் செய்தது என்று தெரிவிக்கப்பட்டது.

பொத்துவில் பிரதேச செயலகத்தில் கடந்த 29.10.2015 அன்று நடைபெற்ற இது தொடர்பான கூட்டத்தின்போது இந்தக் காணிக்குப் பதிலாக வேறு இடத்தில் காணி தரப்படும் என்று மாவட்ட அரச அதிபரால் உறுதியளிக்கப்பட்டும் எதுவும் நடக்கவில்லை என்று விவசாயிகள் அமைப்பின் செயலாளர் க.உமர் தெரிவித்தார்.

### நியாயமற்ற செயல்

கடந்த மே மாதம் பாதிக்கப்பட்ட 177 விவசாயிகள் சார்பில் எமது அமைப்பு முதலாவது ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. மாவட்டச் செயலாளரின் உத்தரவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரவும் தமது நியாயமான கோரிக்கையை நிறைவேற்றவும் குழு ஒன்று நியமிக்கப்பட்டு கடந்த 9ஆம் திகதி உரிய இடத்தில் அந்தக் குழு விசாரணை மேற்கொண்டது என்று செயலாளர் உமர் தெரிவித்தார்.

ஆனால் பொத்துவில் பிரதேச செயலாளர் அங்கு குறித்த காணி இல்லை எனவும் காணியின் வரைபடம் உள்ளதா எனக் கேட்டு குழப்புகின்றார். நியாயமற்றமுறையில் நடந்து கொள்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### ஆர்ப்பாட்டம்

தமக்கு நியாயம் வேண்டியும், தமது காணிகளை மீளப் பெற்றுத்தருமாறு கோரியும் கிரான் கோமாரி விவசாயிகள் அமைப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. நிந்தவூர் பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்ற விவசாயிகளின் இந்த ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீனும் இணைந்திருந்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பொத்துவில் பிரதேச செயலாளரே பிரதேச வாதம் பாராதே, பயங்கரவாதிகளால் விரட்டப்பட்டோம் அதிகாரிகளால் அடக்கப்படுகின்றோம், காணி உறுதிப்பத்திரமுண்டு வரைபடம் கேட்டு குழப்பாதே, அம்பாறை மாவட்டச் செயலரே நீதியை வழங்குங்கள், போடாதே, போடாதே முட்டுக்கட்டை போடாதே, வரைபடத்தைக் கோரி, உண்மையான அனுமதிப் பத்திரத்தை ஏற்க மறுப்பதேன் என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

தமது இந்தக் காணிப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டுத் தீர்வு வழங்குமாறு அம்பாறை மாவட்டச் செயலரைக் கோரும் மனுவை கிரான்கோமாரி விவசாயிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள் நிந்தவூர் பிரதேச செயலாளர் றிபா உம்மா ஜலீலிடம் கையளித்தனர். (ற-30)

## பருத்தித்துறை - அறிவியல் நகர் பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.27

பயணிகளின்வேண்டுகோளுக்கு இணங்க பருத்தித்துறையில் இருந்து கிளிநொச்சி அறிவியல் நகருக்கான பஸ் சேவை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

அரச, அரசசார்பற்ற ஊழியர்களதும், ஆசிரியர்களதும், மாணவர்களதும் நலன்கருதி பஸ் சேவை நடத்துமாறு கிளிநொச்சி மாவட்ட செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதையடுத்து பருத்தித்துறையில் இருந்து கிளிநொச்சி அறிவியல் நகருக்கு காலை 6.30 மணிக்கும் அறிவியல் நகரிலிருந்து பருத்தித்துறைக்கு மாலை 4.20 மணிக்கும் பஸ் சேவை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி3)

## வடமராட்சி கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் துரித கதியில்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டத்தில் 17 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் வேலைத் திட்டங்கள் யாவும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் குறைந்தது 36 வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன. அவை செப்ரெம்பர் மாதத்துக்குள் முடிவுறுத்தப்படும்.

பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளிகள் அமைத்தல், மயானங்கள் விளையாட்டு மைதானங்கள், புனரமைத்தல் உட்பட மற்றும் முக்கிய வேலைத்திட்டங்கள் இந்தப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேலைத்திட்டங்களை பிரதேச செயலகம் நேரடியாக கண்காணித்து வருகின்றது என்று தெரி விக்கப்பட்டது. (ற-17)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி
றோஸ்மேரி (கிளி) மரியதாசன்



தோற்றம்
10.10.1947

மறைவு
27.07.2016

கடந்த 27.07.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த திருமதி றோஸ்மேரி மரியதாசனின் பிரிவை அறிந்து நேரில் வந்து துயரம் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இன்று (27.08.2016) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலியும், அவரது வீட்டில் மதியபோசன விருந்தும் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.04, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 971 0525

(58366)(45.3.7)

## தெய்வீக நிகழ்வுகள்

நல்லூர் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் என்பன நடைபெறுகின்றன.

இன்று நடைபெறவுள்ள 20 ஆம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் முருக அவதாரம் எனும் தலைப் பில் இந்து அபி விருத்தி உத்தி யோ கத்தர் திரு மதி எம்.அனத்த லட்சுமியின் தெய்வீக சொற்பொழிவுமாலை 5மணிமுதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும்.

நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில்துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையில் தெய் வீக இசையரங்கம் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.நல்லை ஆதீன மண்டபத்தில் மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை, கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசைச் சங்கமம் இரவு 7 மணிமுதல் 8 மணிவரையும் நடைபெறும். (ற-ரி)

31 ஆம் நாள் விழிநீர் சொரியும் நினைவுகள்

திருமதி
யேசுதாசன் அஞ்சலா
(திரு இருதய சபைத் தலைவி - யாழ்.மரியன்னை பேராலயம்)



மலர்வு
02.10.1946

உதிர்வு
29.07.2016

கனிவான இதயத்துடனும் புன்னகை சிந்தும் முகத்துடனும்
இறைபணிக்குள் வாழ்வை ஒப்படைத்து
நேரிய வாழ்வு வாழ்ந்தாயம்மா
மண்ணுலகில் உன் கடமை முடிந்ததென்று
விண்ணுலகம் துயில் கொண்டாயம்மா
கலங்கித் தவிக்கும் உறவுகளுக்கு
யாரம்மா இங்கே ஆறுதல் கூறமுடியும்
எத்தனை ஜென்மங்கள் ஆனாலும்
இறப்பிலும் உங்கள் உயிர் எங்களுடன்தான் வாழுமம்மா

102, மவுண்கார்மேல் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் இராணுவத்தால் மூன்று கட்டடங்கள் விடுவிப்பு

கொழும்பு, ஓக. 27

வவுனியாவில் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருந்த மூன்று முக்கிய கட்டடங்கள் நேற்றுமுன்தினம் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

பம்பைமடு ப.நோ.கூ.சங்கத்துக்குச் சொந்தமான கட்டடம், பம்பைமடு பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடம், வவுனியா கலாசார மண்டபம் என்பனவே கையளிக்கப்பட்டன.

இவை 1990ஆம் ஆண்டு போர் ஆரம்பித்த பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவை படைத்தரப்பால் கையகப்படுத்தப்பட்டன. அவற்றை மீளக் கையளிக்குமாறு உள்ளூராட்சிச் சபைகளும், ப.நோ.கூ.சங்கமும் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தபோதும் படைத்தரப்பு கட்டடங்களைத் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

கடந்த சனிக்கிழமை வவுனியா பாதுகாப்புத் தலைமையகத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹெட்டியாராச்சி தலைமையில் கலந்துரையாடல் நடந்தது. வவுனியாவில் படைத்தரப்பினரின் வசமுள்ள கட்டடங்கள், காணிகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

மேற்குறித்த கட்டடங்களையும், செட்டிக்குளம் மெனிக்பாம் ஆயிரம் ஏக்கர் நிலத்தையும் விடுவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. கட்டடங்கள் கையளிக்கப்பட்டபோதும் மெனிக்பாம் காணி இன்னமும் விடுவிக்கப்படவில்லை. காணி விரைவில் விடுவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-10)

# காலம் பிந்திய வரி அதிகரிப்பால் யாழ். விவசாயிகளுக்குப் பாதிப்பு

பெரிய வெங்காய இறக்குமதி வரியை காலம் தாழ்த்தி அரசு அதிகரித்துள்ளது. இதனால் அதன் அனுகூலங்களை யாழ். மாவட்ட விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியாமல் போய்விட்டது. இவ்வாறு விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

அரசு பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரியை கடந்த வாரம் அதிகரித்தது. இதன் மூலம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தின் விலையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சிறுபோக வெங்காயத்தில் பெரும்பகுதி அறுவடை செய்யப்பட்டு சந்தைப் படுத்தப்பட்ட பின்னரே பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

வரி அதிகரிப்புக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தின் சந்தைவிலை ஒரு கிலோ 45 தொடக்கம் 55 ரூபா வரையில் இருந்தது. தம் புள்ள மத்திய சந்தை, கொழும்பு சந்தை ஆகியவற்றில் வெங்காயத்துக்கான கேள்வி மிகக் குறைவாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்ட வெங்காய மூடைகள் சில தினங்களுக்கு களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னரே விற்பனை செய்யப்பட்டது. மேலதிகமான செலவுகளையும் விவசாயிகள் எதிர்கொள்ள வேண்டி இருந்தது.

சிறுபோக வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் எதிர்பார்த்த வருமானத்தைப் பெறமுடியாமல் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானார்கள்.

தற்போது பெரிய வெங்காயத்தின் இறக்குமதிவரி அதிகரிப்பு செய்யப்பட்டிருப்பது உள்ளூர் உற்பத்தியின் விற்பனை விலையிலும் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனினும் அதனை உரிய முறையில் பெற்றுக் கொள்ள முடியாமல் போய் விட்டது என்று சுட்டிக்காட்டும் யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்காலத்தில் அரசு யாழ். மாவட்ட விவசாயிகளின் நலனையும் கருத்தில்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். (ம-11)

## முதிரைக் குற்றிகள் கடத்தியவருக்கு ரூ. 50, 000 தண்டம்

டிப்பர் வாகனத்தினுள் கருங்கற்களுடன் முதிரை மரக் குற்றிகளை மறைத்து ஏற்றி வந்த சாரதிக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இலங்கை மரக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து, அவர்கள் கொடிகாமம் பொலிஸாருடன் இணைந்து கொடிகாமம் பகுதியில் வைத்து டிப்பர் வாகனத்தைச் சோதனையிட்டனர். அதற்குள் முதிரை மரக்குற்றிகள் காணப்பட்டுள்ளன. மரக்குற்றிகள் கடத்திய டிப்பர் வாகனச் சாரதியைக் கொடிகாமம் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தினர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை டிப்பர் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

இதேவேளை, பயணிகளை ஏற்றிக் கொண்டு விபத்தை ஏற்படுத்தும் வகையில் வேகமாக பஸ்ஸைச் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டு இ.போ.ச பஸ் சாரதி மீது கொடிகாமம் பொலிஸாரால் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரித்த பதில் நீதிவான், இ.போ.ச. பஸ் சாரதியை எச்சரிக்கை செய்து 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

மேலும் மதுபோதையில் சாரதிய அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு 12 ஆயிரம் ரூபாவும், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 10 ஆயிரம் ரூபாவும், மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாமலும் மேலதிகமாக ஆள்களை ஏற்றியும், சென்ற சாரதிக்கு 9 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி நீதிவான் மன்றால் தண்டம் விதிக்கப்பட்டது. (வ- 9)



வல்வெட்டித்துறை கடற்கரை வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ இனந்தெரியாதோரால் நேற்றுமுன்தினம் தீக்கிரையாக்கப்பட்டது என்று வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டது. அது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,26)

# சமாதானம் வேண்டிப் பேரணி

## நல்லூரில் இருந்து அம்பாந்தோட்டைக்கு

யாழ்ப்பாணம், ஓக. 27

இனி எந்தவொரு சூழ்நிலையிலும் மீண்டுமொரு போர் ஏற்படாது நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்றுக்காலை நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து அமைதி நடைபாதைப்பேரணி ஆரம்பமானது. பேரணி 14 நாள்களில் அம்பாந்தோட்டையைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் தேங்காய் உடைத்து ஆரம்பமான அமைதிப் பேரணி கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், புத்தளம், சிலாபம், வென்னப்புவ, நீர்கொழும்பு, மொரட்டுவ, களுத்துறை, காலி, மாத்தறை, பெலிபத்தை ஊடாக அம்பாந்தோட்டையை பதின்நான்கு நாள்களில் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

"இலங்கையில் இருக்கின்ற சகல மக்களும் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். 30 வருட போர் காரணமாக சகல மக்களும் துன்பங்களுடன் வாழ்கிறார்கள். தொடர்ந்து எங்கள் மக்கள் நிம்மதியாக வாழ தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சேர்ந்து மனித உரிமைக் குழுவுடன் இணைந்து இனி எந்தவொரு சூழ்நிலையிலும் மீண்டுமொரு போர் ஏற்படாவண்ணம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிறுவ வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தப் பேரணியை ஒழுங்குபடுத்தியுள்ளோம்" - என மனித உரிமைக் குழு தேசிய அமைப்பாளர் தங்கபாலன் தெரிவித்தார்.

அமைதிப் பேரணியில் பௌத்த குருமார்கள், சமூக ஆர்வலர்கள், மனிதஉரிமைச் செயற்பாட்டார்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். எனினும் அந்தப் பேரணியில் தமிழ் வாசகங்கள் எதுவும் காணப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ம-4,ரி7,9)

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபரின் நியமனம் சரியானதே

## வடக்கு கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் நியமனம் உரிய முறையில் இடம்பெறவில்லை என்று மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ள நிலையில் நியமனம் சரியான முறையிலேயே வழங்கப்பட்டது என்று தெரிவித்தார் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.

வடக்கு மாகாண சபையின் 60 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பான பிரச்சினையை முன்வைத்தார்.

"பல பாடசாலைகளில் அதிபர் நியமனம் சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் நியமனத்தில் வெற்றிடத்தை நிரப்புவதற்காக இந்த வருடம் மே மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. வடக்கு மாகாண கல்வி அமைச்சு விண்ணப்பங்கள் கோரும்போது சில நிபந்தனைகளைக் குறிப்பிட்டிருந்தது. விண்ணபதாரிகளில் அந்த வலயத்தில் கடமையாற்றுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது. அதற்கு முரணாகவே தற்போது நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதிபர் நியமனம் தொடர்பில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தது. தற்போது இந்த விடயம் சர்சைக்குரியதாகியுள்ளது" - என்று அவர் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சியின் மற்றுமொரு உறுப்பினர் க.சர்வேஸ்வரன் தெரிவித்ததாவது:

எமது மாகாணம் கல்வித் தரத்தில் 9 ஆவது இடத்தில் உள்ளது. எங்களிடம் எந்தளவு தகுதியான அதிபர்கள், ஆசிரியர்களை வைத்திருக்கின்றோம் என்பது முக்கியமானது. ஆசிரிய ஆளணி போதுமானளவு இருக்கின்றது. ஆனால் ஆங் கிலம், கணிதம், விஞ்ஞான ஆசிரியர்கள் போதுமானதாக இல்லை. அதிபர் ஒருவருக்கு தகுதி முக்கியமா அல்லது பழைய மாணவராக இருந்தமை முக்கியமா? அந்த ஊரைச் சேர்ந்தவரா என்பது முக்கியமா? என்பதை நாம் பார்க்க வேண்டும். உயர்தர வகுப்புக்கள் வரையில் உள்ள பாடசாலைகளில் அதிபர்களை நியமிக்கும் போது தகுதியானவர்களை நியமிப்பதே முக்கியமானது - என்றார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்ததாவது:

கோண்டாவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தேவரையாளி இந்து கல்லூரி ஆகியவற்றுக்கு பத்திரிகைகள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இங்கே குறிப்பிடப்பட்ட பாடசாலையின் இரண்டு அதிபர்களும் ஒரே தகுதியுடையவர்கள் என்று தெரிவித்திருந்தார்கள். ஆனால் அவ்வாறு இல்லை. தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டவர் எம்.ஏ. பட்டத்தை மேலதிகமாகக் கொண்டுள்ளார். இவர்களுடைய நேர்முகத் தேர்வு உயர் அதிகாரிகள் மூலம் நடத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டது. அதில் அதிக புள்ளி பெற்றவரே அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார் - என்றார். (ம-5-ரி1-ரி7)

# நேர்முகத் தேர்வு இடைநிறுத்தம்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபையின் தலைமை அலுவலகத்தில் நடத்தவிருந்த அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வது தொடர்பான நேர்முகத் தேர்வு மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நேர்முகத் தேர்வை இடைநிறுத்துமாறு அறிவித்துள்ளதை அடுத்து நேர்முகத் தேர்வு மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு வேலை வாய்ப்புக்கு செல்வோரின் தொகையில் குறைவு

## யாழ். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ். மாவட்டத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்குச் செல்வோரின் தொகை குறைந்துள்ளது. இந்த வருடம் இன்றைய திகதி வரை 800 பேர் வரையானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள்.

இவ்வாறு யாழ். மாவட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ். மாவட்டத்தில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்கு செல்லும் இளைஞர்களின் தொகை கடந்த வருடத்தை விட இந்த வருடம் குறைவாக உள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு முன்னர் வேலைவாய்ப்புப்பணியகத்தில் இரண்டு நாள் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள வேண்டும். இந்தப் பயிற்சி வகுப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு சான்றிதழ்களைப் பெற்றவர்கள் சுலபமாக வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது.

இந்த ஆண்டு இன்றைய திகதி வரையான காலப்பகுதியில் 800 ஆண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளார்கள்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை தொழிலுக்காக வெளிநாடு செல்லும் பெண்களின் எண்ணிக்கை வெகு குறைவாகவே உள்ளது. இந்த வருடம் ஒரு பெண்கூட அவ்வாறு செல்லவில்லை.

வெளிநாடு செல்லும் நபர்களிடம் இருந்து முறைப்பாடுகளும் வரும் சந்தாப்பங்களும் உண்டு. இந்த வருடம் 8 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தீர்மானிக்கும் சம்பளம் வேறு, கொடுக்கும் சம்பளம் வேறு மற்றும் தீர்மானிக்கப்பட்ட வேலை வேறு, கொடுக்கும் வேலை என்ற ரீதியிலேயே முறைப்பாடுகள் வருகின்றன. இன்னொரு வகையில் வெளிநாடு சென்றவர்களின் வீட்டுக்காரர்கள் வந்து அவர்களை மீளவும் இலங்கைக்கு வரும்படியான உதவிகளைச் செய்யுமாறும் முறைப்பாடுகள் வந்துள்ளன.

முகவர்கள் ஊடாக செல்லும் நபர்களின் முறைப்பாடுகள், முகவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பகத்தின் அழுத்தம் காரணமாக அவை நிவர்த்தி செய்யப்படும். மற்றும் ஏனைய முறைப்பாடுகள் கொழும்பு பிரதான தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டு அவர்களின் ஊடாக பிரச்சினைகள் தீர்க்கப்படும். வீட்டுக்காரர்களால் கொடுக்கப்படும் முறைப்பாடு ஆனது சில சமயங்களில் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவில் இருக்காது. இரண்டுவருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு செல்வோரை உடன் மீளவும் அழைக்கும்படி முறைப்பாடு கொடுத்தால் அதை நடைமுறைப்படுத்த முடியாது.- என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

# முல்லைத்தீவில் மேய்ச்சல் தரவையை தர மறுக்கிறது வனவள பாதுகாப்பு பிரிவு

## நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார் சாந்தி எம்.பி.

முல்லைத்தீவு, ஓக.27

12 ஆயிரம் லீற்றர் பால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உற்பத்தியாகப்படுகின்றது. கால் நடை வளர்ப்புக்காக அடையாளம் காணப்பட்ட 11 ஆயிரம் ஏக்கர் மேய்ச்சல் தரவையை வழங்க வன வள பாதுகாப்புப் பிரிவு அனுமதி மறுக்கின்றது.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றம் கூடியது. அதில் இடம்பெற்ற 1986ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க விலங்குத் தீனி திருத்தச் சட்ட வரைவு மீதான விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் தெரிவித்ததாவது–

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதி மக்களின் வாழ்வாதார முறைகளில் கால்நடை வளர்ப்பு பிரதானமானது. அந்தப் பகுதிகளில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் பல்வேறு வகையான திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. உரிய பயனாளிகள் தெரிவு இடம்பெறவில்லை. அதனாலேயே கடந்த அரசால் வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் ஆகிய திட்டங்கள் சுண்டங்காய் காற்பணம், சுமைகூலி முக்காற்பணம் என்ற வகையில் அமைந்தது.

மக்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்கள் பயனற்றவையாக மாறிப்போயின. முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் நாளொன்றுக்கு 12 ஆயிரம் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. எமது பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரவையின்றி சிரமப்படுகின்றனர். அடையாளம் காணப்பட்ட 11 ஆயிரம் ஏக்கர் மேய்ச்சற் தரையைத் தர வன வள பாதுகாப்புப் பிரிவு மறுக்கின்றது.

கால்நடை வளர்ப்புக்கென புல் உற்பத்திகள் இடம் பெற்று வந்தாலும் கால்நடைவளர்ப்பாளர்களுக்கு உரிய ஏனைய வசதி, வாய்ப்புக்கள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை. கால்நடைகளுக்கான தீவனங்கள் என கடைகளில் விற்பனை செய்யப்படும் பொருள்கள் உரிய தர நிர்ணயங்களுக்கு அமைய உள்ளனவா என்பது பற்றி சம்பந்தப்பட்ட திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கால்நடை வைத்தியர்கள் மற்றும் போதனாசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உரிய போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கால்நடை வளர்ப்போருக்கு நவீன முறைகளுக்கேற்ப பயிற்சிகள் வழங்கப்படல்வேண்டும். கால்நடை அபிவிருத்தித்திணைக்களங்களில் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்கும் வகைகளில் சுற்றறிக்கைகள் மாற்றியமைக்கப்படுவது கட்டாயத் தேவையாக உள்ளது.- என்றார். (ற-101)

# உ. கிழக்கு செய்கையாளர் விவரம் பதிவு

அச்சுவேலி, ஓக.27

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகளிடம் இருந்து விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மேற்கொண்டுள்ளது. பதிவுகளை பிரதேச உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன.

விவசாயப் போதனாசிரியர்களும் தமது பிரிவில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் விவரங்களை அதற்கான படிவங்கள் மூலம் திரட்டி வருகின்றனர். உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்களின் உறுப்புரிமை பெற்ற விவசாயிகள் தத்தமது சங்கங்களில் தேவையான விதை உருளைக்கிழங்கின் அளவு (கிலோகிராம்), பயிர்ச்செய்கை நிலத்தின் விஸ்தீரணம், விரும்பும் விதை உருளைக்கிழங்கு ரகங்கள் உள்ளிட்ட விவரங்களைப் பதிவு செய்கின்றன. (ற-11)

# மயிலிட்டி உள்ளிட்ட பகுதிகளை விரைவில் விடுவிக்கவேண்டும்

## யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியிடம் வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.27

வலி.வடக்கில் மயிலிட்டி உட்பட்ட பிரதேசங்களை விடுவிக்க வேண்டும். இவ்வாறு வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் குணபாலசிங்கம் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகேஸ் செனநாயக்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத்தினர் மயிலிட்டி கிராமம் தொடர்பில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியைச் சந்தித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அது தொடர்பில் தெரிவித்தபோதே சங்கத் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

வலி. வடக்கின் மயிலிட்டி உள்ளிட்ட பிரதேசங்களை விடுவிக்க வேண்டும் என்றும் போர் நிறைவின் பின்னரும் இன்று வரை நிர்க்கதி நிலையில் வாழும் இந்தப் பகுதி மக்களுக்கு ஓர் நிரந்தர வாழ்வியல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரினோம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இடம்பெயர் முகாம்கள் மூடப்படவுள்ளன என்று செய்திகள் வெளிவருகின்றன. மயிலிட்டி, ஊறணி, பலாலிப் பகுதிகளை விடுவிப்பதன் மூலமமே அது சாத்தியமாகும். முகாம்களில் வாழும் மக்களில் இந்தக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் உள்ளனர் என்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

மக்களை மீளக் குடியமர்த்துவதில் இராணுவத்தினரும் கரிசனை கொண்டுள்ளனர். சந்திப்பில் அறியப்பட்ட விவரங்களின் அடிப்படையில் சாதகமாகப் பரிசீலித்து எதிர்காலத்தில் நிலவிடுவிப்புக்களில்நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்டளைத் தளபதி வாக்குறுதியளித்தார்.

சந்திப்பின் நிறைவில் மயிலிட்டி, ஊறணி ஆகிய பிரதேசங்களுடன் மயிலிட்டித் துறைமுகம் உள்ளிட்ட பகுதியையும் பார்வையிட்டோம்.-என்றார்.(ற-101)

# சிறுபோக அறுவடை நெல் அடுத்தவாரம்கொள்வனவு

கிளிநொச்சி, ஓக. 27

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளிடமிருந்து சிறுபோக அறுவடை நெல்எதிர்வரும்வாரம்முதல் கொள்வனவு செய்யப்படும்.

இவ்வாறு நெல் சந்தைப் படுத்தும் சபையினர் தெரிவித்தனர்.

2015-2016 ஆம் ஆண்டுக்கான காலபோக நெல் அறுவடை செய்யப்பட்டு வீடுகளில் தேக்க நிலையில் உள்ளது. இந்த நிலையில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெல்அறுவடையும் ஆரம்பிக்கப்பட்டு நெல்லைச் சந்தைப்படுத்த முடியாது விவசாயிகள் பட்ட கடனைச் செலுத்த முடியவில்லை. அரசு நெல்லைக் கொள்வனவு செய்யாததால் தனியார் துறையினர் குறைந்த விலையில் இதனைக் கொள்வனவு செய்கின்றனர் என்று விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

2016 ஆம் ஆண்டுக்கான சிறுபோகநெல்கொள்வனவுக்கான ஆயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் கொள்வனவுக்கான படிவம் விநியோகிக்கப்பட்டு கொள்வனவுகள் இடம்பெறும்.

தர்மபுரம், கல்மடு, அக்கராயன் பகுதிகளில் கொள்வனவு இடம்பெறவுள்ளது. 2 லட்சம் கிலோ நெல் கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் சிறுபோகம் இடம்பெற்ற இடங்களின் விவரங்களின் அடிப்படையில் ஒவ்வொரு விவசாயியும் மேற்கொண்ட விவரங்கள் அனைத்தும் பெறப்பட்டு அதற்கமைய களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துகின்றோம்.- என்று நெல் சந்தைப் படுத்தும் சபையினர் தெரிவித்தனர். (ற-101)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி பொலிகண்டி கிழக்கில் கிணறு ஒன்றில் இருந்து 6 அடி நீளமான அரியவகை வெள்ளை நாகம் கண்டுபிடிக்கப்பட்டது. தோட்டத்துக்கு தண்ணீர் இறைக்கமுயன்றபோது நாகம் கண்டுபிடிக்கப்பட்டது. நாக பாம்பு வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கொண்டு சென்று விடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# ராணுவத்துக்குத் தேவையான காணிகள் விடுவிக்கப்படாது

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27
வடக்கில் இராணுவ முகாம்களுக்குத் தேவையான காணிகளை வைத்துக்கொண்டே ஏனைய காணிகள் விடுவிக்கப்படும்.
இவ்வாறு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றும் முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான கருத்துக்களின் பின்னால் எந்த உண்மையும் கிடையாது.
தேசிய பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்குத் தேவையான எந்த நடவடிக்கையையும் இலங்கை இராணுவம் மேற்கொள்ளும்.
ஒரு இராணுவ முகாம் எவ்வாறு இருக்கும் என்பதை அனைவரும் தெரிந்திருக்க வேண்டும். இராணுவத்தினருக்கான நிரந்தரமான தங்குமிட வசதிகளைக் கொண்டது தான் ஒரு இராணுவ முகாமாகும்.
முகாமுக்குத் தேவையான பிரதேசத்தை மாத்திரம் நாம் பேணிக் கொள்வோம். ஏனைய நிலங்களை விடுவிப்போம். சரியான இடங்களில்தான் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கும் - என்றார். (ற-5)

### வீட்டின் முன் நின்றோர் மீது காரில் வந்தோர் தாக்குதல்

இரவு 9 மணியளவில் வீட்டுக்கு முன்பாக உரையாடிக் கொண்டிருந்த இருவர் மீது காரில் பொல்லுகள் மற்றும் தடிகளுடன் வந்த மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றனர் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. இந்தச் சம் பவம் நேற்று முன்தினம் உடுப்பிட்டியில் நடந்தது.
வெளிநாட்டில் இருக்கும் ஒருவருக்கும் குறித்த நபர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினையே தாக்குதலுக்குக் காரணம் என வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எஸ்.மீடின் தெரிவித்தார்.
வெளிநாட்டில் இருந்து வந்த நபரும் அவருடன் வந்த வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோருமே இவர் மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.
காரின் இலக்கத்தை வைத்தும், முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வெளிநாட்டில் இருந்து வந்த நபர் நாட்டை விட்டுத் தப்பி வெளிநாடு செல்ல முடியாதபடி கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு குடியகல்வு பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், குறித்த சந்தேக நபர்கள் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-109)



கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியில் ஆலயம் ஒன்றுக்கு அருகில் உள்ள சந்தியில் குப்பைகள் நீண்டகாலமாக அகற்றப்படாதுள்ளன. அவற்றுக்குள் போத்தல்களும் காணப்படுகின்றன. மழை ஆரம்பித்தால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் என்பதால் அவற்றை அகற்றுமாறு அந்தப் பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச சபைக்கு இது குறித்து தெரியப்படுத்தினர். ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். குப்பைகளை அகற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர சபையினர் தெரிவித்தனர். (ற-9)

### களவாடி வெட்டப்பட்டது பசுமாடு

வரணி, ஓக.27
கன்று ஈனும் நிலையில் இருந்த பசு ஒன்று களவாடப்பட்டு இறைச்சியாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வரணியில் கடந்த வாரம் நடந்தது.
வரணி மேற்கில் உள்ள தம்மளை வயல் வெளியில் உள்ள குளம் ஒன்றின் அருகில் இறந்த நிலையில் பசுக் கன்றின் உடலும் பசு மாட்டின் தோலும் கண்டுபிடிக்கப்பட்டன.
குளத்துக்கு மீன்பிடிக்கச் சென்ற நபர்களே குறித்த பசு மாட்டின் தோற்பகுதியையும் பசுக்கன்றின் உடலையும் கண்டுள்ளனர்.
குறித்த பிரதேசத்தில் பல ஏக்கர் நிலம் வயல் நிலமாக உள்ளது. புல் மேய்வதற்காக பல பசுமாடுகள் அந்தப் பகுதிக்கு செல்வது வழக்கம்.
கடந்த காலங்களில் இந்தப் பிரதேசத்தில் பல கால்நடைகள் இனம் தெரியாதோரால் பிடிக்கப்படுவது தொடர்கதையாக இருந்து வந்தது. அது குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர். (ற-122)

### யாழில் 15 வாய்க்கால்களை சீரமைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 27
கமநல சேவைகள் திணைக்களத்தால் யாழ்ப்பாணத்தில் 15 வாய்க்கால்கள் சீரமைக்கப்படவுள்ளன என்று கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் இ. நிசாந்தன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கமநல சேவைகள் திணைக்களத்தால் வாய்க்கால் சீரமைப்புக்காக இந்த வருடம் 24 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறையில் முறாவில் மைக்கிரான் வாய்க்காலும், கரவெட்டியில் தூவாளி, ஒந்திராய், மிற்றில் வாய்க்கால்களும், சங்கானையில் பொன்னாலை கலிங்கரை வாய்க்காலும், சாவகச்சேரியில் விளைவேலி அம்பலாந்துறை, இராமாவில், ஓவாலி, எழுதுமட்டுவாழ், நாகர்கோயில் வாய்க்கால்களும், கோப்பாயில் வாய்க்கால் தரவை, அரியாலை கிழக்கு நல்லூர் வாய்க்கால், வேலணை அறவயல் தன்னாவோடை வாய்க்கால், உடுவில் - சீலம்பாய் வாய்க்கால், சண்டிலிப்பாய் சில்லாலை தும்பளப்பாய் வாய்க்கால், தெல்லிப்பழை சீத்தலி வாய்க்கால் போன்றன சீரமைக்கப்படவுள்ளன.
மழைகாலத்தில் அதிகளவு வெள்ள நீரை வயல்களில் இருந்து அப்புறப்படுத்துவதற்கும், மேலதிக நீரை வெளியேற்றும் நோக்கத்தோடும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மழைகாலம் தொடங்குவதற்கு முன்னர் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்படவுள்ளன - என்றார். (ற-ரி)

### பூங்காவனத் திருவிழா

கோப்பாய், ஓக.27
கோப்பாய் ஸ்ரீ சக்கராழ்வார் (கிருஷ்ணர்) கோயில் பூங்காவனத் திருவிழா இன்று நடைபெறவுள்ளது.
இந்தத் திருவிழாவில் தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள கலைமாமணி ராஜேஷ் வைத்தியாவின் வீணைக் கச்சேரி மாலை 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜன் கலந்து கொள்வார். (ற)

# விவசாய அமைச்சரை விசாரிக்கக் கோரும் தீர்மானத்தை மழுங்கடிக்கவே முதலமைச்சர் பிரேரணை சமர்ப்பித்தார்

## குற்றஞ்சாட்டுகின்றார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன்

யாழ்ப்பாணம், ஓக. 27
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது சுமத்தப்பட்ட ஊழல் மோசடி குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை கோரும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் பிரேரணையை மழுங்கடிக்கவே வடக்கு மாகாண முதலமைச்சர் நான்கு அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டு சுமத்தி பிரேரணை சமர்ப்பித்தார்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் சபையில் குற்றஞ்சாட்டினார்.
வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
வடக்கு மாகாண சபையின் பெப்ரவரி மாத அமர்வில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அவை தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரி சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஆளும்கட்சி உறுப்பினர் பரஞ்சோதியால் சில மாதங்களுக்கு முன்னர் பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
பரஞ்சோதியின் பிரேரணை, சபையில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இல்லாமல் இருந்ததன் காரணமாக தொடர்ச்சியாக பல அமர்வுகளில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.
பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நான்கு அமைச்சர்கள் மீதான விசாரணை கோரிய பிரேரணையைச் சமர்ப்பித்தார்.
முதலமைச்சரின் பிரேரணையும், ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதியின் பிரேரணையும், ஒரே அமர்வில் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தபோது, வடக்கு மாகாண முதலமைச்சர் தனது பிரேரணையை முன்னதாக எடுக்க வேண்டும் என்று தெரிவித்து அதற்கு அமைவாக குறித்த பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டது.
ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதியின் பிரேரணை நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
"முதலமைச்சரும் தொடர்புடைய அமைச்சரும் இல்லாத நிலையில் ஏன் இந்தப் பிரேரணை சபையில் இப்போது எடுத்துக் கொள்ளப்படுகின்றது" என்று ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் கேள்வி எழுப்பினார்.
ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி தனது பிரேரணையை முன்மொழிந்து, பிரேரணை கொண்டு வரப்பட்டதற்கான விடயங்களைக் குறிப்பிட்டார். சுமார் 20 நிமிடங்களுக்கு மேலாக அவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஆளும் கட்சி உறுப்பினர் தியாகராசா குறுக்கீடு செய்தார்.
அப்போது வார்த்தை மோதல் இடம்பெற்றது. அப்போது, நீங்கள் யாரின் '-' (சபைக் குறிப்பிலிருந்து வார்த்தை நீக்கப்பட்டுள்ளது) பிடிக்கின்றீர்கள் என்று தெரியும் என்று பரஞ்சோதி குறிப்பிட்டார். அதற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டனர். குறித்த வார்த்தைப் பிரயோகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.
இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சி உறுப்பினர்களான சிவநேசன், சர்வேஸ்வரன், சிராய்வா ஆகியோர் பரஞ்சோதியின் மேற்படி பிரேரணை அவசியமற்றது என்று குறிப்பிட்டனர். முதலமைச்சரின் பிரேரணை ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதால் இந்தப் பிரேரணை தேவையில்லை என்ற கருத்தை முன்வைத்தனர்.
இறுதியில் பிரேரணையை சமர்ப்பித்த பரஞ்சோதி, பிரேரணை கொண்டு வரப்படும் போதிருந்த சூழ்நிலையும் இப்போதுள்ள சூழ்நிலையும் வேறாக உள்ளன. உறுப்பினர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு முதலமைச்சரின் விசாரணைக் குழுவுக்கு இந்த விடயங்களைச் சமர்ப்பிக்கின்றேன் என்று குறிப்பிட்டார்.
முதலமைச்சருக்கு இந்தக் கருத்துக்கள் அனுப்பி வைக்கப்படும் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். (ற-5-ரி1-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்க்காகம் போர்ப் பயிற்சிகள் கொக்கிளாயில் அடுத்த வாரம்

## இராணுவத் தளபதி தகவல்

கொழும்பு, ஓக. 27
இராணுவத்தால் அடுத்த வாரம் நீர்க்காகம் போர்ப் பயிற்சி முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாயில் நடத்தப்படவுள்ளது. அதில் 49 வெளிநாட்டுப் படையினர் பங்கேற்கவுள்ளனர்.
இவ்வாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:
ஆண்டு தோறும் இராணுவம், நடத்தும் நீர்க்காகம் கூட்டுப் பயிற்சி நடவடிக்கை எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம், 25 ஆம் திகதி வரை கொக்கிளாயில் நடத்தப்படும்.
அதில் இலங்கையின் 368 கடற்படையினர், 506 விமானப் படையினர், 2 ஆயிரத்து 500 இராணுவத்தினர் என 3 ஆயிரத்து 374 படையினர் பங்கேற்கின்றனர்.
அவர்களுடன் பங்களாதேஷ், சீனா, இந்தியா, ஜப்பான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், அமெரிக்காவைச் சேர்ந்த 49 வெளிநாட்டுப் படையினர் பங்கேற்பாளர்களாகவும், பார்வையாளர்களாகவும் கலந்து கொள்வர்.
பாதுகாப்புப் படைகளின் சிறப்பு நடவடிக்கை ஆற்றல்களை வலுப்படுத்தவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது - என்றார். (ற-5)



# இழந்த மக்கள் செல்வாக்குக்காக திருப்பதியில் மன்றாடுகிறது அரசு

## விமலவீர திஸாநாயக்க எம்.பி. கடும் விமர்சனம்

மக்கள் செல்வாக்கை இழந்துள்ள அரசு ஆட்சியைத் தக்க வைக்க திருப்பதி ஏழுமலையானிடம் மன்றாடுகின்றது.
இவ்வாறு அரசைக் கடுமையாக விமர்சித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க.
நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிந்த பின்னர், இறப்புகளின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டவரைவு மீதான விவாதம் ஆரம்பமானது.
சட்டவரைவு பற்றி விளக்கமளித்து அதன் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார் பிரதி அமைச்சர் நிமல் லன்சா. பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றினார்.

### மகிந்த அணியும் இஞ்சிக் குழுவும்

பின்னர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றினார். அவர் தனதுரையில் மகிந்த அணிக்கு 'இஞ்சிக் குழு' என புதிய பெயரையும் சூட்டினார். சபாநாயகரே, பொதுஎதிரணி என ஒரு கட்சி இந்தச் சபையில் இல்லை. எனவே அவர்களை அப்படி அழைக்கக்கூடாது என்று குறிப்பிட்டுடன்மகிந்த அணியை 'இஞ்சிக்குழு', 'இஞ்சிக் குழு' என்றே அவர் விழித்தார்.
உதயகம்மன்பில தனதுரையில் அதற்குப் பதிலடி கொடுத்தார். வெளிவிவகார அமைச்சர் எம்மை ஏற்காவிட்டாலும் சபாநாயகர் அங்கீகரித்துவிட்டார் என்று குறிப்பிட்டார்.
பிற்பகல் 1.45 மணியளவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சபைக்குள் வந்தார். அவரைச் சூழ அவரது சகாக்களான தினேஷ் குணவர்தன, கெஹலிய ரம்புக்வெல, சி.பி.ரத்நாயக்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் வந்தனர்.
விவாதத்தில் அவர் உரையாற்றவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரையை செவிமடுத்தார். பிற்பகல் 2.05 மணியளவில் சபையிலிருந்து வெளியேறுவதற்குத் தயாரானார்.

### அரசு மீது பாய்ச்சல்

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க உரையாற்ற எழுந்தார். உடனே ஆசனத்தில் அமர்ந்து அவரின் உரையைச் செவிமடுத்தார் மகிந்த.
நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க கிராமத்துப் பாணியில், நல்லாட்சி அரசு மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார். வெளிவிவகாரக் கொள்கையையும் சாடினார்.
அன்று நாங்கள் செய்ததையே இன்று இவர்கள் செய்கின்றனர். போட்டிபோட்டுக் கொண்டு திருப்பதி செல்கின்றனர். இவர்களுக்கு மக்கள் செல்வாக்கு இல்லை. ஆட்சியைக் காக்க கடவுளைத்தான் நம்பவேண்டிய நிலை இருக்கின்றது.– என்றார்.
அவர் ஆக்ரோஷமாக உரையாற்றியபோது மேசையில் கைதட்டி மகிந்த அணி ஊக்கமும் உற்சாகமும் வழங்கியது.
உரையை முடிவுக்குக் கொண்டு வருமாறு விமலவீரவுக்குச் சபைக்கு தலைமை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் லக்கி ஜயவர்த்தன பணிப்புரை விடுத்தார். அடுத்து உரையாற்ற அமைச்சர் ஹக்கீமுக்கும் அழைப்பு விடுத்தார்.விமலவீர ஓயவில்லை. மகிந்த அணியினரும் எழுந்து நின்று அவருக்கு நேரம் வழங்குமாறு கேட்டு வாதிட்டனர்.
ஆளுங்கட்சி உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா தனது நேரத்தில் ஐந்து நிமிடங்களை விமலவீர திஸாநாயக்கவுக்கு வழங்க முன் வந்தார். மகிந்த அணியினர் ஹிஸ்புல்லாவுக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். அந்த ஐந்து நிமிடங்களிலும் அரசு மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார் விமலவீர. (ற-4)

# வை.கே.சின்ஹா பிரிட்டனுக்கான தூதராகலாம்

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா பிரிட்டனுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்படலாம் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் அருண் சிங் ஓய்வு பெறவுள்ளார். இந்திய அயலுறவுச் சேவையில் முக்கியமான மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.
அருண் சிங் ஓய்வுபெறவுள்ள நிலையில், பிரிட்டனில் உள்ள இந்தியத் தூதுவர் நவ்தேஜ் சர்னா, அமெரிக்காவுக்கான தூதுவர்பதவியைஏற்றுக்கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, பிரிட்ட னுக்கான தூதுவராக நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
பிரிட்டனுக்கான தூதுவராக வை.கே.சின்ஹா நியமிக் கப் பட்டால், இலங்கைக்கான தூதுவராக அடுத்து யார் நியமிக்கப்படுவார் என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ற-5)

# மூன்று ஆண்டுகளில் 9,657 பேர் தற்கொலை

கொழும்பு, ஓக. 27
கடந்த மூன்று ஆண்டுகளில் நாடு முழுவதிலும் 9 ஆயிரத்து 657 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்று சட்டமும் ஒழுங்கும் அமைச்சு தெரிவித்துள்ளது.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைகளின் எண்ணிக்கை தொடர்பில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பினார்.
சட்டமும் ஒழுங்கும் அமைச்சு சபையில் சமர்ப்பித்த பதிலில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
2013ஆம் ஆண்டு 752 பெண்களும், 2 ஆயிரத்து 703 ஆண்களும், 2014 ஆம் ஆண்டு 660 பெண்கள் உட்பட 2 ஆயிரத்து 484 பேரும் தற்கொலை செய்துகொண்டனர். 2015ஆம் ஆண்டு 669 பெண்களும், 2 ஆயிரத்து 389 ஆண்களுமாக மொத்தம் 3 ஆயிரத்து 58 பேர் தற்கொலை செய்துகொண்டனர்.
2013, 2014 ஆம் ஆண்டுகளில் இரத்தினபுரி பொலிஸ் பிரிவிலேயே கூடுதல் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. 2015ஆம் ஆண்டு கண்டி பொலிஸ் பிரிவில் கூடுதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# லசந்தவைக் கொல்லப் பயன்படுத்திய துப்பாக்கியின் கொள்வனவு, பயன்பாடு தொடர்பில் அறிக்கையிடுக

## கல்கிசை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு

கொழும்பு, ஓக. 27
சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவை படுகொலை செய்ய 'கேப்டிவ் போல்ட்' ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டது. விசாரணைகளில் அறியப்பட்ட மேற்படி தகவலை மையப்படுத்தி, ஆயுதக் கொள்வனவு, பயன்பாடு உள்ளிட்ட விடயங்களைப் பற்றி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
இவ்வாறு கல்கிசை தலைமை நீதிவான் மொஹம்மட் சஹாப்தீன் இராணுவத் தளபதிக்கும், லங்கா லொஜஸ்டிக்ஸ் நிறுவனத்துக்கும் உத்தரவு பிறப்பித்தார்.
லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் கல்கிசை தலைமை நீதிவான் மொஹம்மட் சஹாப்தீன் முன்னிலையில் எடுக்கப்பட்டது. புலனாய்வுப் பிரிவின் கோரிக்கையை ஏற்று அவர் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.
இந்த வழக்கில் கொலையை நேரில் பார்த்ததாக கூறப்படும் கண்கண்ட சாட்சியான லால்வெலண்டைன் என்பவர், சந்தேகநபரை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்ட இருந்த நிலையில், சாட்சியாளர் தொடர்பில் கல்கிசை மேலதிக நீதிவான் சுலோச்சனா வீரசிங்க கடந்த தவணை வழங்கிய உத்தரவுக்கு அமைய அவரின் மன நிலை தொடர்பிலான சட்ட வைத்திய அறிக்கை மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.
சிறப்பு வைத்திய நிபுணர் மகிபாலவின் அறிக்கையில் கண்கண்ட சாட்சியாக கருதப்படும் லால் வெலன்டைன் சாட்சியமளிக்கவோ, அவரை சாட்சியாக பயன்படுத்திக் கொள்ளவோ உரிய மன நிலையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் சாட்சியாளர் ஒருவருக்குரிய தகுதியில் இல்லை என்று அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது:
அறிக்கையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவான் சஹாப்தீனிடம் கையளித்தனர். இந்த அறிக்கையைத் தொடர்ந்து நடத்தப்படவிருந்த அடையாள அணிவகுப்பு ரத்து செய்யப்பட்டது.
குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணை அதிகாரி நிசாந்த சில்வா, லசந்த கொலை தொடர்பில் மேலதிக விசாரணை அறிக்கை ஒன்றை மன்றில் சமர்ப்பித்து சில உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டார்.
நீதிமன்ற உத்தரவுக்கு அமைய வங்கிக் கணக்கு விவரங்களில் ஒரு பகுதியே விசாரணையாளர்களுக்குக் கிடைத்துள்ளது. தொலைபேசித் தகவல்கள் அடங்கிய அறிக்கையும் கிடைக்க வேண்டியுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஆவணங்கள் தொடர்பிலும் அந்த நிலைமையே நீடிக்கிறது என்று புலனாய்வுப் பிரிவினர் நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.
இராணுவப் புலனாய்வாளர்கள் 41 பேர் பெற்றுக்கொண்ட கடன் விவரங்கள் தொடர்பிலான தகவல்களைத் தமக்குத் பெற்றுத் தருமாறும், லசந்தவைக் கொலை செய்ய பயன்படுத்தியதாக நம்பப்படும் பிரத்தியேக ஆயுதம் தொடர்பிலும் தகவல்களைப் பெற்றுத் தருமாறும் இராணுவத் தளபதி மற்றும் ஆயுதக் கொள்வனவு நிறுவனமான லங்கா லொஜஸ்டிக்ஸ் ஆகியவற்றுக்கு உத்தரவிடுமாறும் புலனாய்வுப் பிரிவினர் கோரினர்.
41 புலனாய்வாளர்களின் கடன் விவரங்களைப் பெற்றுக் கொடுக்கவும், லசந்தவை கொலை செய்ய பயன்படுத்தப்பட்டது என்று நம்பப்படும் மிருக வேட்டைக்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கேப்டிவ் போல்ட் ரக ஆயுதம் குறித்து அதன் பயன்பாடு, கொள்வனவு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் உள்ளடக்கி அறிக்கை பெற்றுக் கொடுக்குமாறும் இராணுவத் தளபதிக்கும் லங்கா லொஜஸ்டிக் நிறுவனத்துக்கும் நீதிவான் உத்தரவிட்டார்.
மன்றில் முன்னிலையாகியிருந்த சந்தேக நபரான இராணுவ சார்ஜன்ட் மேஜர் பிரேமானந்த உடலாகமவின் சட்டத்தரணி ரசிக பாலசூரிய, அடையாள அணிவகுப்பு ரத்து செய்யப்பட்டதைக் காரணம் காட்டி பிணையைக் கோரினார். கொலையின் பின்னரான சம்பவமான அவரது சாரதியைக் கடத்தியமை தொடர்பிலேயே அடையாளம் காட்டப்பட்டுள்ளதால், தனது சேவை பெறுநருக்கு பிணை வழங்குமாறும் அவர் கோரிக்கை முன்வைத்தார்.
பிணைக் கோரிக்கைக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணை அதிகாரி நிஸாந்த சில்வாவும் பாதிக் கப்பட்ட தரப்பு சட்டத்தரணி அதுல எஸ்.ரணகலவும் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.
அவ்விரு சம்பவங்களும் வெவ்வேறானதல்ல எனக் கூறிய குற்றப் புலனாய்வுப் பிரிவு, லசந்த படுகொலை தொடர்பிலான விசாரணைகளுடன் சேர்த்தே அவர் சாரதியின் கடத்தல் விவகாரமும் விசாரணை செய்யப்படுகின்றது. அது கொலையின் பின்னரான சாட்சியமளிப்பு நடவடிக்கை எனவும் சுட்டிக்காட்டினர். விசாரணை நிறைவுறாத நிலையில் பிணை வழங்கக் கூடாது. ஏற்கனவே அவர் சாரதியை கடத்தி சென்று அச்சுறுத்தியுள்ள நிலையில் அவர் பிணையில் செல்வது சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் எனவும் விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.
இதனை ஏற்றுக் கொண்ட நீதிவான் சந்தேக நபரான இராணுவ சார்ஜன்ட் மேஜரை எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்காகப் போராடியது போராடியது அருவருக்கிறது

## இயக்குநர் சேரன் சர்ச்சைப் பேச்சு

சென்னை, ஓக. 27



இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடியதை நினைக்கும் போது அருவருப்பாக இருக்கின்றது.

இவ்வாறு இயக்குநரும் நடிகருமான சேரன் தெரிவித்தார்.

'கன்னா பின்னா' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா கமலா திரையரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

சினிமாவில் இன்று தயாரிப்பாளர்களின் நிலைதான் கேள்விக்குறியாக இருக்கிறது. தமிழ் நாட்டில் 18 ஆயிரம் திருட்டு டிவிடி கடைகள் இருக்கின்றன. பர்மா பஜாரில் இருக்கிற அத்தனை கடைகளிலும் திருட்டு டிவிடி விற்கிறார்கள்.

பொலிஸாரும் அதைத் தாண்டித் தான் தினமும் போய்வந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் அதனைக் கண்டு கொள்வதில்லை. எம்மிடம் சட்டங்கள் சரியாக இல்லை.

தமிழ், தமிழன் என்று சொல்லும் போது அப்படியே உணர்வுகள் பொங்கி எழுகின்றன. ஆனால் அந்தத் தமிழன்தான் இவ்வாறான வேலைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

திருட்டுத்தனமாகப் படத்தை இணையத்தளத்தில் வெளியிடுபவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று சொல்கின்றார்கள். இலங்கைத்தமிழர்களுக்காக நாம் – திரையுலகமே ஒன்று திரண்டு குரல் கொடுத்துப் போராடியிருக்கின்றோம்.

எங்களுடைய பல விடயங்களை இழந்துவிட்டு அவர்களுக்காகப் போராடி இருக்கின்றோம். ஆனால் அதைச் சார்ந்த சிலர் இவ்வாறு செய்கின்றார்கள் என்று கேள்விப்படுகின்றபோது, ஏன் இவர்களுக்காக இதைச் செய்தோம் என்று அருவருப்பாக இருக்கின்றது – என்றார்.

கலைப்புலி எஸ்.தாணு, இயக்குநர்கள் பாக்கியராஜ், தங்கர் பச்சான், மாஸ்டர் ஜாக்குவார் தங்கம் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-5)

# மைத்திரியின் இணையம் மீது சைபர் குழுவினர் கைவரிசை

கொழும்பு, ஓக. 27

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இணையத்தளத்தின் மீது 'சிறிலங்கன் யுத்' என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டுள்ள குழுவால் நேற்றுமுன்தினம் மாலை சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிங்கள-தமிழ் புதுவருட காலத்தில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை நடத்துவது தொடர்பில் அதிருப்தியடைகின்றோம் என்று இந்தக் குழு தெரிவித்துள்ளது. இலங்கையின் இணையத்தளங்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு கோரியுள்ள அந்தக் குழு, இல்லையேல் இலங்கையில் இணையப் போர் ஏற்படலாம் என்றும் எச்சரித்தது.

உங்களுக்கு இவற்றைச் செய்ய முடியாது போனால் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் அந்தக் குழு கோரியுள்ளது. பிரதமரின் பொறுப்பற்ற செயல்கள் தடுக்கப்பட வேண்டும். பல்கலைக் கழக மாணவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும் அந்த இணையத்தில் 'சிறிலங்கன் யுத்' குழுவால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

சில மணித்தியாலங்களின் பின்னர் குறித்த இணையத்தளம் இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# கிழக்கு முன்னாள் போராளிகளுக்கும் மருத்துவப் பரிசோதனை அவசியம்

## கிழக்கு மாகாண சபையில் பிரேரணை

கொழும்பு, ஓக. 27

புனர்வாழ்வு பெற்று விடுதலையான கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கும் மருத்துவப் பரிசோதனை தேவை என்ற கோரிக்கை கிழக்கு மாகாண சபையில் முன்வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபை அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அவைத் தலைவர் சந்திரதாஸ் கலப்பதி தலைமையில் கூடியது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான கோ.கருணாகரம் இது தொடர்பான பிரேரணையொன்றை முன் வைத்தார்.

வட மாகாண சபை முன்னாள் போராளிகளுக்கான மருத்துவப் பரிசோதனை தொடர்பாகக் கவனம்செலுத்தி புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் விடுதலைப் புலிகளை சிறப்பு மருத்துவக் குழுவொன்றின் மூலம் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு ஆயத்தங்களைச் செய்து வருகின்றது.

கிழக்கு மாகாணத்திலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப் போராளிகள் இருக்கின்றார்கள்.

அவர்கள் அனைவரையும் மருத்துவப்பரிசோதனைக்கு உட்படுத்த முடியாவிட்டாலும் ஒரு பகுதியினரையாவது அடையாளம் கண்டு அவர்களைப் பரிசோதனை செய்து உடலில் ஏதாவது குறைபாடுகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய மாகாண சுகாதார அமைச்சு சிறப்பு மருத்துவர் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்

இதற்குப் பதிலளித்த மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர், மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் அடையாளம் காணப்பட்டு மாகாணத்திலுள்ள மருத்துவ நிபுணர்கள் குழுவொன்றால் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் – என்றார். (ற-5)

# வழக்குகள் தொடரப்பட்டாலும் பௌத்தத்தைப் பாதுகாப்போம்

## இப்படி சூளுரைக்கிறார் ஞானசார தேரர்

கொழும்பு, ஓக. 27



வழக்குத் தொடர்ந்தாலும் பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் போராட்டம் கைவிடப்படாது.

இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

தென்கொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஞானசார தேரர் கொழும்பு ஊடகத்துக்குத் தொலைபேசி மூலம் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வழக்கு மேல் வழக்குத் தொடர்ந்தாலும் பௌத்த மதத்தையும் நாட்டையும் இனத்தையும் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து ஒரு நொடியும் விலகிக்கொள்ளப் போவதில்லை. எமக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டால் விசாரணை நடத்தப்படுகின்றது. பௌத்த மதத்துக்கு எதிராக அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்படும் நெருக்குதல்கள் தொடர்பில் பொலிஸாரோ அல்லது வேறு தரப்பினரோ கண்டு கொள்வதில்லை– என்றார். (ற-5)



பத்தொன்பதாம் நாள் வீதியுலா

## இருபதாம் திருவிழா

### வேண்டும் வரம் அருள்வாய்

சங்கம் தனைக் காத்தவனே தமிழினை உரைத்தவனே
தங்கமயில் ஊர்பவனே தரணியை ஆள்பவனே
தங்கவேல் தனைத்தாங்கி வீதி வலம் வருபவனே
ஐங்கரர்க்கு இளையவனே ஆறுமுக வேலவனே!

நித்தம் உனை நினைந்துருகி நீலமயில் வாகனனே
சித்தம் உந்தன் திருவடியை அனுதினம் நாடுதையா
வித்தகனே! பாவலரின் நாவில் உறைந்தருள்பவனே
முத்தி நல்கும் முருகவேளே வேண்டும் வரம் நீயருள்வாய்.

- க.குணரத்தினம், மிருசுவில்.

### நல்லதை நல்கும் நல்லூரானே

அல்லலைத் துடைக்கும் அருளூரானே
அருள் வள்ளலாய் வாய்த்த அன்பூரானே
தொல்லைகள் தீர்க்க நல்லதை அருள வலம் வருவாயப்பா
மீட்சியை நாடி நிற்கும் மாந்தர்கள் நாங்கள்
சூழ்ச்சியால் மூடி நிற்கும் மைந்தர்கள் நாங்கள்
மீண்டும் வீழ்ச்சியைக் கண்டிடாமல் காத்திடுவாய்
சாட்சியாய் நின்று நீ நல்ல ஆட்சியைத் தருவாய்
கல்வியில் முன்னின்ற பள்ளிகள் இன்று
சொல்லொணா சோதனையில் துவள்கின்றதையா
வல்லவன் முருகா உன் மண்மீண்டு எழ
வேல் கொண்டு வந்து வீணர்களைத் துரத்து
எத்தனைபட்டோம் எதை எல்லாம் இழந்தோம்
அத்தனைதுன்பங்களிலும் பீனிக்ஸ் பறவையாய் மீண்டோம்
ஆள்பவன் கொடுமைகள் சற்று குறைந்த தோ என்னவோ
நடக்க இருப்பவை நல்லதாய் அமைய
நல்லூரானே வந்திடுவாய்

- கோவில் வீதியான்

### துன்பங்கள் தீர்ந்திட

ஓங்கார தத்துவமாய்! உலகில் ஒளிர்பவனே!
ஆறுபடை வீடுடை அருள் கொண்ட திருக்குமரா
தந்தைக்குப்பாடம் சொன்ன தனையோனே நல்லைக்கந்தா
உன்பெயர் சொல்ல என்மனம் உருகுதையா
நல் நல்லூரானைத் தினம் தொழ...
நாள் எல்லாம் வேதனை தீர்ந்திடுமே
தொல்லைகள் அகன்றிடுமே
தொழும் அடியவர்கள் வரம் பெற்றிட...
நல்லூர்க் கந்தனை...
நாளும் தொழ வேண்டுமையா!

கைதடி ஊர்
கு.சுரேஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்தம் எதிர்காலம் கேள்விக்குறி நிலையிலேயே...

*வடக்கில் அமைந்துள்ள இராணுவ முகாம்களில் எதனையும் அகற்ற முடியாது. அது குறித்து எந்த முடிவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.*

*மேற்கண்டவாறு அறுத்து உறுத்துத் தகவல் வெளியிட்டுள்ளார் இராணுவத் தளபதி கிரிஷாந்த டி.சில்வா.*

- *இராணுவ முகாம் என்பது இராணுவத்தினரைத் தங்க வைக்கும் நிரந்தர இருப்பிடமாகும். எமக்குத் தேவைப்படும் எண்ணிக்கையான துருப்புக்கள் தங்குவதற்குப் போதுமான இடங்களையே எமது வசம் வைத்திருப்போம்.*
- *ஏனையவற்றை நாம் கையளித்து விடுவோம். சரியான இடங்களையே நாம் தெரிவு செய்வோம்.*
- *நாட்டின் பாதுகாப்புக் குறித்து தேசிய மட்டத்தில் கவனம் செலுத்துவது எமது கடமை ஆகும். அதனை நாம் உரிய முறையில் மேற்கொள்வோம்.*
- *2011 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய, பிராந்திய தொடர்புகளைப் பேணிவருகிறோம்.*
- *2016 ஆம் ஆண்டில் அதாவது இப்போது கொழும்பில் பாதுகாப்பு மாநாடுகளை நடத்துவதை ஒரு பிரிவாக வகுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது-- என்றும் இராணுவத் தளபதி தகவல் வெளியிட்டுள்ளார்.*

*மேலும், இறுதிப் போரின்போது, நாற்பதாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவது பொய்யாகும். முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்படவில்லை-- என்றும் இராணுவத் தளபதி எடுத்துக் கூறியுள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.*

*வடக்கில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்றப் போவதில்லை என்று இராணுவத்தளபதி தெரிவித்திருப்பது தமிழ் மக்கள் இனிமேல் எப்போதுமே படைத்தரப்பின் அங்கீகாரத்துடனேயே வாழ்ந்தாக வேண்டும் என்பதைத் தொட்டுக்காட்டுகிறது.*

*போர் நடைபெற்ற காலத்தில் தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரங்களையும், வாழ்வியலையும் தொலைத்த நிலையே இனியும் தொடரும் என்பதும் நிச்சயப்படுத்தப்படுகிறது.*

*இத்தகைய புறச்சூழலில், வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கோட்பாடு மேலெழுகிறது; தேவைப்படுகிறது அல்லவா?*

*மயிலே மயிலே இறகு போடு என்று இரந்து கேட்டால், அது எந்த அளவுக்கு இயலும் எனக் கையை விரிக்கும் நிலையே உருவாகும்.*

*மொத்தத்தில், தமது இத்தனை கால துன்ப துயரங்களுக்கு தீர்வு கிட்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையை நம்பிக் காத்திருக்கும் நிலையும் பஸ்பமாகி விடும்.*

*அனைத்துலக நாடுகள் தானும் தர்மத்தின் வழிநின்று செயற்படும், உதவும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியாத கையறு நிலையே தொடரப்போகிறது.*

*தமிழ் மக்களது தலைவிதி இதுதானா என்று மனம் நொந்து கொள்வதைத் தவிர வேறு என்னதான் செய்யப் போகிறோம்?*



> புலிகளைத் தோற்கடித்து தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தை வளர்த்துக் கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒரு கட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராகவும் அந்த இனவாதத்தைத் திருப்பிவிட்டார். பொதுபல சேனா, சிங்கள ராவய மற்றும் இராவண பலய போன்ற பேரினவாத அமைப்புக்கள் தோன்றி முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகளை மகிந்தவின் அனுசரணையில் முன்னெடுக்கத் தொடங்கின; அழிவையும் ஏற்படுத்தின.

எம்.ஐ.முபாறக்

**2015** ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டது இனவாதமும் மிதவாதமும்தான். அதில் மிதவாதம் வென்று இனவாதம் தோற்றது.

புலிகளைத் தோற்கடித்து தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தை வளர்த்துக் கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒரு கட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராகவும் அந்த இனவாதத்தைத் திருப்பிவிட்டார். பொது பல சேனா, சிங்கள ராவய மற்றும் இராவண பலய போன்ற பேரினவாத அமைப்புக்கள் தோன்றி, முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச்செயற்பாடுகளை மகிந்தவின் அனுசரணையில் முன்னெடுக்கத் தொடங்கின; அழிவையும் ஏற்படுத்தின.

பௌத்தமக்கள் அனைவரையும் முஸ்லிம்களுக்கு எதிராகத்திருப்பி விடுவதும், மறுபுறம் தமிழ்-முஸ்லிம் மக்களைத் தம்மிடையே மோதவிடுவதும் இவர்களின் திட்டமாக இருந்தது.

கிழக்கில் கல்முனையை அடிப்படையாக வைத்து தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மோதலை ஏற்படுத்துவதற்கு இந்தப் பேரினவாத அமைப்புகள் முயற்சி செய்தன.

இவை அனைத்தும் மகிந்தவின் அரசியல் இலாபங்களுக்காக செய்யப்படுகின்றவை என்பதை, தமிழர்களும்- முஸ்லிம்களும் உணர்ந்ததால் விழித்துக் கொண்டனர்.அந்தச் சதி வலையில் அவர்கள் சிக்கவில்லை. ஆனால், சிங்களவர்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்பும் சதி, ஓரளவு வெற்றி பெற்றது. இதனால் அளுத்கமவில் முஸ்லிம்கள் இனக் கலவரத்தால் சாவடைந்தனர்.

### தமிழர்கள், முஸ்லிம்களுக்கு எதிராக இனக் கலவரங்கள்

முஸ்லிம்களுக்கு எதிராக இலங்கையில் பல இனக் கலவரங்கள் இடம்பெற்றுள்ளன.சுமார் 100 வருடங்களுக்கு முன் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனக்ககலவரம்,2001இல் இடம்பெற்ற மாவனெல்லை கலவரம் மற்றும் அளுத்கம கலவரம் போன்றவை முஸ்லிம்களுக்கு எதிராக பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்ட இனக்கலவரங்களுள் சிலவாகும்.

அதேபோல்,தமிழ் மக்களுக்கு எதிராகவும் பல இனக் கலவரங்கள் பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளன.ஜூலைக் கலவரம் அவற்றுள் முக்கியமானதாகும். அதுபோக,30 வருடங்களாக போர் என்ற போர்வையில் -புலிகளை அழித்தல் என்ற பெயரில் தமிழருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பேரினவாதத்தால் தோற்றுவிக்கப்பட்டவைதான்.

இவ்வாறு இலங்கையின் வரலாறு நெடுகிலும், பேரினவாத அரசியல்வாதிகள், தமிழ்-முஸ்லிம் மக்களைப் பேரினவாதத்துக்குப் பலி கொடுத்தே தங்களது ஆட்சி அதிகாரங்களைத் தக்கவைத்து வந்துள்ளனர். இன்றும் அது தொடர்வதுதான் கவலைக்குரிய விடயமாகும்.போர் வெற்றியைக் கொண்டு பலமாகக் கட்டி எழுப்பப்பட்ட மகிந்தவின் ஆட்சி, ஓரிரு வருடங்களில் சரிந்தமைக்கு இந்த இனவாதப் போக்குத்தான் காரணம்.

தமிழர்கள்-முஸ்லிம்களுக்கு எதிரான மகிந்தவின் இனவாத செயற்பாடுகள் எல்லை கடந்து சென்றதால், தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றிணைந்து மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்தனர்.அத்தோடு,இந்தப் பேரினவாதம் ஒழிந்துவிட்டது என்று மக்கள் நினைத்தனர்.

ஆனால்,அது தற்காலிகமானதா? என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது.ஆட்சி மாற்றத்தின் பின்பும் தமிழ்- முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள்மெல்லமெல்லமீண்டும் தலை தூக்குவதே இந்த நியாயமான சந்தேகத்துக்கு காரணம்.

### புதிதாக உருவான பேரினவாத அமைப்பு

பொதுபல சேனாவுக்குப் பதிலாக, “சிங்களவர்களின் இரத்தம்” என்ற பெயரில் ஓர் அமைப்பு உருவாகி அது நாடு முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றது.இந்த அமைப்பு உருவானது முதல் முஸ்லிம் களுக்கு எதிராக பல இனவாதச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.கம்பளை மற்றும் தெஹிவளை ஆகிய இடங்களில் பள்ளிவாசல்களுக்கு எதிராகப் பிரச்சினையான சிறு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களை உசுப்பேத்தவென புதிது புதிதான இனவாத அமைப்புக்கள்

சிறு சம்பவங்கள் இடம்பெற்றவண்ணமே உள்ளன. அவ்வப்போது ஞானசார தேரரும் வாயைத் திறக்கின்றார்.

அரசியல் தீர்வு,தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை,போர்க் குற்ற விசாரணை மற்றும் மீள்குடியேற்றம் போன்ற தமிழ் மக்களுடன் தொடர்புபட்ட அத்தனை விடயங்களையும் இந்த அமைப்பு எதிர்த்து வருகின்றது;இவற்றைக் கொண்டு இனவாதத்தைப் பரப்புகின்றது.

இந்த நல்லாட்சியில்தான் இந்த அமைப்பு உருவானது.இது ஒரு பேரினவாத அமைப்பு என்று தெரிந்தும் கூட-பொது பல சேனாவுக்கு மாற்றீடாக புதிய வடிவில் உருவாகியுள்ள அமைப்பு என்று அறிந்தும் கூட இதைத் தடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

### பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவம்

இந்த நிலையில், இப்போது தமிழர்கள் மற்றும்-முஸ்லிம்களை குறி வைத்துத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.பேராதனைப் பல்கலைக்கழக முதலாம் வருட தமிழ்-முஸ்லிம் மாணவர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இது தற்செயல் நிகழ்வு அல்ல.நன்கு திட்டமிடப்பட்ட இனவாதத் தாக்குதலாகும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற தமிழ்-சிங்கள மாணவர்களுக்கு இடையிலான சண்டைக்குப் பழிவாங்கும் விதத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது என்று நம்பப்படுகின்றது. யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவமானது திட்டமிடப்பட்ட சம்பவம் அல்ல. புதிய மாணவர் வரவேற்பு ஒழுங்கை சிங்கள மாணவர்கள் குழப்பியதால் அந்த இடத்தில் ஏற்பட்ட பிரச்சினையாகும்.ஆனால், பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றிருப்பது நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதலாகும்.

இரண்டாம் வருட தமிழ் மாணவர்களைக் கோயிலுக்குச் செல்ல வேண்டாம் என்று கூறிவிட்டு, கோயிலுக்குச் சென்ற முதலாம் வருட தமிழ் மாணவர்கள் மீதும் பள்ளிவாசலுக்குச் சென்ற முஸ்லிம் மாணவர்கள் மீதும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பழிக்குப் பழியென ஏனைய பல்கலைக்கழகங்களிலும் இந்தச் சம்பவம் தொடர்ந்தால் நிலைமை என்ன?அது இன முரண்பாட்டைத் தோற்றுவித்துவிடும்.இந்த ஆட்சியில் அப்படி நடப்பது நல்லதல்ல.

மகிந்தவின் ஆட்சியில் பிரச்சினைகள் எவ்வாறு சிறிதாக தொடங்கி பெரிதாக வெடித்தனவோ, அதேபோல்தான் இப்போதும் சிறிதாக பிரச்சினைகள் தோன்றுகின்றன.இதற்கு இனியாவது முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும்.இன நல்லுறவு மாணவர்கள் மட்டத்தில் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

பொதுபல சேனா அன்று சிங்கள மாணவர்கள் மத்தியில் இனவாதத்தை விதைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்ததுபோல் இந்த ஆட்சியிலும் அமைந்து விடக்கூடாது.



> “ பொதுபல சேனாவுக்கு பதிலாக “சிங்களவர்களின் இரத்தம்” என்ற பெயரில் ஓர் அமைப்பு உருவாகி அது நாடு முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த அமைப்புஉருவானதுமுதல்முஸ்லிம்களுக்கு எதிராகபலஇனவாதசம்பவங்கள்நிகழ்ந்துள்ளன. கம்பளை மற்றும் தெஹிவளை ஆகிய இடங்களில் பள்ளிவாசல்களுக்கு எதிராகப் பிரச்சினை என சிறு சிறு சம்பவங்கள் இடம் பெற்ற வண்ணமே உள்ளன.அவ்வப்போது ஞானசார தேரரும் வாயைத் திறக்கின்றார். ”

மகிந்தவின் ஆட்சியில், பொது பல சேனா முஸ்லிம் களுக்கு எதிராகப் பரப்புரை செய்யத் தொடங்கியபோது, அதைப் பெரிதுபடுத்த வேண்டாம். அவர்கள் தானாக அடங்கிவிடுவார்கள் என சிலர் கூறினர். ஆனால்,அதை முளையில் கிள்ளி எறியாததால் அவர்களின் பரப்புரை மெல்ல மெல்ல வளர்ந்து இறுதியில் அழுத்கமவில் பெரும் கலவரமாக வெடித்தது. இந்த அனுபவத்தைக் கவனத்தில் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இனவாதம் எந்த இனத்தில் தோன்றினாலும் அது முளையில் கிள்ளியெறியப்பட வேண்டும்.நல்லிணக்கம் தொடர்பில் பேசிக்கொண்டிருந்தால் மாத்திரம் நல்லிணக்கம் ஏற்படாது.அதை நடை முறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

---

கச்சானை ஏன் தடை செய்ய வேண்டும். அதைச் சாப்பிடுபவர்கள் மனிதர்கள். அந்தக் கழிவுகளை உரிய இடங்களில் போட வேண்டியது தானே. நாகரிகம் வளர்ந்து விட்டது. மக்கள் நல்ல செயல்களை கைக்கொள்ள பழகுகிறார்கள் இல்லை.

*ஏரம்பமூர்த்தி மூர்த்தி*

வறிய மக்களின் வயிற்றில் அடிக்கும் செயல்.

*சோதிநாதன் தீபா*

முருகா அன்றாடம் உழைப்பவர் வயிற்றில் அடிக்கலாமா. ?
கச்சான் என்ன கஞ்சாவா ? கந்தா!

*விஜி*

கச்சான் கஞ்சா அல்ல. கச்சானை வாங்கிக் கோயில் வீதியில் சாப்பிடுபவர்கள் அவற்றின் கோதுகளை எல்லா இடத்திலும் போடுகிறார்கள். இதனால் ஆலய வீதி, பிரகாரம் தூய்மை குறைகிறது. இதனால் தான் ஆதீன முதல்வர் இவ்வாறு ஆதங்கமாகக் கூறியிருக்கிறார்.

*முத்துலிங்கம் பாபு*

இதை நம்பி வாழும் தமிழ் மக்கள் பாவம்.

*தனுசன் ரட்ணம்*

அதனைத் தொழிலாக கொண்டவர்களுக்கு வேறு தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பாரா ? (அனேகமாகக் கடதாசிப் பையில் தானே கச்சான் விற்பார்கள். அதனால் அதிக பாதிப்பில்லையே.)
கச்சானுக்கு முதல் கஞ்சாவைத் தான் தடை செய்யணும்.

*வித்தியா குருக்கள்*

தமிழனை அழிக்கிறது சிங்களவன் இல்லை. தமிழன்தான். கச்சான் விற்கின்ற எவரும் பரம்பரைப் பணக்காரர்கள் இல்லை.
கச்சான் விற்றாவது நேர்மையான வழியில் வாழ வேண்டும் என்ற முனைப்புடன் தொழிலை மேற்கொள்கிறார்கள். வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன முதல்வரே! இன்னும் ஐந்து வருடங்களில் நமது கலாசாரத் தொன்மையை மழுங்கடிக்க செய்யும் பல நிகழ்வுகள் நல்லூர் சூழலிலே நடைபெற்ற வண்ணம் உள்ளன.
அவற்றைத் தடுக்கப் பாருங்கள். அதை விடுத்து ஐந்து ரூபாய் இலாபத்துக்காக கச்சான் விற்பவர்களின் வயிற்றில் அடிக்கிற செயற்பாட்டில் ஈடுபடாதீர்கள்.

*நவீந்த் தர்மா*

## வறிய மக்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்

நல்லூரில் கச்சானைத் தடை செய்ய வேண்டும் என கடந்த 25.08.2016 உதயனின் முதற்பக்கத்திலிருந்த செய்தியால் மிகவும் வருத்தமடைகிறேன். அன்று தொட்டு இன்றுவரை ஆலய திருவிழாக்கள்,ஒரு புறம் ஆன்மிகத்தை வளர்ப்பதிலும் மறுபுறத்தே வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்குமான ஒரு மார்க்கமாகவே நோக்கப்படுகிறது. மாறாக கச்சான், சுண்டல் வியாபாரத்தை தடைசெய்வதால் ஆன்மிகம் நிலைநிறுத்தப்படுமென்பது வெறும் வார்த்தைப் பிரயோகமேயாகும். சுற்றுச்சூழல் சுகாதாரம் என்பது ஒவ்வொருவரின் மனதிலும் உதிக்க வேண்டும். வெறுமனே 5,000/ ரூபா தொடக்கம் 1,000/ ரூபா முலதனத்தை கொண்டு வியாபாரம் நடத்தும் அப்பாவிகளின் கடை நடத்துவதற்கான இட வாடகையென பெரும் தொகையை வரியாக அறவிட்டு அவர்களின் உழைப்பில் ஏதோ பெரிய அபிவிருத்தியைக் கண்டவர்களாக மாநகரசபையும், அதையும் முற்றாக தடைசெய்ய வேண்டும் என நல்லை அதீன முதல்வரும் கருத்து வெளியிட்டுள்ளமை மனம் வருந்தத்தக்கதாகும். உண்மையில் கச்சான், சுண்டல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே அத்தொழில் முயற்சியில் ஈடுபடுகின்றனர். அவர்கள் சட்டவிரோத செயல்களில் ஈடுபடவில்லையே? சுகாதார விதிமுறைகளை அனுசரித்தே வியாபாரத்தில் ஈடுபட சுற்றுச்சூழல் பிரிவினர் அனுமதித்துள்ளார்கள். விற்பனையின் பின் கழிவுப் பொருள்களை எங்கே போட வேண்டும், என்ன செய்யவேண்டும் என்ற விதிமுறைகளை விழிப்புணர்வூட்ட வேண்டியது அத்துறை சார்ந்தவர்களின் பணியாகும். எந்த வியாபாரத்திலும் கழிவுகள் வரும். அவற்றை எவ்வாறு கையாள்வது என்பது ஒவ்வொருவர் நடத்தையிலும் வரவேண்டும். அதற்கான விழிப்புணர்வுகளை சமூகத்திலே ஏற்படுத்துங்கள். ஆலயத் திருவிழாக்கள் வெறுமனே விரதத்தாலும் பக்தியாலும் பேணப்படுபவையல்ல. அவை சமூகத்தை ஒன்றிணைப்பதற்கான நல்வழிப்படுத்துவதற்கான வழிகளாகப் பார்க்கப்படவேண்டும். தங்களின் சமயப் பணி மேலும் தொடர வாழ்த்துக்கள்.

**தம்பிராசா, நல்லூர்**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத் திருத்தம் சாதகமில்லாததால் அமைச்சரைக் கொன்ற தொழிலாளர்



லபாஸ், ஓக.27
பொலிவியாவின் துணை உள்துறை அமைச்சர் றொனடொல்போ இலானிஸ் சுரங்கத் தொழிலாளர்களால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தம் சுரங்கத் தொழிலாளர்களுக்கு சாதகமாக அமையாததை அடுத்தே இந்தக் கொலை நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.
சட்டத் திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அவை வன்முறைகளாக மாறின. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிலர் இணைந்து உள்துறை அமைச்சரை தலைநகர் லபாஸில் இருந்து 160 கிலோமீற்றருக்கு அப்பால் கடத்திச் சென்றனர். அமைச்சர் கொல்லப்பட்டுள்ளார் என்று அரசு நேற்றுமுன்தினம் அறிவித்தது.
ஆர்ப்பாட்டங்கள், வன்முறைகளில் இதுவரை 17 பொலிஸார் காயமடைந்தனர். ஆர்ப்பாட்டம் செய்த இருவர் உயிரிழந்தனர்.
சட்டத் திருத்தத்தில் சம்பளம், எல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்தே ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகின்றது. (ற-ரி4)

## ஐ.எஸ்ஸிடம் இருந்து தப்ப தனக்குத் தானே தீ மூட்டிய பெண்!

பெர்லின், ஓக.27
ஐ.எஸ். அமைப்பினரின் பாலியல் வதைகளில் இருந்து தப்புவதற்காக தனக்குத் தானே தீ வைத்தார் யாசிடி இனப் பெண் ஒருவர். அழகைக் கெடுத்துக் கொள்வதன் மூலம் தீவிரவாதிகளின் பிடியில் இருந்து தப்பிக் கொள்ள முடியும் என்று கருதியே அவர் இவ்வாறு செய்துள்ளார்.
ஈராக்கில் நடக்கும் போரால் தனது குடும்பத்தை விட்டுப் பிரியும் நிலை குறித்த பெண்ணுக்கு ஏற்பட்டது. அவருக்கு வயது 18. இவர் ஐ.எஸ். அமைப்பினரால் பிடிக்கப்பட்டார். பல தடவைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட அவர் மனமுடைந்து உடலுக்குத் தீ வைக்கும் முடிவை எடுத்துள்ளார்.
தனக்குத் தானே தீ வைத்த அவர், ஒருவழியாக தொண்டு நிறுவனங்களில் உதவியுடன் ஜேர்மனிய பெண்கள் முகாமில் சேர்க்கப்பட்டார். அந்த முகாமில் சுமார் ஆயிரத்து 100 பெண்கள் உள்ளனர். பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளான அவர்களுக்கு உடல், உளச் சிகிச்சைகள் அங்கு வழங்கப்படுகின்றன.
இந்தப் பெண்ணின் உடலில் 80 சதவீத தீக்காயங்கள் காணப்படுகின்றன. அவற்றைக் குணப்படுத்த 15 அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.- என்று அங்குள்ள மருத்துவர் தெரிவித்தார்.
ஜேர்மனிக்கு இடம்பெயர்ந்துள்ளவர்களில் 40 சதவீதமானவர்கள் தற்கொலை உணர்வுடன் இருக்கின்றனர். அவர்களில் 5 சதவீதத்தினருக்கு மட்டுமே சிகிச்சைகள் வழங்கக் கூடிய நிலை காணப்படுகின்றது - என்றும் மருத்துவர் குறிப்பிட்டார்.
ஐ.எஸ். அமைப்பு யாசிடி இனத்தவர்களை சிறுபான்மையினராகப் பிரகடனப்படுத்தியுள்ளது.
யாசிடி இனப் பெண்களை அடிமைகளாகப் பிடித்து வைப்பதுடன், அவர்களை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குகின்றது. ஐ.எஸ். அமைப்பினரிடம் சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான யாசிடி இனப் பெண்கள் சிக்கியுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
அங்கிருந்து தப்பி முகாம்களுக்கு வந்த பெண்களில் 60க்கும் மேற்பட்டவர்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர். உள ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தன்னம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்வையும் நாம் வழக்குகின்றோம் - என்று பெண்கள் பாதுகாப்பு முகாமில் கடமையாற்றும் மருத்துவர் தெரிவித்தார்.
ஐ.எஸ். அமைப்பினர் யாசிடி இனத்தவர்களை திட்டமிட்டு இனச்சுத்திகரிப்புச் செய்கின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.(ற-ரி4)




# முடிவுக்கு வந்தது கொலம்பிய போர்

### அரசும், கிளர்ச்சியாளர்களும் அமைதிக்கு உடன்பாடு




பொகோட்டா, ஓக.27
கொலம்பியா அரசுக்கும் பார்க் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேற்றுமுன்தினம் வரலாற்றுச் சிறப்பு மிக்க போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது. 52 ஆண்டுகளாக நிலவிய உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. கொலம்பிய மக்கள் இதனை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடினர்.
கியூபா புரட்சி வெற்றி பெற்றதும் கொலம்பியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது. 52 ஆண்டுகளாக நடந்த போரால் 2 லட்சத்து 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். 50 லட்சம் பேர் அகதிகளாகினர். பலர் காணாமல் போயினர். பார்க் கிளர்ச்சியாளர்கள் நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றி தனி ஆட்சியை நிறுவினர்.
பார்க் அமைப்பு தமது வருமானத்துக்காக போதைப் பொருள் கடத்தல்களிலும் ஈடுபட்டது. பல பிரமுகர்களையும் கடத்தியது. தென்அமெரிக்காவை அச்சுறுத்தும் அமைப்பாக இது இருந்தது. ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புகள் பார்க் அமைப்பை தீவிரவாத அமைப்பாக அறிவித்தன.
அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பேச்சு நடத்தப்பட்டது. 2002ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பேச்சு பயனளிக்கவில்லை. 2012ஆம் ஆண்டு மீண்டும் பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. பலகட்டப் பேச்சின் பின்னர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ஜுவன் மன்னுவெலுக்கும், பார்க் அமைப்பின் தலைவருக்கும் இடையே போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
பார்க் அமைப்பின் கோரிக்கையான அரசமைப்பு மாற்றம் செய்து கொடுக்கப்படும் என்று அரசு வாக்குறுதி அளித்தது. பார்க் அமைப்பு ஜனநாயக ஓட்டத்தில் இணைந்து தேர்தலில் போட்டியிடுவோம் என்று அறிவித்தது.
கொலம்பியா மக்கள் இதனை மிகப் பெரும் அளவில் கொண்டாடுகின்றனர். உள்நாட்டுப் போர் முடிவுறுத்தப்பட்டமைக்கு உலக நாடுகள் பலவும் வாழ்த்துத் தெரிவித்தன.
கியூபா, அமெரிக்கா ஜனாதிபதிகளும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தனர். (ற-ரி4)

# விடாது அதிர்கின்றது நிலம் இத்தாலியில் அவசர நிலை



ரோம், ஓக.27
இத்தாலியில் தொடர்ந்தும் நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன. அதனால் அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. கடந்த புதன்கிழமை ஏற்பட்ட நில அதிர்வால் 267 பேர் உயிரிழந்தனர். 400 பேர் காயமடைந்தனர்.
அமட்றாஸில் மட்டும் 200 பேர் உயிரிழந்தனர். மீட்புப் பணிகள் தற்போதும் நடைபெறுகின்றன. 5 ஆயிரம் மீட்புப் படையினர் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சுகின்றனர்.
மீள் கட்டுமானத்துக்காக 50 மில்லியன் யூரோ ஒதுக்கப்பட்டுள்ளது என்று இத்தாலிப் பிரதமர் மற்றோ றென்றி தெரிவித்தார்.
நேற்றுக் காலையும் மீண்டும் நில அதிர்வு பதிவாகியுள்ளது. 4.7 ரிச்டர் அளவில் நில நடுக்கம் உணரப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. உடனடியாக அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மோசமான பூங்காவிலிருந்து மீட்கப்பட்டன விலங்குகள்


கைசை, ஓக.27

உலகின் மிக மோசமான வன விலங்குப் பூங்கா என வர்ணிக்கப்படும் காசாவில் உள்ள கான் யுனிஸ் பூங்காவில் இருந்த விலங்குகள் மீட்கப்பட்டன. அவை புதிய காப்பகங்களுக்கு அனுப்பப்பட்டன. விமானம் மூலம் 15க்கும் மேற்பட்ட விலங்குகள் தென்னாபிரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

கான் யுனிஸ் பூங்காவில் இருந்த லசிஸ் என்ற பெயர் கொண்ட புலி அனைவரது கவனத்தையும் கவர்ந்தது.

இந்தப் புலி வகை உலகில் அருகிவரும் உயிரினப் பட்டியலில் சேர்க்கப்பட்டதாகும். தென்னாபிரிக்காவில் இவ்வாறான 100 புலிகள் பாதுகாக்கப்படுகின்றன. லசிஸ்ஸும் அங்கு கொண்டு செல்லப்படுகின்றது.

காசாவில் 2007ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகின்றது. அதனால் அங்குள்ள விலங்குகள் பூங்காவைப் பராமரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. (ற-ரி4)



இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் கடந்த சில நாள்களாக பெய்யும் கன மழையால் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. நகரங்களுக்குள் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் போக்குவரத்துக்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. அலகபாத் நகர் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. தரைவழிப் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் இந்திய இராணுவ ஹெலிகொப்டர்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு உலர் உணவுகளை வழங்குகின்றன. (ற-ரி4)

# துருக்கியில் குண்டுத் தாக்குதல்

அங்காரா, ஓக.27



தென்கிழக்கு துருக்கியின் சிஸ்ரே நகரில் பொலிஸ் நிலையத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. 9 பேர் கொல்லப்பட்டனர். 64 பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் மூவர் பொலிஸார். நேற்றுக்காலை இந்தச் சம்பவம் நடந்தது. பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நிறுத்தப்பட்ட காரில் இருந்து வெடிப்பு நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் அந்தக் காட்சிகள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிரியாவில் உள்ள ஐ.எஸ். அமைப்பு துருக்கிமீது தாக்குதல் நடத்துகின்றது. நேற்றுமுன்தினம் சிரிய ஜனாதிபதியின் அனுமதி இன்றி சிரிய எல்லைக்குள் தாக்குதல் நடத்தியது. எனினும் துருக்கிஅரசு ஐ.எஸ். அமைப்பை விட குர்திஷ் போராளிகள் மீதே இலக்குவைத்து வருகின்றது என்று கூறப்படுகின்றது. (ற-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? மகரம்

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18, ஆடி அமாவாசை சுவடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுபப்பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



### உத்தராடம் 2, 3, 4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 பாதங்கள் வரை

குலதெய்வ வழிபாடும், இஷ்ட தெய்வ வழிபாடும் உங்களுக்குக் கை கொடுக்கும்.

குருபகவான், சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை): கல்யாணக் கனவுகள் நன வாகும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பீர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று மகிழும் வாய்ப்புக் கிட்டும். தாய்வழி ஆதரவு உண்டு. பெற்றோர் வழி ஒத்துழைப்புக் கூடுதலாகவே கிடைக்கும்.

குருபகவான், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை): சொத்துக்கள் சேரும்; சொந்தங்கள் போற்றும். மற்றவர்களைப் போல வாழ்க்கை நடத்தாமல் புதுமையாக வாழ வேண்டுமென்று நினைப்பீர்கள். தொழில் தொடங்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

மகர ராசியில் பிறந்த பெண்களுக்கு மகத்தான நேரம் இது. தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறும். திருமண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அன்னியோன்யம் அதிகரிக்கும். புகுந்த வீட்டில் உங்கள் மதிப்பும், மரியாதையும் உயரும். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு நாக சாந்தி பரிகாரங்கள் செய்வதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கும். பணிநிரந்தரம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். உத்தியோக உயர்வு மட்டுமல்லாமல் ஊதிய உயர்வும் கிடைக்கும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணப் பொருள்களை வாங்குவதோடு வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்களையும் வாங்கி மகிழ்வீர்கள்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

இந்தமுறை குரு வக்ரம் பெறுவதோடு அதிசாரமாக துலாம் ராசிக்கும் செல்கிறார். அவ்வாறு செல்லும் பொழுது 2,4,6 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே பொருளாதார நிலை உயரும். குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். ஆனால், அதைச் சமாளித்து விடுவீர்கள். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். வழக்குகள் ஜெயிக்கும். குருவின் வக்ர காலத்தில் ஓரளவுதான் நன்மை கிடைக்கும். பயணத்தால் பலன் கிடைக்கும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். வீடு கட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். வெளி வட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். குறுகிய காலத்தில் முன்னேற்றங்கள் வந்து சேரும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு வியப்பர். கொடுக்கல், வாங்கல்களில் ஏற்பட்ட மனக்கசப்புக்கள் மாறும். குருவை இக்காலத்தில் வழிபாடு செய்வதன் மூலமும், யோகபலம் பெற்ற நாளில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலமும், சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வதன் மூலமும் சந்தோஷத்தைத் தக்கவைத்துக் கொள்ள இயலும்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

ராசிநாதன் சனி என்பதால் சனிக் கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் நல்ல வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்ள இயலும். கும்பகோணம் அருகிலுள்ள உப்பிலியப்பன் கோவில் வழிபாடு ஒப்பற்ற வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

# விச ஊசி விசர் ஊசி விசம ஊசி



மருத்துவர் சி .யமுனாநந்தா

தமிழீழ விடுதலைப்போராளிகளுக்கு தடுப்பு முகாம்களில் போடப்பட்ட ஊசி தொடர்பாக பெரிய சமூகபயம் தற்போது ஏற்பட்டு உள்ளது. ஊடகங்களில் பல போராளிகள் புற்றுநோயினால் இறந்த தகவல்களை மேற்கோளாகக் கொண்டு இப்பயம் அதிகரித்துள்ளது. ஊடகத் தகவல்களின் அடிப்படையில் இவ்வாறு இறந்தோர் தொகை 107 ஆக கூறப்படுகின்றது. புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளில் புற்றுநோய் ஏற்படும் சார்பு அபாயம் 2.4 ஆகும். மேலும் இறந்த முழுப் போராளிகளின் தகவல்கள் முறையாகத் திரட்டப்படவில்லை. எனவே, இந்த இறப்பு வீதம் இன்னும் அதிகமாக இருக்கலாம்.

இந்தத் தகவல்களை அடுத்து பரிசோதனைக்காக வைத்தியசாலைகளைப் பல போராளிகள் நாடுகின்றனர். அவர்கள் தமக்கு ஊசி ஏற்றப்பட்ட வரலாற்றைக் கூறுகின்றனர். தங்களுக்கும் புற்றுநோய் ஏற்பட்டு உள்ளதா எனப் பயப்படுகின்றனர். தங்களுக்குப் புற்றுநோய் இனிமேலும் ஏற்படுமா என வினவுகின்றனர்.

உண்மையில் ஒரு நபருக்குப் போடப்பட்ட ஊசி யாது எனத் தெரியாது, அந்த ஊசியின் பாதிப்புக்களை மருத்துவப் பரிசோதனையினால் அறியமுடியாது. எனவே, போடப்பட்ட ஊசியின் உண்மைத் தன்மையை அறிந்தே ஒரு நபரில் பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறின்றி செய்யப்படும் பரிசோதனைகள் "போகும் இடம் தெரியாது பயணிப்பது போல்" ஆகும்.

பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் முறைகள் அதிக வலுவுள்ள முறைகளாக (High sensitivity and high speciticity) அமைய வேண்டும்.

பின்வரும் பரிசோதனைகள் செய்யப்படலாம். ஆனால், எவற்றைச் செய்வது என்பதை நிபுணத்துவ ஆலோசனை மூலமே தீர்மானிக்க வேண்டும். இதற்கு உலக சுகாதார நிறுவனம் உதவவேண்டும்.

1.உடலில் உள்ள கொழுப்புச் சேமிப்புக்களில் இரசாயனங்கள்
2. பார உலோகங்கள்
3. நிர்ப்பீடன செயற்றிறன்
4. Anti oxidont சோதனைகள்
5. ஈரலின் செயற்பாட்டுச் சோதனைகள்
6. ஓமோன்களின் அளவு
7. என்பின் அடர்த்தி பற்றிய படங்கள்
8. மூளையின் (SPECT) படம்
9. உளநிலை பற்றிய சோதனைகள்

**உண்மையில் ஒரு நபருக்குப் போடப்பட்ட ஊசி யாது எனத் தெரியாது. அந்த ஊசியின் பாதிப்புக்களை மருத்துவப் பரிசோதனையினால் அறியமுடியாது. எனவே, போடப்பட்ட ஊசியின் உண்மைத்தன்மையை அறிந்தே ஒரு நபரில் பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும்.**

10. தன்னியக்க நரம்புகளின் செயற்றிறன் பற்றிய சோதனைகள்

மேற்கூறிய சோதனைகள் யாவும் சாதாரணமாக இருந்தால்கூட ஒருவருக்குப் புற்றுநோய் இனிமேல் ஏற்படுமா என்பதனை உறுதிப்படக்கூறமுடியாது. எனவே மருத்துவர்களால் ஒருவருக்கு நச்சு ஊசி போடப்படவில்லை என உறுதியாக மருத்துவப் பரிசோதனைமூலம் கூறமுடியாது.

அடுத்து நச்சு ஊசிகளின் தாக்கம் ஒருவரை மன நோயாளியாகவும் மாற்றக்கூடும். எனவே தற்போது ஏற்படுகின்ற புற்றுநோய் பயம் (Cancer phobia conier phobro) ஒரு பெரிய பிரச்சினையாக எமது பகுதியில் உருவெடுத்துள்ளது. பதற்ற நிலையில் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் முதல் முக்கியமானதாகும். அடுத்து பாதிக்கப்பட்டவர்கள் பயத்தில் சகல மருத்துவ பரிசோதனைகளையும் குறிப்பாக தனியார் வைத்தியசாலைகளில் செய்ய முனைவர். இது வீண் பண விரயத்தையே ஏற்படுத்தும். இந்த விடயத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனை எமக்கு அவசியம்.

Health as a bridge for peace என்ற சுகம் சமாதானத்துக்கான பாலம் உலக சுகாதார நிறுவனத்தின் கோட்பாட்டையே அசைய வைக்கின்ற சம்பவங்களை இன்று நாம் காண்கின்றோம். குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா ஒசாமா பின்லேடனை அடையாளப்படுத்த பாகிஸ்தானில் போலியோ தடுப்பூசி செயற்றிட்டத்தைப் பாவித்தது. இதற்குத் துணை நின்ற பாகிஸ்தான் மருத்துவர் பாகிஸ்தான் அரசால் பின்னர் கைது செய்யப்பட்டார். இவ்வாறு அரச மருத்துவ நெறிமுறைகளை இராணுவச் செயற்பாட்டிற்காக குறிப்பாக பயங்கர வாதத்தை அடக்குவதற்குப் பயன்படுத்தலாம் என்ற நிலை உலக வல்லரசுகளிடம் உள்ளது. சீனா, ரஷ்யா போன்ற நாடுகளும் இதில் சளைத்தவை அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயின் கருவறைக்கு ஒப்பான ஆசிரியரின் வகுப்பறை

பழனித்துரை தர்மகுமாரன்

எண்ணையும், எழுத்தையும் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்கள் எண்ணத்தகாத துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவது மிகவும் கவலைக்குரிய விடயமே. இதனால் ஆசிரியத் தொழில் கறைபடிந்துள்ளதுடன் மாணவர்கள், பெற்றோர்கள் வைத்துள்ள நம்பிக்கைகளையும் தகர்த்தெறிந்து தவிடுபொடியாக்கியுள்ளது.

ஆசிரியத் தொழில் என்பது புனிதமானது. மாணவர்களுக்காகத் தம்மை அர்ப்பணித்து அறிவைப் புகட்டும் ஆசான் தன்னையும் கட்டுப்படுத்தி மாணவர்களையும் கட்டுப்படுத்தி வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல மாணவர்களின் உள்ளத்தில் நல்ல எண்ணக் கருக்களையும் புகட்டி அவர்களின் திறமைகளைத் தட்டிக் கொடுக்க வேண்டும் கல்வி, இணைப் பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை முன்னிறுத்தி ஆளுமையுள்ள மாணவர்களாக உருவாக்கிச் சமூகத்தில் நல்ல பிரஜையாக வாழவைக்க வேண்டிய ஆசிரியர்கள் வேலியே பயிரை மேய்வதற்கு ஒப்பான காரியங்களில் ஈடுபடுவது அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்களை அவமானப் படுத்தியுள்ளது.

இன்று ஆசிரியன் என்று சொன்னாலே வெட்கப்படும் அளவுக்கு ஒரு சில ஆசிரியர்களினால் இந்தத் தொழில் கேவலப்படுத்தப் பட்டுள்ளது. அதுமட்டுமன்றி கல்வித்துறையிலும் பாதகமான நிலையையே உருவாக்கும். அதாவது ஆசிரியன் மீது வைத்துள்ள அதீத நம்பிக்கை வீணடிக்கப்பட்டுள்ளதுடன் விரும்பியும், அன்பாகவும் கல்வி கற்பதற்கு மாணவர்களுக்கு அக்கறையற்ற நிலை உருவாகியுள்ளது. ஆசிரியர்கள் எல்லோரையும் ஒரே நிலையில் பார்க்கக் கூடிய சூழல் உருவாகியுள்ளதுடன் பெண்கள் மீண்டும் ஒதுங்கிப் பழைய நிலமைக்குத் தள்ளப்படலாம்.

இவ்வாறான நிலமைகளைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆசிரியனும் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நம்பிக்கை உடையவனாகவும், நல்லொழுக்கம் உள்ளவனாகவும் நிரூபித்துக் காட்ட வேண்டும். ஆனால் எல்லா ஆசிரியர்களும் நல்லவர்கள், ஒரு சில ஆசிரியர்கள் தான் தவறு விடுகின்றார்கள் என்று கூறினாலும்,

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியனைப் பார்த்து மாணவர்கள் கேட்டால் மௌனத்தைத் தவிர வேறு எதனையும் தெரிவிக்க முடியாது. எனவே ஆசிரியன் என்பவன் சாதாரணமானவன் அல்ல. ஏனெனில் உலகிலேயே ஆசிரியன் ஒருவனால் மட்டுமே ஆசிரியனையும் உருவாக்க முடியும். ஏனைய மருத்துவர், பொறியியலாளர், சட்டத்தரணி, முகாமையாளர், ஊடகவியலாளர் போன்ற தொழில்சார் நிபுணர்களையும் தலைவர்களையும் சமூக ஆர்வலர்களையும் உருவாக்க முடியும்.

ஆனால் ஒரு வைத்தியரினால் இன்னொரு வைத்தியரை உருவாக்க முடியாது. அதேபோல ஏனைய தொழில் துறைசார்ந்தவர்களாலும் உருவாக்க முடியாது. எனவே ஆசிரியன் ஒருவனே இந்த வல்லமைக்கு உட்பட்டு இருப்பதனால் கல்வி அறிவை மட்டும் புகட்டுபவனாக இருக்காது சமூகக் காவலனாகவும் இருக்க வேண்டும்.

ஆசிரியன் அறிவுள்ள, ஒழுக்கமுள்ள, பண்பாடுள்ள ஒரு சமூகத்தை உருவாக்கவே அவதாரம் எடுக்கிறான். இந்த அவதாரம் மாணவர்களை நல்வழிப் படுத்தும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தான் 6 மணித்தியாலங்களுக்கு மேல் பெற்றோர்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி மனநிறைவுடன் தமது தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

பெற்றோர்கள் தமது உறவினர்கள், அயலவர்களிடம் இல்லாத நம்பிக்கையை ஆசிரியரிடம் வைத்துக்கொள்வதனாலேயே எந்தவித தயக்கமும், சந்தேகமுமின்றி கல்வியிலே தமது பிள்ளைகள் உயர்ந்து வருவார்கள் என்ற அவாவில் ஆசிரியனின் கைகளில் ஒப்படைத்து விடுகின்றனர்.

உலகிலேயே ஆசிரியன் போற்றப் படுகின்றான். அதற்கு ஒப்பாக, இணையாக எதையும் கருதவில்லை. உலகிலே இரண்டு புனிதமான இடங்கள் உண்டு. ஒன்று தாயின் கருவறை. இன்னொன்று ஆசிரியனின் வகுப்பறை.

தாயின் கருவறையில் ஒருவன் உயிரைப் பெறுகின்றான்.

ஆசிரியனின் வகுப்பறையில் அவன் அறிவைப் பெறுகின்றான். எனவே இந்தத் தொழில் ஆனது வியாபார நோக்கம் கொண்டது அல்ல. இங்கு இலாபத்தை எதிர் பார்த்து வேலை செய்ய முடியாது. சேவையாகவும், சமூக அபிவிருத்திக்காகவும், நாட்டின் நன்மை கருதியுமே செயற்படவேண்டும். இதனால்தான் ஒரு வேலையை தனது வாழ்நாள் முழுவதுமாகச் சலிப்பின்றிச் செய்யும் வரம் ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப் பட்டுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு இலாப நோக்கம் கொண்டு செயற்படுபவர்கள் வேறு தொழில்களைத் தெரிவு செய்து தம்மைத் திருப்திப்படுத்துவதுடன் புனிதமான ஆசிரியத் தொழிலை மாசுபடுத்தாமல் பாதுகாக்கலாம்.

> ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியனைப் பார்த்து மாணவர்கள் கேட்டால் மௌனத்தைத் தவிர வேறு எதனையும் தெரிவிக்க முடியாது. எனவே ஆசிரியன் என்பவன் சாதாரண மானவன் அல்லன். ஏனெனில் உலகிலேயே ஆசிரியன் ஒருவனால் மட்டுமே ஆசிரியனையும் உருவாக்க முடியும்.

“நம்மை விட வளர்ந்து விட்டானே என்ற பொறாமைப்படாத ஒரே ஒரு தொழில் ஆசிரியத்துவமே” இது மட்டுமன்றி மாணவன் சமூகத்தில் உயர்ந்தவனாகவும், உயர்ந்த தொழில்வாய்ப்பைப் பெற வேண்டுமென்பதற்காகவும், உயர்ந்த இலட்சியத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகவுமே ஆசிரியன் சிறு தண்டனைகளை வழங்குகின்றான்.

மாணவர்களின் நன்மை கருதிச் செயற்படும் ஆசிரியன் சட்டத்தில் தண்டிப்பதற்கு இடமில்லை என்றதுமே என்ன வழியைப் பின்பற்றலாம். மாணவர்களை வழிப்படுத்துவதற்கு என சிந்திக்கும் காலம் உருவாகியுள்ளது. ஏனெனில் கில்லர் என்ற அறிஞர் கூறியது போல கண்டிப்பான ஆசிரியனின் கைகள்கட்டப்படும்போது வருங்கால குற்றவாளிகளின் கைகள் அவிழ்த்து விடப்படுகின்றன. சமுதாயத்தின் நம்பிக்கை வெட்டப்படுகின்றது இதுவே இன்றைய நிலையுமாகும்.

இல்லை ஏனில் நமது பண்பாடு, கலாசாரம் என்று மார்பு தட்டிப் பேசும் நாம் மேலைத்தேய சட்டங்களை பின்பற்றினால் அல்லது மேலைத்தேய சட்டங்கள் நம்மை கட்டிப் போட்டால் மேலைத்தேய கலாசாரம் எம்மைப் படிப்படியாக ஆக்கிரமிக்கத் தொடங்கி விடும். எமது சமூக கட்டமைப்பு ஆக்கிரமிக்க தொடங்கிவிடும் எமது சமூக கட்டமைப்பு சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப் படும் சூழல் உருவாகலாம்.

இதனைத் தவிர்ப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் அன்பினால் மாணவர்களை கட்டுப்படுத்துவதற்கு எல்லா மாணவர்களும் உளரீதியாக ஒரே நிலையில் இருக்க மாட்டார்கள். அதாவது சமூக பழக்க வழக்கத்திற்கு ஏற்ப சிலர் ஆன்மிகமாகவும், சிலர் அகிம்சையானவர்களாகவும், சிலர் பொறுமை அடக்கம், கீழ்ப்படிவு உடையவர்களாகவும் இருப்பார்கள். ஒரு சிலமாணவர்கள் இதற்கு அப்பாற்பட்டு வன்ம சிந்தனை உடையவர்களாகக்காணப்படுவர். இவர்களைக் கட்டுப்படுத்த சிறு சிறு தண்டனைகளை வழங்குவதன் மூலமே அவர்களை நல் வழிப்படுத்த வேண்டும். உதாரணமாகத் துணியை வெட்டினால் தான் அழகிய சட்டையைத் தைக்க முடியும், மூங்கில் தடியில் துளைகளை இட்டால்தான் சிறந்த புல்லாங்குழலை உருவாக்க முடியும், இரும்பை நெருப்பில் காய்ச்சினால்தான் சிறந்த கத்தியை உருவாக்க முடியும். இதே போலவே ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாகக் காணப்படாது என்ற பழமொழிக்கு ஏற்ப வகுப்பறையில் உள்ள அனைத்து மாணவர்களும் ஒரேமாதிரி இருக்கமாட்டார்கள். எனவே ஒருவருக்கு அன்பாகச் சொன்னால் புரியும், பண்பாகச் சொன்னாலும் புரியும், சைகை (அசைவு) யின் மூலமும் கட்டுப்படுத்தலாம். இதற்கு அப்பாற்பட்ட மாணவர்களை கட்டுப் படுத்த ஆசிரியன் சில விடயங்களைக் கையாளுகின்றான். மாணவர்களின் நன்மை கருதியே இவற்றைச் செய்கிறான் என்பதை பெற்றோர்கள் உணர்ந்தால் எந்தப் பிரச்சினையும் ஏற்படப்போவதில்லை.

ஆனால் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் ஆசிரியர்களை ஆசிரியத் தொழிலில் இருந்து முற்றுமுழுதாக அகற்றிவிட வேண்டும். ஏனெனில் சட்டத்திற்கு முரணானதோ, சமூகத்திற்கு முரணானதோ என்ற கருத்துக்கு அப்பால் தமிழினத்தின் பண்பாடு, கலாசாரம் என்பவற்றை அடியோடு ஈடாடவைத்து மேலைத்தேய கலாசாரத்தை நம்மில் புகுத்துவதற்கு இது ஒப்பான செயலாகும்.

உலகம் போற்றும் பண்பாட்டைக் கொண்ட எமது இனம் ஆசிரியத்துவத்தின் மூலமே எதிர்கால சந்ததியினருக்கு எமது வரலாற்றை தெளிவுபடுத்தி தெரியப்படுத்தி வருகின்றது. இதனை ஒவ்வொரு ஆசிரியனும் மனதிலே பதித்து செயற்படவேண்டும்.

**வேரை இழந்த மரமும்**
**வரலாற்றை இழந்த இனமும்**
**வாழ்ந்ததாக சரித்திரமில்லை**

*கட்டுரையாளர்,*
*ஆசிரியர் ,உடுவில் மகளிர் கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்



1810 - நெப்போலியப் போர். பிரிட்டிஷ் றோயல் கடற்படை பிரான்ஸின் கிறான்ட் துறைமுகத்தைக் கைப்பற்றும் முயற்சியை பிரான்ஸ் கடற்படை தோற்கடித்தது.

1828 - சிஸ்ப்லரைன் போரின்போது பிரேஸில் மற்றும் ஆர்ஜென்ரீனா இடையே அமைதிப் பேச்சுக்கு அனுசரணையாக ஐக்கிய இராச்சியம் செயற்பட்ட நிலையில் உருகுவே சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது.

1859 - பெனிசுவெலேனியாவில் பெற்றோலியம் கண்டுபிடிக் கப்பட்டதையடுத்து, உலகின் முதலாவது வர்த்தக ரீதியிலான எண்ணெய்க் கிணறு வெற்றிகரமாகச் செயற்படத் தொடங்கியது.

1883 - உலக வரலாற்றிலேயே மிகக் குறைந்தளவு நேரத்திலாக (9.00 - 9.45) போர் ஐக்கிய இராச்சியத்துக்கும், சன் ஷிபாருக்குமிடையே இடம்பெற்றது.

1916 - ரோமானிய இராச்சியம் ஒஸ்ரியா, ஹங்கேரி மீது போர்ப் பிரகடனம் செய்து, முதலாம் உலகப் போரில் கூட்டுப்படைகள் சார்பில் களமிறங்கியது.

1957 - மலேசிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1962 - நாஸாவால், வீனஸ் கிரகத்துக்கான ஆளில்லா விண்ஓடம் மரினர் - 2 அனுப்பப்பட்டது.

1971 - ஆபிரிக்க நாடான சாட்டில் மேற்கொள்ளப்பட்ட சதிப்புரட்சி தோல்வி கண்டது. இதில் எகிப்தின் தலையீடு இருந்ததாகக் கூறிய சாட் நாடு எகிப்துடனான இராஜதந்திர உறவை முறித்துக்கொண்டது.

1979 - தற்காலிக ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் குண்டுத்தாக்குதலில், பிரித்தானியாவின் ஓய்வு பெற்ற அட்மிரல் மவுண்பேட்டன் பிரபுவும் மற்றும் 3பேரும், அயர்லாந்துக் குடியரசான சிலிகோவில், விடுமுறையில் படகில் பயணித்தபோது கொல்லப்பட்டனர். அதன் சிலமணி நேரத்தின் பின்னர் 18 பிரித்தானிய இராணுவப் படையினர் வட அயர்லாந்தில் பதுங்கித் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

1985 - நைஜீரிய அரசு அமைதியான முறையில், இராணுவத் தலைவர் மேஜர் ஜெனரல் இப்ராஹீம் பபஞ்சிபாவால் வீழ்த்தப்பட்டது.

1991 - ஐரோப்பிய சமூகம் போல்டிக் நாடுகளான எஸ்தோனியா, லத்வியா மற்றும் லிதுவேனியாவின் சுதந்திரத்தை அங்கீகரித்தது.

1992 - பலாலி முகாம் கைதிகள் சிலர் களுத்துறைக்கு இடமாற்றம்.

1995 - வாவியில் சடலங்கள் தொடர்பாகக் கைதானோரில் இராணுவக் கப்டன் மற்றும் அதிரடிப்படை இன்ஸ்பெக்டர் உட்பட 64 பேர் மீது விசாரணை.

2005 - சமாதானத்தின் பெயரால் அளவுக்கு மீறி நோர்வே தலையிடுவதாக அநுரா குற்றச்சாட்டு.

2006 - மோதலை நிறுத்தி மக்களை மீளக் குடியமர்த்தும் வரை முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் சேரவே மாட்டாது. எம்.ரி.ஹசன் அலி தெரிவிப்பு.

2013 - இந்தியா உத்தரப் பிரதேச முஷாபர் நகரில் இரண்டு சமய சமூகங்களிடையே வன்முறை வெடித்தது.

# பூனை அண்ணா

பானை உருட்டும் பூனையண்ணா
பாலைக் குடிக்கும் பூனையண்ணா
புலியெனப் போல மீசையுண்டாம்
புதுமையான பூனையண்ணா
மாமி வீட்டுப் பூனையண்ணா
மண்ணிற மேனி பூனையண்ணா
காலையில் நித்திரை செய்வாராம்
கண்களை மூடிக் கிடப்பாராம்
மாலை வந்தால் விழிப்பாராம்
மகிழ்வாய் இரவில் திரிவாராம்
எலியைப் பிடிக்க இரவிரவாய்
எல்லா இடமும் செல்வாராம்





# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# மூன்று மந்திரங்கள்!

ஒரு காட்டிலே நரியொன்று வாழ்ந்து வந்தது. காடு மலை எல்லாம் கடந்து வந்ததில், வெயில் கொடுமை தாங்க முடியாமல் தவித்தது அந்த நரி. மரங்கள் காய்ந்து பட்டுப்போயிருந்தன. தண்ணீர் இருந்த குட்டைகள் வறண்டு இருந்தன.

"கடவுளே வெயில் கொடுமை தாங்க முடியலையே. இந்த நேரத்தில, குகையைவிட்டு வந்தது தப்பு. தண்ணியாவது குடிக்கலாம் எண்டு பார்த்தா, ஏரி, குளம் எல்லாம் வத்திப்போயிருக்கு. கடவுளே காப்பாத்து" என்று புலம்பியவாறு சுருண்டு விழுந்துவிட்டது.


நரியின் அபயக்குரலைக் கேட்ட வனதேவதை, அங்கே வந்தது. "நரியே, உனக்கு மூன்று மந்திரங்களைச் சொல்லித் தருகின்றேன். ஒவ்வொரு மந்திரத்தையும் ஒரு முறைதான் பயன்படுத்த முடியும். ஆகவே, நல்ல விடயங்களுக்காகப் பயன்படுத்து. கெட்ட எண்ணத்தோடு உச்சரித்தால், மந்திரம் பலிக்காது" என்று நரியின் காதில் மந்திர வார்த்தைகளைக் கூறிவிட்டு மறைந்தது.

கனவோ, நனவோ... சோதித்துப் பார்ப்போம். குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று முதல் மந்திரத்தை உச்சரித்தது. உடனே, அருகில் புதிதாக ஒரு குட்டை உருவாகி, தண்ணீர் நிரம்பியது. ஆச்சரியம் அடைந்த நரி, தேவதை வந்தது உண்மைதான் எனச் சந்தோசப்பட்டது. குட்டை நீரை வயிறு நிரம்பக் குடித்தது. தாகம் தணிந்ததும் ஓய்வெடுக்க விரும்பியது. காய்ந்து போயிருக்கும் மரங்கள் பசுமையாக மாறினால், நிழலும், குளிர்ச்சியும் கிடைக்கும் என்று இரண்டாவது மந்திரத்தைக் கூறியது.

அடுத்த நொடி, காடெங்கும் பசுமையான மரங்கள் தலையசைத்து காற்றை வீசின. தான் நினைப்பது உடனே செயல்வடிவம் பெறுவதை எண்ணி, நரிக்கு பூரிப்பு. மரத்தடியில் படுத்து ஓய்வெடுத்தது. அப்போது, அந்த வழியாக வந்த இரண்டு யானைகள் பேசிக் கொள்வதை, கண்களை மூடிக் கேட்டது நரி.

"ரொம்பவே ஆச்சரியமாக இருக்கிறது. காலையில் காய்ந்து கிடந்த ஏரி, குட்டை எல்லாம் நிரம்பி இருக்கு. மரங்களும் பசுமையா இருக்கு. இந்த அதிசயத்தை சிங்கராஜாவிடம் சொல்லணும்" என்றவாறு சென்றன.

இதுக்கெல்லாம் காரணம் நான்தான் எண்டு சொன்னா



நம்பவா போறாங்க. நரிப் பயலே, ஏமாத்துறியா எண்டு தும்பிக்கையை உயர்த்துவாங்க. பெருமை வேண்டாம். அடக்கமா இரு. உன் சாதனையை ஒரு நாள் சரித்திரம் பேசும் என நரி தன் மனதுக்குள் கூறிக்கொண்டது.

சிறிது நேரம் கழிந்த நிலையில், காலில் சுருக் என வலி. தன்னைக் கடித்தது யார் எனப் பார்த்தது நரி. கட்டெறும்பு முன்நிற்க, அதன் பின்னால் எறும்புப் படைகள் நின்றுகொண்டிருந்தன.

"தூங்குமூஞ்சி நரியே, மரத்தின் மேல் ஏறுவதற்காக வந்தால், குறுக்கே படுத்து இருக்கிறியே, வழிவிடு" என்றது கட்டெறும்பு. சிறிய எறும்பு "என் அருமை தெரியாமல் பேசுவதா?" என்று நினைத்த நரி, இதற்கு மேலும் உண்மையை மறைக்கக் கூடாது என நினைத்தது. "இந்தக் குட்டைகள், மரங்கள் செழிப்பா இருக்கக் காரணமே நான்தான்" என்று பெருமையால் பொங்கியது.

"யாரிடம் கதைவிடுகிறாய்? இதெல்லாம் இயற்கையா நடக்கும். நேரத்தைப் போக்காம, இடத்தைவிட்டு அகலு. இல்லை என்றால், என் வீரர்கள் ஒன்றுசேர்ந்து கடிக்க ஆரம்பித்திடுவார்கள். உன்னால தாங்க முடியாது" என்று எறும்புத் தலைவன் ஆவேசமாகக் கூற, நரிக்குக் கோபம் தலைக்கேறியது.

"மரம் செழிப்பா இருக்கிறதால்தானே மேலே ஏற வேண்டும் என்று சொல்லுறாய். இப்பவே மூன்றாவது மந்திரத்தைச் சொல்லி, பழையபடி தண்ணீர் இல்லாத குட்டையும், காய்ந்த மரங்களுமாக மாத்துகிறேன்" என்று கடைசி மந்திரத்தை உச்சரித்தது நரி.

ஆனால், நினைத்தது போல நடக்கவில்லை. மந்திரத்தைத் தவறாக உச்சரித்துவிட்டோமோ என மீண்டும் உச்சரிக்க, அப்போதும் எதுவும் நடக்கவில்லை.

மூன்றாவது மந்திரத்தைக் கெட்ட எண்ணத்தோடு பயன்படுத்தியதால்தான் பலன் தரவில்லை என்பதை அப்போதுதான் நரி உணர்ந்து கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்திலிருந்து இனியாவது இறங்குங்கள்

நெடுநாளைக்குப் பின்னர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்பது பற்றிய சந்தேகம் நாடாளுமன்றில் எழுப்பப்பட்டுள்ளது. அதற்கு வழிகோலியிருப்பவர்கள் மகிந்த தரப்பினர்.

எப்பொழுதும் சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிராக இனவாதத்தைக் கக்குவதிலேயே மகிந்த தரப்பினர் குறியாக இருந்த வரலாறு உண்டு. ஆட்சியிலிருந்து துரத்தப்பட்ட பின்னரும், அவருக்கும் அவரது தரப்பினருக்கும் இனவாத சிந்தனை இன்னும் விட்டுப்போகவில்லை என்பதை அவர்கள் அடிக்கடி நாடாளுமன்றிலும், வெளியிடங்களிலும் ஒலிவாங்கி கிடைக்கும்போதெல்லாம் நிரூபித்து வருகின்றனர்.

அவர்களின் இனவாதச் செயல்கள், இனவாதப் பேச்சுக்கள் அவ்வப்போது அரச தரப்பினால் முறியடிக்கப்பட்டுவருகின்றபோதும், அதனையும் மீறி மகிந்தவுடன் இயங்கும் தரப்பினர் செயற்படுத்தி வருகின்றனர். மகிந்த தரப்புக்கு ஆட்சியைக் கவிழ்த்து-அதன்மூலமாக அட்சியைக் கைப்பற்றுவதே இலக்காகவுள்ளது. கடந்த ஆட்சியைத் தக்க வைக்க இயன்றளவுக்கு முக்கிப் பார்த்தும் அது பலனளிக்காத நிலையில்தான் தேர்தல் அறிவிப்புக்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வெளியாகமுன்னரே, மூட்டை முடிச்சுகளுடன் அலரி மாளிகையிலிருந்து வெளியேறியிருந்தார். பயப்பீதியில் அந்நேரம் பிரதமராகப் பதவியேற்கவிருந்த ரணிலின் பாதுகாப்புடனேயே அவர் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

ஆனால், தமிழர், முஸ்லிம்கள் மீதான இனத்துவேசம் தொடர்ந்து திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. யாழ்.பல்கலையில் விஞ்ஞான பீட முதலாம்வருட மாணவர் வரவேற்பில் எதேச்சாதிகாரமாக இடம்பெற்ற குழப்பம் பின்னர் திட்டமிட்டு கைகலப்பில் ஈடுபடுமளவுக்குச் சென்றமையும் இன்றுவரை அதனைத் தீர்க்கப் பெரும்பான்மையின மாணவர் பின்நிற்பது அல்லது ஒத்துழைக்க அக்கறையற்றிருப்பது கவனத்துக்குரியது.

பேராதனைப் பல்கலையில் முதலாம்வருட சிறுபான்மையின மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளமையும் அவர்கள் கற்றலில் ஈடுபட முடியாத நிலையில் இரவோடு இரவாக தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளமையும் மற்றொரு விடயம்.

நாடாளுமன்றில் இனவாதம் கக்கும் மகிந்த தரப்பினர் தாம் தோற்க வேண்டிய நிலை ஏற்பட்டதும் ஆட்சியிலிருந்து கலைத்ததும் சிறுபான்மையினம்தான் என்பதையும் இன்றும் மறக்கவில்லை. அந்தக் கடுப்பிலும் அவர்கள் தற்போதும் பொங்கிக் கொண்டுள்ளார் என்பது தெரிகிறது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர் என்று மகிந்த தரப்பினருக்கு மகிந்த மீது பற்று உள்ளது. தற்கால அரசியல் சூழ்நிலையில் மகிந்த தரப்பினருக்கு வேறு வழி இல்லை என்பதும் முக்கியவிடயம்.

சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை இழுத்துவிட்டு விடுவர். பிரபாகரன் என்றாலே ஒட்டுமொத்த ஊடகங்களுக்கும் சூடான செய்தியாகவும் அமைந்துவிடுகிறது. ஆனால் அவர் இருக்கிறாரா? இல்லையா? என்பதை அரசு கூறவேண்டும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டிருந்த கேள்விக்குப் பதிலில்லை. அதற்கு அரசினால் பதில் வழங்க முடியாது என்பதும் தெரியும். பிரபாகரன் இருக்கிறாரா? இல்லையா? என்பது எவருக்கும் தெரியாத நிலையில் போரில் அவர் கொல்லப்பட்டதாக அரசு கூறிவருகின்றபோதும் அவரது இறப்புச் சான்றிதழை வழங்க முடியவில்லை. முன்னர் ஆட்சியிலிருந்த மகிந்தவினால்கூட சான்றிதழை வழங்க முடிந்திருக்கவில்லை. தற்போதைய அரசுக்கும் அதற்கு முடியவில்லை. அது இன்னும் பீதியைக் கிளப்பும் விடயமாகவே இருந்து வருகிறது.

அதனால் அதுபற்றி வாய் திறக்க அரச தரப்பினர் விரும்பியதில்லை. எதிர்க்கட்சியினர் கேள்விகேட்டால் பதிலளிக்கவும் அரசுக்குத் திராணியில்லாத நிலையே இன்னும் தொடர்கிறது.

இந்த அரசிலும் தமிழர் பிரச்சினையில் இழுத்தடிப்பு தாராளமாகவுள்ளது. அது மாற்றமடைய வேண்டும். அதற்கு பெரும்பான்மையின மக்களும் ஆட்சியாளர்களும் மாற வேண்டும். இனவாதத்தை விட்டுக் கீழே இறங்கி வாருங்கள்.






# இறைவனின் இன்னருள் கிடைக்கப் பிரார்த்தனை

காரை.எம்.பி. அருளானந்தன்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் இறைவனிடம் பிரார்த்திக்கவே செய்கிறார்கள். இறைவா எனக்கு அது வேண்டும். இது வேண்டும் என்று யாசகம் கேட்பது போல் பிரார்த்திக்கின்றார்கள்.

இதற்கு அவசியமே இல்லை. காரணம் இறைவன் நமக்கெல்லாம் தாயுமானவன் தாய்க்கும் மேலானவன். அவனுக்குத் தெரியாதா, அவனுடைய குழந்தைகளுக்கு எப்பொழுது எது தேவை என்று? நாம் பிரார்த்தனை செய்தாலும் செய்யாவிட்டாலும் நமக்கு வேண்டியதை வேண்டிய வேளையில் அருளவே செய்வான்.

ஒரே இடத்தில் ஒரே வேளையில் இரண்டு அன்பர்கள் இறைவனை வேண்டினால் இறைவன் எவருக்கு அருள் புரிவான்.

ஓர் ஊரில் ஒரு குயவனும், ஒரு விவசாயியும் இருந்தார்கள். அவர்கள் ஒரு நாள் இறைவனை வேண்டினார்கள்.

விவசாயி, " இறைவா" இன்றைக்கு உன் அருளால் மழை பெய்தால்தான், வயலில் உள்ள பயிருக்கு நல்லது. இந்த ஒரு நாள் தவறிப்போனால் மொத்த விளைச்சலுமே பட்டுப் போகக்கூடிய நிலை. எனவே எப்படியாவது இன்றைக்கு மழை பெய்யச் செய்வாயாக என்று வேண்டினான்.

குயவன் "கடவுளே" நான் சட்டி பானைகள் எல்லாம் இன்று சூளையில் சுடப் போகிறேன். எனவே இன்றைக்கு மழை இல்லாமல் அருள்புரி என்று வேண்டுகின்றான்.

இங்கே இறைவன் எவருக்கு அருள் புரிவான் என்று நினைக்கிறீர்கள்? விவசாயிக்கு இன்றைக்கு ஒருநாள் மழை பெய்யாவிட்டால் மொத்த விளைச்சலும் அழிந்து போகும். ஆனால்,குயவன் நிலை அப்படியில்லை. இன்று மழை பெய்தாலும் கூட இன்னொரு நாள் சட்டி பானைகளை சூளையில் போடலாம். எனவே இறைவன் விவசாயின் பிரார்த்தனையைத் தான் உடனே நிறைவேற்றுவான்.

இந்தக் கதையிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? இறைவனுக்கு நமக்கு எப்பொழுது என்ன தேவை என்பது நம்மைவிடவும் நன்றாகத்தெரியும். எனவே இறைவனிடம் நம்முடைய பிரார்த்தனை, இறைவா! எனக்கு எது நல்லது என்பதும், என்ன தேவை என்பதும் உனக்கு நன்றாகவே தெரியும். என்னை உன்னிடம் ஒப்புவித்துக்கொண்டேன். உன் திருவுள்ளபடி அருள்புரிவாய் என்பதாக இருக்க வேண்டும்.

நம்முடைய பிரார்த்தனை இப்படி அமைந்திருந்தால் இறைவன் இன்னருள் நல்லபடியே நமக்குக் கிடைப்பது சாத்தியமாகும்.

# இன்சொல் பேசுவோம்

ப.அனோஜா

"இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருக்கக் காய் கவந்தற்று'' என்றார் பொய்யாமொழிப் புலவர். வாய்க்குச் சுவையான இனிமையான கனியைச் சுவைப்பதே சிறந்தது. அதைவிடுத்து காயைப் புசிப்பதால் கசப்பு உணர்வே ஏற்படும். மானிடராகிய நாம், இனிமையான சொற்களைப்பேசி, எமது பண்பை உயர்த்த வழி செய்வோம்.



எமது குடும்ப வாழ்வில் பல்வேறுபட்ட உறவுகள் வாழ்கின்றோம். ஒவ்வொரு உறவு முறைகளையும் பாசத்தோடும் பரிவுடனும் அழைக்கும்போது அங்கு அன்பு தழைக்கின்றது. எனவே அன்பு மேலிட இன்சொல் அவசியமாகின்றது. ஒருவர் பேசும் மொழிநடையை வைத்து அவரின் அறிவாற்றலையும் குலப்பெருமையையும் அறிந்து கொள்ளலாம்.

அன்புக்கு அடிபணியாதோர் இவ்வுலகில் இல்லை எனலாம். அத்தகைய அன்பை இனிய வார்த்தைகளில் தான் காட்டமுடியும். "யாவர்க்குமாம் இறைவற்கு" என்று தொடங்கி எது முடிந்தாலும் முடியாவிட்டாலும் "யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே" என்று இன்சொல்லின் பயனை திருமூலர் இனிமையாக எடுத்துக் கூறியுள்ளார். இறைவனையே இன்சொல்லின் வடிவினனாக இந்துமதத்தில் காணுகின்றோம்.

இதுமட்டுமா அறத்தின் வடிவிலும் இன்சொல் காட்டப்படுகிறது. "அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்" என்று திருவள்ளுவர் அறத்தில் இன் சொல்லைக் காட்டுகிறார். அழகு வலிமை, செழுமை, வனப்பு என வளம் நிறைந்த வார்த்தைகள் வஞ்சினத்தையே அழித்து விடும். சுவாமி விவேகானந்தரின் சொற் பொழிவுகளில் எல்லாம் சொற்களின் செறிவும் இனிமையும் மக்களைக் கவர்ந்தன.

அமெரிக்காவிலே "சகோதர, சகோதரிகளே'' என்று தனது பேச்சை ஆரம்பித்தார். அதன் இனிமையை காது கொடுத்து கேட்ட மக்களின் ஆரவாரம் அந்த மண்டபத்தையே அதிரவைத்தது. தொடர்ந்து அவர் ஆற்றும் உரைகளுக்கெல்லாம் மக்கள் கூட்டம் செறிந்திருக்கும் அளவுக்கு அவரின் இன்னுரை அமைந்திருக்கும்.

குறள்பாவில் இன்சொல்லினதும் வன்சொல்லினதும் வேறுபாடுகள் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. படித்தவர் மட்டுமன்றி பாமர மக் களும் தம்வாழ்வில் இனிமையான சொற் களால் பேசுவோமாகில் வாய்த்தர்க்கம், வாக்கு வாதம் போன்ற வீண் சச்சரவுகளில் இருந்து விடுபட்டு, நல்வாழ்வு வாழலாம். மகிழ்ச்சி இன்பம், சந்தோசம் சேர்ந்த ஆரோக்கியமான வாழ்வு வாழ இன்சொல்லின் மகிமையை உணர்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோட்டல்ல சாப்பிட்டு முடிச்சதும் வெய்ற்றர் ரிப்ஸ் கேட்டாரு. "வெந்தயம் போட்டு மா ஆட்டினால் இட்லி மிருதுவாக இருக்கும்" எண்டு ரிப்ஸ் கொடுத்தேன். முறைக்குறாரு... ஏனெண்டு தெரியல...



# நயன்தாராவுக்கு போட்டியா நமீதா?



தமிழ் சினிமாவில் நம்பர் 1 நடிகையாக இருக்கிறார் நயன்தாரா. இவர், எழுத்தாளர் பாலகுமார் இயக்கும் 'பொம்பள' என்ற படத்தில் நடிக்க இருக்கிறார். இந்தப் படத்தில் நமீதாவும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவிருக்கிறார். கடந்த சில வருடங்களாக உடல் எடை அதிகரித்ததால் நடிக்காமல் இருந்தார். இவர், தற்போது எடையை குறைத்துள்ளதால் மீண்டும் கதைக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் நடிக்கவுள்ளாராம். பரத்துடன் நடித்து வரும் 'பொட்டு' படத்திலும் மந்திரவாதியாக இவர் நடித்து வருகிறார்.

ஒரு நாட்டின் நல்ல குடிமகனுக்கு என்ன தேவை ?



ஊறுகாய் சார்...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** செயல் நிறைவேறுவதில் தாமதம் உண்டாகலாம். அனுபவசாலியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். இயந்திரப் பிரிவு பணியாளர்கள், கூடுதல் பாதுகாப்பு பின்பற்றவும்.

**இடபம்:** செயலில் நிதானம் நிறைந்திருக்கும். சமூகத்தில் கூடுதல் வரவேற்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

**மிதுனம்:** செயல்களின் விளைவு உணர்ந்து பணிபுரிவது அவசியம். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழலை சந்திக்க நேரிடலாம். இலாபம் சுமார். குடும்பத்தினர் சுமுகமாக நடந்து கொள்வர்.

**கடகம்:** உறவினர் அனுகூலமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். இலாபம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவு செய்து மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** சாமர்த்தியமாகச் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி எளிதாக நிறைவேறும். வருமானம் உயரும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** பொது விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச் சுமை அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**துலாம்:** உங்களின் எதார்த்தப் பேச்சு, சிலருக்கு சிரமம் தரலாம். நற்பெயரைப் பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். உடல் ஆரோக்கியம் பெற, மருத்துவச் சிகிச்சை உதவும்.

**விருச்சிகம்:** போட்டியாளர் இடம் மாறும் சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். போட்டி, பந்தயத்தில் வெற்றி உண்டாகும்.

**தனுசு:** செயலில் எளிமை நிறைந்திருக்கும். தொழிலில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி பூர்த்தியாகும். இலாபம் உயரும். உறவினர் வருகையால், மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு விவகாரத்தில் சமரச தீர்வு கிடைக்கும்.

**மகரம்:** மகிழ்ச்சியுடன் பொதுநலப் பணியில் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** உழைப்பில் மட்டும் கவனம் செலுத்தத் தொடங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். குடும்பச் செலவில் தாராளம் பின்பற்றுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.


**மீனம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு சரி செய்வீர்கள். பெண்கள், அழகுசாதனப் பொருள் வாங்கி மகிழ்வர். புத்திரர் விரும்பிய பொருள் கேட்டுப் பெறுவர்.


**சாத்தான்** @saathaan

துரோகங்களை எப்போதும் புன்னகையுடனே எதிர்கொள்ளுங்கள், வேறெப்படியும் அதை வெல்ல முடியாது.

1,344 620

யாராவது ரீ.வியை நிப்பாட்டுங்களேன்...






## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 4 | | | | | | |
| 3 | | | 4 | 8 | | | 6 | |
| | 2 | | 9 | 6 | 3 | | | |
| | | | 1 | 7 | 2 | 3 | | |
| | 1 | 7 | | 3 | 9 | 4 | 2 | |
| 2 | 3 | | | 4 | 5 | 7 | | |
| 7 | | | | | | | | 8 |
| | 6 | | | 1 | | 5 | | |
| | | 3 | 7 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 6 | 3 | 2 | 1 | 9 | 5 | 8 |
| 5 | 1 | 8 | 6 | 7 | 9 | 4 | 2 | 3 |
| 2 | 9 | 3 | 8 | 5 | 4 | 6 | 1 | 7 |
| 1 | 6 | 2 | 4 | 8 | 5 | 3 | 7 | 9 |
| 4 | 3 | 9 | 1 | 6 | 7 | 2 | 8 | 5 |
| 8 | 7 | 5 | 2 | 9 | 3 | 1 | 4 | 6 |
| 6 | 2 | 7 | 9 | 4 | 8 | 5 | 3 | 1 |
| 9 | 5 | 1 | 7 | 3 | 2 | 8 | 6 | 4 |
| 3 | 8 | 4 | 5 | 1 | 6 | 7 | 9 | 2 |

"அப்பா... அப்பா... அப்பா..."
'ஏன்டா கத்திற'
"இங்க வாங்கப்பா; இங்க வந்து பாருங்களேன்... அம்மா வச்ச குழம்பக் குடிச்சிட்டு மீனெல்லாம் செத்துக் கிடக்கிது சட்டிக்குள்ள..."

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றைப் பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவை கள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் வராமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

ஆவணி-12
ஞாயிற்றுக்கிழமை
-28.08.2016
திதி: ஏகாதசி மா.05.27
நட்சத்திரம்: திருவாதிரை
ந.ப.12.03
ராகுகாலம்:
04.35-06.05 வரை
சுபநேரம்:
09.05-10.35 வரை
ஏகாதசி விரதம்

# மீன் ஊறுகாய்



**தேவையான பொருள்கள்**

மீன் [முள் நீக்கியது] – 1 கிலோ
இஞ்சி – 125 கிராம்
உள்ளி – 125 கிராம்
கடுகு – 60 கிராம்
மஞ்சள் பொடி – 1 மேசைக்கரண்டி
சீனி – 1 கோப்பை
வினிகர் – 400 கிராம்
மிளகாய் வற்றல் – 60 கிராம்
சீரகம் – 35 கிராம்
உப்பு – 2 மேசைக்கரண்டி
கடலை எண்ணெய் – 1/2 கிலோ
மிளகாய்த்தூள் – 1 மேசைக்கரண்டி

**செய்முறை**


மீனை ஒரு அங்குல துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். அதனோடு உப்பு, மிளகாய்த்தூள் தடவி 1 மணிநேரம் ஊற வைக்கவும். எண்ணெயை நன்றாக சூடாக்கி, மீன் துண்டுகளைப் பொரித்தெடுக்கவும். பின்பு இஞ்சி, உள்ளி, காய்ந்த மிளகாய், சீரகம், கடுகு ஆகியவற்றை விழுதாக அரைத்துக் கொள்ளவும். எண்ணெயை சூடாக்கி அரைத்த கூட்டுடன் மீன், வினிகர், சீனி ஆகியவற்றை சேர்த்து எண்ணெய் பிரியும் வரை நன்றாக வதக்கவும். மீன் ஊறுகாய் தயார். மீன் அதிகமாக வாங்கிவிட்டால் அதை ஊறுகாய் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.





## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | 700 | 800 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 550 | – | 500 |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 800 | 800 | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 400 | 500 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 350 | 400 | 450 |
| கும்பிளா | 400 | 500 | 400 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 400 | 300 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | – | 400 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 150 | – |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 200 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 200 | 170 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 250 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | 200 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 300 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 60 | 80 | 40 | 30 | 30 | 20 |
| கத்தரி | 80 | 60 | 50 | 60 | 60 | 40 | 90 | 40 |
| கரட் | 120 | 120 | 160 | 120 | 100 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 90 | 100 | 80 | 70–80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 60 | 50 | 70 | 100 | 50 | 100 | 100 | 60 |
| பாகல் | 120 | 80 | 100 | 120 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 140 | 160 | 100 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 100 | 90 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 80 | 60 | 80 | 70 | 100 | 90 | 60 |
| பூசணி | 80 | 35 | 50 | 50 | 30 | 40 | 70 | 40 |
| தக்காளி | 50 | 60 | 60 | 60 | 40–50 | 50 | 120 | 40 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 120 | 80 | 60 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 90 | 160 | 120 | 70–80 | 300 | 200 | 140 |
| புடோல் | 40 | 35 | 40 | 60 | 40–60 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 120 | 100 | 120 | 90 | 80 |
| வெண்டி | 40 | 60 | 50 | 60 | 40 | 60 | 70 | 20 |
| போஞ்சி | 150 | 140 | 200 | 180 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 120 | 100 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 30–35 | 25–30 | 30 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 80 | 200 | 240 | 220 | 220 | 200 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 100 | 140 | 150 | 140 | 200 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 80 | 40 | 70–80 | 40 | 120 | 50 |






ஆண்களுக்கான வட இந்திய கோட்டுகள் அறிமுகமாகியுள்ளன. மென்னிற சேட்கள் அணிந்து, அவற்றுக்கு மேல் இதனை அணிந்து கொள்ளலாம். வட இந்தியர்கள் அணியும் இவ் வகை கோட்டுகள் தற்போது இங்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இவை 2 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## நாம் உண்ணும் உணவுகள் சமிபாடு அடைவதற்கு எடுக்கும் நேரம்

- தண்ணீர்த் தன்மையாக இருக்கும் பழச்சாறு – 15 முதல் 20 நிமிடங்கள்
- கெட்டியான பழச்சாறு, காய்கறி சூப், தர்பூசணி, ஆரஞ்சு, திராட்சை – 20 முதல் 30 நிமிடங்கள்
- ஆப்பிள், செரிப் பழங்கள் மற்றும் தக்காளி, வெள்ளரிக் காய், காய்கறி சாலட் – சுமார் 40 நிமிடங்கள்
- முட்டைக்கோவா, சோளம் – சுமார் 45 நிமிடங்கள்
- கேரட், பீட்ரூட் போன்ற வேர்க்கிழங்குகள் – சுமார் 50 நிமிடங்கள்
- அரிசி, ஓட்ஸ் – சுமார் ஒன்றரை மணி நேரம்
- சோயா பீன்ஸ் மற்றும் பால், பாலாடைக்கட்டி – சுமார் 2 மணி நேரம்

**அசைவ உணவுகள் :**

- மீன் – அரை மணிநேரம்
- முட்டை – 45 நிமிடங்கள்
- கோழி – 2 மணி நேரம்
- வான்கோழி – இரண்டரை மணி நேரம்
- ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி – சுமார் 3 முதல் 4 மணிநேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூனியன் அஷ்யூரன்ஸ் நடத்தும் டெங்கு விழிப்புணர்வு செயற்றிட்டம்

யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு வர்த்தக நாமமான "யூனியன் மனிதாபிமானம்" மூலமாக தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த டெங்கு விழிப்புணர்வு செயற்றிட்டத்தை அண்மையில் நாடு முழுவதிலும் ஆரம்பித்திருந்தது.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ள இடரைத் தொடர்ந்து அதிகரித்து காணப்பட்ட டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பொது மக்கள் மத்தியில் டெங்கு ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிரதேச சுகாதார அதிகாரிகளுடன் இணைந்துயூனியன்அஷ்யூரன்ஸ் மற்றும் அலுவலக ஊழியர்கள் பரப்புரை நடவடிக்கைகளை இந்தத் திட்டத்தினூடாக முன்னெடுத்திருந்தனர்.

சகல யூனியன் அஷ்யூரன்ஸ் கிளைகள் மற்றும் அவற்றுக்கு பொருத்தமான பிரதேச சுகாதார அலுவலகங்கள் ஆகியன ஒன்றிணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தன. தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் உதவியுடன் விசேடமாக தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. யூனியன் அஷ்யூரன்ஸ் கிளைகளை அண்மித்த 1-2 கிலோமீற்றர் பிரதேசம் இனங்காணப்பட்டு, சுகாதார அதிகாரிகள் அடங்கிய குழு, வீடு வீடாகச் சென்று கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

யூனியன் அஷ்யூரன்ஸின் சுமார் 4000 ஆயுள் காப்புறுதி ஆலோசகர்கள் மற்றும் சுகாதார அமைச்சு அதிகாரிகள், பொதுச்சுகாதார அதிகாரிகள் மற்றும் தன்னார்வு செயற்பாட்டாளர்கள் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் இணைந்துக் கொண்டனர். அவர்களின் செயற்பாடுகளின் பெறுபேறாக, ஒரே நாளில் சுமார் 61 நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

"நாட்டில் தற்போது காணப்படும் நிலையைக் கவனத்தில் கொண்டு நாம் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்தோம். பிரதேச சுகாதார அலுவலகங்களின் மூலமாக எமக்கு கிடைத்தப் பங்களிப்பு மற்றும் ஆதரவு மிகவும் ஊக்கமளிப்பதாக அமைந்திருந்தது. எதிர்காலத்திலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை முன்னெடுக்க நாம் தீர்மானித்துள்ளோம்" - என்றார்.

கொழும்பு மாநகர சபையின், பொது சுகாதார திணைக்களத்தின் பிரதம மருத்துவ அதிகாரி மருத்துவர். ருவன் விஜயமுனி கருத்து தெரிவிக்கையில், "பல ஆண்டுகளாக யூனியன் அஷ்யுரன்ஸ் உடன் பொது சுகாதாரத் திணைக்களம் செயலாற்றியுள்ளது. தனியார் நிறுவனம் எனும் வகையில், எமது டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கு அவர்கள் பெருமளவு ஆதரவை வழங்கி வருகின்றனர். டெங்கு நோய் ஒழிப்பு செயற்பாடுகளில் அவர்களின் ஈடுபாடு மிகவும் வரவேற்கத்தக்கது" - என்றார்.

# கடல் வளங்களின் பாதுகாப்புக்கு ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு,ஓக. 27



கடல் வளங்களை நிலைபேறான வகையிலே கையாளுதல்,அவற்றை சிறந்த முறையிலே பராமரித்து பயன்பாட்டுறுதிக்குரிதாக்குதல் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற ப்ளு ரிசோர்சஸ் ட்ரஸ்ட் நிறுவனம் டோக்கியோ சிமெந்து நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

கடல்சார் வளங்களை பாதுகாப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி ஒப்பந்தமானது திட்டமிடல்களில் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது. அத்துடன் சமூகங்களிடையே கல்விசார் நிகழ்ச்சிகள், விழிப்புணர்வூட்டல், ஒன்றிணைவின் மூலம் பங்குபற்றுதலை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கான செயலுறுதியை வழங்கியுள்ளது.

பல மில்லியன் ரூபாக்களை முதலீடு செய்து டோக்கியோ சிமெந்து நிறுவனம் மூன்று வருட காலப்பகுதிக்கு பவளப்பாறைகளை மீளவளர்க்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.அதற்கான பங்களிப்பையும் நிபுணத்துவ ஆலோசனைகளையும் ப்ளு ரிசோர்சஸ் ட்ரஸ்ட் வழங்கவுள்ளது.

மேலும் தற்போது முன்னெடுக்கப்படும் அதிக வினைத்திறன் வாய்ந்த செயற்றிட்டங்களில் ஒன்றாக இந்த பவளப்பாறைகள் புனருத்தாரணம் செய்யும் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாகவும் மீள் சுழற்சிக்குட்படுத்தப்பட்ட ரெடி மிக்ஸ் கொங்கிறீற் கலவையை கொண்டு பவள பந்துகள் எனும் செயற்கை கட்டமைப்புக்கள் உருவாக்கப்படுவதுடன் இவற்றில் புதிய பவளப்பாறைகள் பதிந்து உருவாகின்றன. வனஜீவராசிகள் திணைக்களம், ப்ளு ரிசோர்சஸ் மற்றும் கடற்படை ஆகியவற்றுடன் இணைந்து இந்த பவள பந்துகள் பாசிக்குடா, காயென் கேணி, டச்சு குடா, புறா தீவு முதல் யாழ்ப்பாணம் வரை கரையோரங்களில் இவை பதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அறிவு பகிர்வு, திட்டமிடல் மற்றும் ஒன்றிணைந்த களச் செயற்பாடுகள் போன்றன, பவளப் பாறைகள் மீளமைப்பு திட்டத்துக்கு உதவியாக அமையும் என ப்ளு ரிசோர்சஸ் ட்ரஸ்ட் இணை ஸ்தாபகர் டானியல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

(ரி - 2)

வணிகம்

# இறக்குமதி வரி அதிகரிப்பு

கொழும்பு,ஓக. 27

உள்ளூர் விவசாய உற்பத்திகளைத் தாண்டி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவருகின்ற அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தற்போது இறக்குமதி செய்யப்பட்டு சந்தைகளில் விற்பனைக்கு விடப்பட்டிருக்கின்ற உருளைக் கிழங்குக்கு இதுவரைகாலமும் விதிக்கப்பட்டிருந்த விசேட வர்த்தகப் பொருள்களுக்கான வரிச் சலுகையானது ஒரு கிலோவுக்கு ரூபா 35 ஆக இருந்து வந்தது.தற்போது அந்தப் பெறுமதி ரூபா 40 ஆக அதிகரித்து மாற்றம் கண்டுள்ளது.

உள்ளூரில் உருளைக்கிழங்கு பயிரிடலில் ஈடுபட்டு வருகின்ற விவசாயிகளைப் பாதுகாக்கும்,அவர்களுக்கான சந்தை வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்குடன் இந்த வரி அதிகரிப்பு நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.


(ரி - 2)

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

26/8/2016
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -38.80 | 6,550.91 | 6,589.71 |
| S&P SL20 | -27.64 | 3,584.93 | 3,612.57 |
| வியாபாரப்புரள்வு | | 678,746,240 | 624,479,168 |
| உள்நாடு- கொள்வனவு | | 553,860,736 | 578,358,400 |
| விற்பனை | | 565,970,624 | 499,949,152 |
| வெளிநாடு- கொள்வனவு | | 124,885,520 | 46,120,760 |
| விற்பனை | | 112,775,608 | 124,530,032 |



| அதிகூடிய பங்குப்புரள்மாற்றம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| லங்கா ஐ.ஓ.சி | LIOC.N | 37.4 | 5,497,009 | 215,319,977 |
| றோயல் செராமிக்ஸ் | RCL.N | 123.8 | 722,318 | 89,567,570 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 912 | 76,022 | 69,635,143 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 151 | 227,403 | 34,477,217 |
| சிலோன் கிரேன் எலெவேட்டர்ஸ் | GRAN.N | 89 | 253,919 | 22,499,006 |
| ரெக்ஸ்டைல் பெர்சி | TJL.N | 40 | 552,449 | 22,093,087 |
| ஏசில் கேபில் | ACL.N | 62 | 342,611 | 21,242,307 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 25.7 | 524,600 | 13,471,948 |
| சம்பத் வங்கி | SAMP.N | 253.1 | 52,869 | 13,377,615 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 57 | 198,265 | 11,364,908 |

கருத்தரங்கு
பங்குச்சந்தை முதலீட்டு கருத்தரங்கு.
வெள்ளிக்கிழமை (02.09.2016)
மாலை 3.00 - 4.00 பங்குப்பரிவர்த்தனை-யாழ்கிளையில்
அனுமதி இலவசம்

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| [illegible] | 216 |
| விலை உழைப்பு | 13.6 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

நுட்பம்




# வட்ஸ் அப்ஸ் போன்ற கூகுளின் செயலி விரைவில்

வாட்ஸ் அப் போன்ற செயலியை வெளியிட கூகுள் நிறுவனம் முடிவு செய்துள்ளது. அலோ என பெரியரிடப்பட்டுள்ள அந்தச் செயலியில் பல புதிய வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

அதில் என்ட் ரு என்ட் என்ஸ்கிரிப்ஸன் என்ற பாதுகாப்பு அம்சமும், மறைநிலை உரையாடல்கள் வசதியும் தரப்பட்டுள்ளது. சினப் சற் போன்று அனுப்பிய தகவல்கள் அதுவே அழிக்கும் வசதியும், அதனை நாம் தெரிவு செய்து கொள்ளும் அமைப்பும் புகுத் தப்பட்டுள்ளது. குறித்த செயலி மிக விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# பெயர் மாற்றத்துடன் அப்பிள் தயாரிப்பு

அனைவரினதும் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள அப்பிள் நிறுவனத்தின் அடுத்த அங்கம் அடுத்த மாதம் அறிமுகம் செய்யவுள்ளமை எவரும் அறிந்ததே.

அடுத்த மாதம் வெளியாகவுள்ளது என்று கூறப்பட்ட குறித்த கைபேசியானது ஐபோன் 7 எனும் பெயருடனயே அறிமுகம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவ்வாறில்லாமல் ஐபோன் 6 எஸ்ஈ என்ற பெயருடனேயே குறித்த கைபேசி அறிமுகம் செய்யப்படவுள்ளது என்று தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கு காரணமாக அடுத்த மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ள புதிய கைபேசியில் முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஐபோன் கைபேசியின் வடிவமைப்பில் சிறிய மாற்றம் மட்டுமே ஏற்படுத்தப்பட்டு அறிமுகம் செய்யப்படவுள்ளது என்றும்- அதனால் தான் இவ்வாறு பெயர் சூட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய தகவலை உறுதிப்படுத்தக்கூடிய சில புகைப்படங்களும் இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைந்த...

நேர அட்டவணையைப் பின்பற்றத் தவறும் தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வீதி அபிவிருத்தி திணைக்கள கேட்போர்கூடத்தில் இலங்கைப் போக்குவரத்து சபை, வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் ஆகியவற்றுக்கிடையில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே இந்த இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் இ.போ.ச பஸ்களுக்கும், தனியார் பஸ்களுக்கும் இடையில் இடம் பெறும் போட்டித்தன்மை, தகராறுகள் காரணமாக மக்கள் பல நெருக் கடிகளையும், அசௌகரியங்களையும் எதிர் கொண்கின்றனர். இதன் காரணமாக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினால் போக்குவரத்து நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டது. வடக்கு மாகாண தேசிய போக்குவரத்து அதிகார சபையும் உருவாக்கப்பட்டது. நியதிச்சட்டத்தின் ஊடாக வடமாகாண போக்குவரத்து அதிகார சபைக்கான ஆளணிகளை நியமனமாக 150 இளைஞர்களுக்கான நேரக் கணிப்பாளர் வேலை வாய்ப்பு வழங்கப்படடன.

போக்குவரத்தில் மிகப்பெரிய பிரச்சினையாக இணைந்த நேரஅட்ட வணையைப் பின்பற்றாமையே காணப்பட்டது. இந்த அட்டவணையை இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும், தனியார் பஸ் உரிமையாளரும் பின்பற்றாமையினால் போட்டித் தன்மையால் பல விபத்துக்கள் இடம்பெற்றன. அந்த விபத்துக்களில் அதிக எண்ணிக்கையானவர்கள் உயிரிழந்தனர். அதை நிவர்த்தி செய்வதுடன், பொது மக்களுக்குப் பாதுகாப்பான போக்கு வரத்துச் சேவையை வழங்க வேண்டுமென்ற நோக்கத்துடன். நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இறுதித்தீர்மானமாக எதிர்வரும் 7ஆம் திகதி இணைந்த நேர அட்டவணை நடைமுறைக்குக் கொண்டு வருவதாக முடிவெடுக்கப்பட்டது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர். இந்த நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும்போது 11 பேர் கொண்ட குழுவினர்தான் வடமாகாணத்தில் போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைகளை சீர்செய்வார்கள். வடக்கு மாகாணத்தின் போக்குவரத்தை ஏனைய மாகாணங்கள் பார்த்துப் பின்பற்ற வேண்டுமென்பதே எமது நோக்கம். அந்தவகையில் இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்து வந்த இலங்கை போக்குவரத்துச் சபையினரும், தனியார் பஸ் உரிமையாளர் சங்கமும் அதற்குத்தற்போது ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி முதல் வடமாகாணத்தில் இணைந்த நேர அட்டவணை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. புதிதாக நேரக்கணிப்பாளர்களை நியமிக்கும் வரை இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் நேரக் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் நேரக் கண்காணிப்பாளர்கள் உட்பட போக்குவரத்துப் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். எதிர்வரும் 7ஆம் திகதிக்குப் பின்னர் சட்ட முரணாக நேர அட்டவணையைப் பின்பற்றாமல் இருப்பார்களாயின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்குப் பொலிஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. நேரக்கணிப்பைப் பின்பற்றாத சாரதிகளுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படுமென்பதுடன், 6 மாத சிறைத்தண்டனை வழங்கக் கூடிய சட்ட ஏற்பாடுகளும் இருக்கின்றன. எனவே, சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மிக அவதானத்துடனும், அர்ப்பணிப்புடனும் சேவையை வழங்க வேண்டும். யாரையும் தண்டிக்க நினைக்கவில்லை. வடக்கில் சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கு யார் தடையாக இருக்கின்றார்களோ, அவர்கள் சேவையில் இருந்து நிறுத்தப்படுவார்கள். பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு எதிர்வரும் ஒரு மாத காலத்துக்கு வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையினர், பொலிஸார் உட்பட ஏனைய அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள். எனவே, சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளையும் இணைந்த நேர அட்டவணையைப் பின்பற்றி பொது மக்களுக்கான சிறந்த சேவையை வழங்க வேண்டும் - என்றார்.

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, வடமாகாணத்தில் உள்ள போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் யாழ். மூத்த பொலிஸ் அத்தியட்சகர், இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண முகாமையாளர், வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

(வ-21,106,)

## 5 பொலிஸார் ...

நேற்றுத் தெரிவித்தார்.

சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கும் எதிராக சுருக்கமுறையற்ற விசாரணையை நடத்தி கிளிநொச்சி நீதிமன்றில் கொலைக் குற்றச்சாட்டைத் தாக்கல் செய்யுமாறும், அந்த 5 பேர் உள்ளிட்ட 8 பொலிஸாருக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றில் சித்திரவதைக் குற்றச்சாட்டைத் தாக்கல் செய்யுமாறும் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

2011ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி 5 இளைஞர்கள் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மாவீரர் தினம் கொண்டாடுகிறார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட அந்த இளைஞர்கள் மீதுபின்னர்திருட்டுக்குற்றஞ்சாட்டப்பட்டது. அவர்களில் 4 பேர் மீதான திருட்டு வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது. 5ஆவது நபர் இரணைமடுவில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

தம்முடன் கைது செய்யப்பட்ட 5ஆவது நபரான சிறிஸ்கந்தராசா சுமணனைப் பொலிஸார் அடித்துச் சித்திரவதை செய்த பின்னர் ஜீப்பில் ஏற்றிச் சென்றனர் என்றும் பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்ட செய்தியைத் தாம் அறிந்தனர் என்றும் ஏனைய 4 சந்தேகநபர்களும் நீதிமன்றத்தில் ஜுலை 25ஆம் திகதி நடந்த வழக்கு விசாரணையின்போது தெரிவித்தனர். தாமும் கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்றும் தெரிவித்தனர். பயம் காரணமாக உடனடியாக இதனை நீதிமன்றில் கூறவில்லை என்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முழு விசாரணை மேற்கொண்டு 3 மாதங்களுக்குள் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறும் சந்தேகநபர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் அன்றையதினம் நீதிவான் ஏ.யூட்சன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த தவணை இந்த வழக்கு நீதிமன்றுக்கு வந்திருந்தபோது சந்தேகநபர்களான பொலிஸார் கைது செய்யப்பட்டிருக்கவில்லை. அறிக்கையும் சமர்ப்பித்திருக்கவில்லை. அதனால் பொலிஸாரை நீதிமன்று எச்சரித்திருந்தது.

இந்த நிலையில் வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது 8 பொலிஸாருக்கும் எதிராக குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்களாக அறிவிக்கப்பட்டுள்ள 8 பொலிஸாரில் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 3 பேரும் உள்ளடங்குகின்றனர். இந்த வழக்கு எதிர்வரும் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, இந்த வழக்கின் அடுத்த தவணையின்போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் கூட்டுக் கொள்ளைப் பிரிவின் பொறுப்பதிகாரியை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான அறிவித்தலை அனுப்புமாறும் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பிரதிநிதி நீதிமன்றிடம் கோரினார். அதற்கும் அனுமதியளித்தது நீதிமன்று.

(உ-4,10)

## புலம்பெயர்

ஒன்றரை வருடத்தில் மாற்றத்தை அனைவரும் உணரலாம்.

இவ்வாறு அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர யாழ்ப்பாணத் தில் நேற்றுத் தெரிவித்தார்.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த வல்வெட்டித்துறை ஆழிக்குமரன் நவரத்தினசாமியின் ஞாபகார்த் தமாக வடம ராட்சியில் நீச்சல் தடாகம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான இடத்தைத் தெரிவு செய்து நடவடிக்கைகளை முன் னகர்த்துவது தொடர்பான கலந்துரையாடலை அயலுறவு அமைச்சர் வல்வெட்டித்துறை நகர சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று நடத்தினார். அதன் பின்னர் அங்கு வைத்து 'உதயன்' பத்திரிகைக்குக் கருத்துரைத்த மங்கள சமரவீர தெரிவித்ததாவது:

"நாட்டின் மூவினத்தவரும் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். அவர்கள் பல திறமைகளைக் கொண்டுள்ளனர். அவர்கள் எம்முடன் கைகோர்த்து தமது திறமைகளைப் பயன்படுத்தி இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும். அதற்காக அவர்களிடம் பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன்.

தனிப்பட்டவர்களின் காணிகளை இராணுவத்தினர் பயன்படுத்துகின்றனர். அவற்றை விடுவித்து வருகிறோம். கடந்த 2 வருடங்களில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளை விடுவித்துள்ளோம். மிகுதிக் காணிகளையும் விடுவிப்போம். விடமுடியாத நிலை வருமானால் அந்தந்தக் காணிகளின் பெறுமதிக்கு ஏற்ப முழுமையான பணம் கொடுப்போம். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

முன்னரைவிட யாழ்ப்பாண மக்கள் மகிழ்ச்சியாகவுள்ளனர். நிறைய வேலைத்திட்டங்களைச் செய்து கொடுத்துள்ளோம். ஆனால் இன்னும் செய்து முடியவில்லை. வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். நான் அயலுறவு அமைச்சர் என்ற வகையில் பல நாடுகளுக்கும் சென்று வருகிறேன். பல நாடுகளினதும் ஆதரவுடன் வடபகுதியையும் அபிவிருத்தி செய்வோம். இதற்குக் கால அவகாசம் வழங்க முடியாது. ஒன்றரை வருடத்தில் மாற்றத்தை உணரமுடியும்" என்றார்.

வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட பகுதியில் நீச்சல் தடாகம் அமைக்கவென 3 இடங்கள் நேற்றுப் பார்வை யிடப்பட்டன. அவற்றில் சுங்கத் திணைக் களத்துக்குச் சொந்தமான காணியில் நீச்சல் தடாகம் அமைக்கப் பொருத்தமானதாக இருக்கும் எனக் கண்டறியப்பட்டது. ஆனால் சுங்கத் திணைக்களத்துக்கு மாற்றுக் காணி கொடுக்க வேண்டியிருக்கும் என்பதால் அதற்கான காணியை நகர சபை தேடுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அயலுறவு அமைச்சருடன் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் பி. ஜெயசீலன், நகர சபை உத்தியோகத்தர்கள், சுங்கத் திணைக்களத்தினர் எனப் பலரும் நேற்றைய கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

(உ-4,26)

---

## மரண அறிவித்தல்

### ஜெயராசா கதீஸ்வரன்



யாழ்.விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், இல.83, விவேகானந்த நகரை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான ஜெயராசா கதீஸ்வரன் கடந்த 20.08.2016 சனிக்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் ஜெயராசா (இலங்கை)- சற்குணேஸ்வரி (பிரான்ஸ்) தம்பதிகளின் அன்பு மகனும், தர்மலிங்கம் (லண்டன்) - காலஞ்சென்ற பாமினி தம்பதிகளின் அன்பு மருமகனும், வைதேகியின் (லண்டன்) அன்புக் கணவரும், ஓவிகா (லண்டன்), டெனிசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசாந்தி (லண்டன்), தர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கயேந்திரன் (லண்டன்), வைஷ்ணவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திபிசிகன் (பிரான்ஸ்), கனிஸ்டன் (லண்டன்), கனிஷ்கா (லண்டன்), கருண்யா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமாவும், த.செல்லையாவின் (ஏரி - முரசுமோட்டை) பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல,83, விவேகானந்தநகர் மேற்கு,
கிளிநொச்சி.


தகவல்:
செ.ஜெயராசா
(தந்தை)

(K/149)(11,17,18)

---

## மரண அறிவித்தல்

### முருகேசு மாணிக்கம்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 . 02 . 1922 |  | 20 . 08 . 2016 |

யாழ்ப்பாணம், புத்தூரைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்காபரோவை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு மாணிக்கம் 20.08.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும், பரமு(இலங்கை), காலஞ்சென்றவர்களான செல்லத்துரை,பாக்கியம்,இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகநாதனின் (நில அளவையாளர்) பாசமிகு தந்தையும், சீத்தாலட்சுமியின் அன்பு மாமனாரும், யாழினி-ரஞ்சித்ரூபன்,ஜனனி-ஓவன் ஆகியோரின் அன்புப் பேரனும், இஷா,றியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம்: பார்வைக்கு சனிக்கிழமை 27/08/2016, 5pm-9pm, திங்கட்கிழமை29/08/2016,8am-10am, கிரியை, திங்கட்கிழமை 29/08/2016, 10am-12Noon,CHAPEL Ridge Funeral Home,8911 Woodbine Avenue Markham on-L3R561 Canada, தகனம் திங்கட்கிழமை 29/08/2016,1pm-1.30pm Highland Hills Cramatorium,12492 Woodbine Avenue Gormley on-LOH-5GO.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு.**

**யாழினி-(416) 558 065, ரூபன்-(647) 720 7733**
**சன் (மகன்) (416) 8967425,(416) 724 1063 (Home)**
**ஜனனி-(416) 315 8662,ஓவன்-(647)5257451**
167 OLD FINCH AVENUE,SCARBOROUGH-On MIB 5MI. CANADA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
03.10.1950

உதிர்வு
28.07.2016



## திருமதி யோகம்மா தேவராஜா

கடந்த 28.07.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (27.08.2016) சனிக்கிழமையும், மதியபோசன நிகழ்வு நாளை (28.08.2016) ஞாயிற்றுக்கிழமையும் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்திகேட்டு இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மலர்வளையம், துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி, மின்னஞ்சல் ஊடாக துயர்பகிர்ந்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றி நவிலலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

பருத்தித்துறை வீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(ஜெ/4108)
(11.17.18.)

## மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி சுந்தரம்



தோற்றம்
1926.09.15

மறைவு
2016.08.23

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், 82/22 செட்டித்தெரு நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சுந்தரம் கடந்த (23.08.2016) செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை- நாகம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சுந்தரம் (முன்னாள் கங்கா ஸ்ரோர்ஸ் தெகிவளை உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் வசந்திமாலா(முன்னாள்ஆசிரியர் சென்.மேரிஸ் வித்தியாலயம் OLR) இன் பாசமிகு தாயும் சத்தியகுமாரன் இன் அன்பு மாமியும் சுகஸ்தன், பிறேமஜா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சிவானி, சிவோன்ஆகியோரின்பூட்டியும்பொன்மணி - சண்முகராசன், பராசக்தி - சொக்கலிங்கம், சகுந்தலாதேவி - சண்முகராயன் காலஞ் சென்றவர்களான நகுலாம்பிகை சண்முகம் ,திருச்செல்வம் ,தங்கலெட்சுமி - சபாரெட்ணம், சிந்தாமணி - தம்பையா, மங்கையர்க்கரசி, கிருஸ்ணபாலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகாமன், குமாரசாமி, ரூபாவதி, ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான முருகேசு, நல்லையா, சதாசிவம், அப்புச்சாமி ஆகியோரின் மச்சாளும் சாந்தாதேவி - பாக்கியநாதன், ஜெயா, றசனா, ஜெயந்தா,ஜீவா, சாந்தன், தீபன், சக்தி, அகிம்ஷா, ரஞ்சினி காலஞ்சென்ற சிறீஸ்காந்தன் மற்றும் தாசன், தயாளன், ராகினி, சகிலா, அகிலன், சுமங்கலா, அனுசலா, கபிலன், செல்வன் காலஞ்சென்ற குமரன் மற்றும் கவிதா, அமுதா, வவா ஆகியோரின் பெரியம்மாவும் சுகி, சுகிர்தா, ரஜி, மயூரன், ரூபன், கீதா, ஜாயினி ஆகியோரின் அத்தையும் தவமணிதேவி, மகேஸ்வரி, பத்மநாதன், தங்கவேல், நடேஸ்வரி காலஞ்சென்றவர்களான வசந்தன், கணேஷ், சிவம் மற்றும் தனம், நாகேஸ், விக்கினேஸ், ஜெயம், மல்லிகா, சாந்தா, ஜெகன் ஆகியோரின் சீனியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சத்தியகுமாரன் (மருமகன்),
மாலா (மகள்)

82/22 செட்டித்தெரு, நல்லூர்.
021 221 9648

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் காணிகளைக் கொண்டிராதவர்களுக்கு இரண்டு பரப்பு மாற்றுக் காணி வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு வீடும் கட்டிக் கொடுக்கப்படும் என்று நேற்றைய நிகழ்வில் உறுதி வழங்கப்பட்டது. அதற்கான உறுதிப்பத்திரமும் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இராணுவத்தினர் வசம் உள்ள பகுதிகளில் காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை மத்தி, தையிட்டி கிழக்கு, தையிட்டி தெற்கு ஆகிய இடங்கள் விரைவில் விடுவிக்கப்படவுள்ளன. இந்த இடங்களைச் சேர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து, அவர்களுக்குச் சொந்தக் காணிகளும் இல்லாதிருந்தால் அரசு அவர்களுக்கு இரண்டு பரப்புக் காணியையும் வழங்கி அதில் வீட்டையும் அமைத்துத் தரும் என்று நேற்றைய நிகழ்வில் அந்த மக்களுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது.

நிகழ்வில் பேசிய இராணுவத்தின் யாழ். மாவட்டத் தளபதி சேனநாயக்க, “பலாலி வானூர்தி நிலையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காணிகள் தற்போதைய நிலைமையில் விடுவிக்கப்படமாட்டா. அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் விரும்பினால் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்” - என்றார்.

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் 971 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கடந்த 26 வருடங்களாக நலன்புரி நிலையங்களிலேயே வசித்துவருகின்றனர். இவற்றில் 621 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமக்குச் சொந்த இடங்களில் காணிகள் இல்லை என்று பதிவு செய்துள்ளனர். இவ்வாறு பதிவுகளை மேற்கொண்ட குடும்பங்கள் தெல்லிப்பழை, பருத்தித்துறை, கரவெட்டி, சண்டிலிப்பாய், கோப்பாய், உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் வசித்து வருகின்றன.

இவர்களுக்கே மாற்றுக் காணிகள் வழங்கப்படவுள்ளன. அந்தந்தப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் வைத்து நேற்றைய தினம் உறுதிப் பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது. 621 குடும்பங்களில் 380 குடும்பங்கள் வரையிலேயே நேற்றைய தினம் உறுதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன.

விடுவிக்கப்படவுள்ள காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை மத்தி, தையிட்டி தெற்கு, தையிட்டி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சொந்த இடமாகக் கொண்ட, நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் ஒன்று கூடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

விடுவிக்கப்படவுள்ள காணிகளைப் படைத்தரப்பினர் மக்களை அழைத்துச் சென்று காண்பிக்கவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

மயிலிட்டி மற்றும் விரைவில் விடுவிக்கப்படவுள்ள பகுதிகளையும் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட பகுதிகளையும் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இன்று நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவார். இந்த நிலையில் இந்த மாத இறுதிக்குள் நலன்புரி நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-5)

## செப். 2இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீமன்காமத்தில் மீள்குடியமர்ந்த மக்களையும் அவர் நேரில் சந்தித்து நிலமைகளை ஆராய்வார்.

2009ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் அதன் பின்னர் தற்போது, இரண்டாவது தடவையாகவும் இலங்கைக்கு வருகிறார். எதிர்வரும் 31ஆம் திகதி புதன் கிழமை மாலை அவர் கொழும்பை வந்தடைவார்.

“ஆசிய நாடுகளுக்கான பயணத்தை ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பிப்பார். முதலில் மியான்மர் செல்லும் அவர் அங்கிருந்து புதன்கிழமை பிற்பொழுதில் இலங்கைக்கான பயணத்தை ஆரம்பிப்பார்'' என்று ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச் செயலர் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கியிருப்பார். இந்தக் காலப் பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அவர் முக்கிய பேச்சு நடத்துவார். காலியில் இடம்பெறும் இளைஞர் மாநாட்டிலும் அவர் கலந்துகொள்வார்.

பயணத்தின் இறுதி நாளான இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு பான் கீ மூன் வருகை தருவார்.

**இரண்டாவது பயணம்**

2009 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி ஐ.நா. பொதுச் செயலர் இலங்கைக்கு வந்திருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்ட நான்கு தினங்களில் பான் கீ மூனின் இந்தப் பயணம் அமைந்திருந்தது. இந்தப் பயணத்தின்போது உலங்குவானூர்தியிலிருந்து போர் நடைபெற்ற பிரதேசங்களைப் பார்வையிட்டார். இதன் பின்னர் மெனிக் பார்மில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, வன்னிப் போரினால் இடம்பெயர்ந்த மக்களையும் அவர் நேரில் சென்று சந்தித்தார். அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவது இதுவே முதற்தடவை என்று கூறப்படுகிறது.

(உ-5)

## ரூ. 6000....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, கிளிநொச்சி பொதுச்சந்தை மற்றும் கிளிநொச்சி - கனகபுரம் பகுதியில் மகிந்த ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் என்பவற்றுக்கும் சென்று பார்வையிட்டார். அங்குள்ள நிலமைகளை நேரில் ஆராய்ந்தார். அதன் பின்னர் அவர் தெரிவித்ததாவது:

“நான் ஓர் அமைச்சர் கிடையாது. நான் ஒரு ஆளுநர். எனவே நான் ஜனாதிபதியின் ஒரு தூதுவராகத்தான் இங்கு வந்துள்ளேன்.

இங்குள்ள நிலமைகளை நான் அவருக்குக் கட்டாயம் தெரிவிப்பேன். அத்துடன் கல்வி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட 6 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி திரும்பி உள்ளது. அந்த நிதியை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேசி மீள எடுத்து கிளிநொச்சி சந்தைக் கட்டடத் தொகுதி அமைப்பதற்குப் பயன்படுத்த முடியுமா என்று ஆராய்கின்றேன். முடியுமென்றால் கட்டாயம் நான் அதனைச் செய்து தருவேன்”- என்றார் வடக்கு மாகாண ஆளுநர்.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு .சந்திரகுமார், கரைச்சி பிரதேச சபைச் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட செயலக காணி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் ஆளுநருடன் வருகை தந்தனர்.

(வ-21,27)

## தெல்லிப்பழை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து காரில் கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இரண்டு இளைஞர்களே சம்பவ இடத்தில் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த இரு இளைஞர்களும் தெல்லிப்பழை - அம்பனைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

காரில் பயணித்த ஏனைய இருவரும், வானில் பயணித்த 7 பேருமாக ஒன்பது பேர் படுகாயமடைந்த நிலையில் சிலாபம் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(வ-5)

## பட்டினிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரவேண்டும் என வலியுறுத்தி முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் நேற்று முன்தினம் பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டத்தின் போது உடல் நிலை பாதிக்கப்பட்டதால் கணவன் மற்றும் மனைவி இருவரும் நேற்று கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

(வ-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 400 கோடி கொடுக்கல் வாங்கலினால் கொழும்பு வர்த்தகர் சுலைமான் கொலை

## பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 27
பம்பலப்பிட்டியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்த முஸ்லிம் வர்த்தகரான மொஹமட் கிப் சுலைமான் (வயது - 29) 400 கோடி ரூபா பணக் கொடுக்கல் வாங்கல்களின் அடிப் படையிலேயே படுகொலை செய்யப் பட்டிருக்கின்றார் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

கொழும்பு - பம்பலப்பிட்டியில் வைத்து கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு கடத்திச் செல்லப்பட்ட சுலைமான், கேகாலை மாவட்டத்தின் மாவனெல்ல பகுதியில் கடந்த 24 ஆம் திகதி புதன் கிழமை இரவு அடிகாயங்களுடன் சடல மாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

இது தொடர்பில் தெஹிவளை மற்றும் வெள்ளவத்தை பகுதிகளைச் சேர்ந்த இரு வர்த்தகர்களிடம் விசாரணைகள் நடத் தப்பட்டன.வெள்ளவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் தற்போது விசா ரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 11 பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு விசா ரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கொள்ளுப்பிட்டியிலிருந்து வெள்ளவத்தை வரை பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கமராக்களின் காணொளிப் பதிவுகளும் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலையுடன் தொடர்புபட்டிருக் கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்ற 5 வர்த்தகர்களுக்கு நாட்டைவிட்டு வெளி யேற நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக் கப்பட்டது. அவர்கள் உயிரிழந்த சுலை மானின் தாய்வழி உறவினர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுலைமானின் ஊழியர்கள், உறவினர்கள் உள்ளிட்ட சுமார் 50 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டுள்ளன. சுமார் 6 கோடிக் கும் அதிக பணத்தை சுலை மானிடம் இருந்து பலர் கட னாகப் பெற்றுள்ளனர் - என் றனர் பொலிஸார்.

(வ-4)

## ஊடகவியலாளர் மீது தாக்கியதாக படைப் புலனாய்வாளர் அடையாளம்

கொழும்பு, ஓக.27
மூத்த ஊடகவியலாளர் உபாலி தென்னகோன் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர் கம்பஹா நீதிமன் றத்தில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் நேற்று அடையாளம் காணப்பட்டார். உபாலி தென்னக்கோன் மற்றும் அவரின் பாரியாரினால், சந்தேகநபர் அடையாளம் காணப் பட்டார். (வ-5)

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் வாக்குமூலமளித்தார் ரிசாத்

கொழும்பு, ஓக. 27
மகிந்த ஆட்சியில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொடர்பில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர் பில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் நேற்று ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன்னிலையாகி வாக்கு மூலம் வழங்கினார்.

மகிந்த அரசின் காலத்தில் இறக் குமதி செய்யப்பட்ட 98 ஆயிரத்து 375 மெட்ரிக் தொன் பொன்னி அரிசி, நீண்டகாலமாக களஞ் சியப்படுத்தப்பட்டிருந்த நிலை யில், தற்போதைய அரசு அதனை விற்பனை செய்தது. நிதி அமைச்சு மற்றும் திறைசேரி யின் அனுமதியுடன் சதொசவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இந்த விற்பனையில் சுமார் 500 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டது.

இந்தவிடயம் தொடர்பில் ஜனாதி பதி ஆணைக்குழு மேற்கொண்டு வரும் விசாரணைகளுக்காக சதொசவுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன் னிலையாகி வாக்குமூலம் வழங் கினார். (வ-21)

## நாடாளுமன்ற வரலாற்றில் மைத்திரி புதிய சாதனை



கொழும்பு, ஓக. 27
இலங்கை நாடா ளுமன்ற வரலாற் றில் அனுதாப பிரேரணையொன் றில் உரை நிகழ்த் திய முதலாவது ஜனாதிபதி என்ற பெயரை மைத்திரிபால சிறிசேன நேற்று தன்வசப்படுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலை மையில் ஆரம்பமானது. ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், காலஞ்சென்ற அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தனவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையை சபை முதல்வரான அமைச் சர் லக்ஸ்மன் கிரியெல்ல முன்வைத்து உரையாற்றினார்.

அதன்பின்னர், பிரதமர் ரணில் விக்கிரம சிங்க உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரை இடம்பெற்றது.

இதன் மூலம் இலங்கை அரசியல் வரலாற் றில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை கொண்டு வரப்பட்ட பின்னர், ஜனாதிபதி யொருவர் அனுதாப பிரேரணையில் உரை யாற்றிய முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும் அனுதாபப் பிரேரணையில் உரையாற்றினார்.

(வ-21)

## ஈழத்தமிழ் இளைஞர்கள் உயிரிழப்பு பிரி. கடற்கரையில் பாதுகாப்பு அதிகரிப்பு

பிரிட்டனின் கிழக்கு சசக்ஸ் பகுதியிலுள்ள கேம்பர் சாண்ட்ஸ் கடற் கரையில் உயிர் பாதுகாப்பு பணியாளர்கள் ரோந்துப் பணியில் ஈடுபடுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

அந்தக் கடற்கரை பகுதியில் ஐந்து இலங்கைத் தமிழ் இளைஞர்கள் உயிரிழந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை அந்தக் கடற்கரைக்குச் சென்ற கெனுஜன் சத் தியநாதன், கோபிகாந்தன் சத்தியநாதன், நிதர்சன் ரவி, இந்துன் ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் குருசாந்த் ஸ்ரீதவராஜா ஆகியோர் புதை மணலில் சிக்கி உயிரிழந்தனர்.

இன்று சனிக்கிழமை தொடங்கி மூன்று நாள்கள் தொடர்ச்சியாக விடு முறை என்பதால், அந்தக் கடற்கரைப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடு கள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக ராதர் சபை அறிவித்தது.

அங்கு வரும் மக்களுக்கு உறுதியளிக்கும் நோக்கிலும், அவர்களுக்குப் பாதுகாப்புக் குறித்த ஆலோசனைகளை வழங்கவும் உயிர்பாதுகாப் புப் பணியாளர்கள் அங்கு நிறுத்தப்படுவதாக அந்தச் சபை தெரி வித்தது. (வ)

### தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை

# நேற்றைய பேச்சுக்களும் தோல்வியிலேயே நிறைவு

கொழும்பு, ஓக .27
ஒன்றரை வருடங்கள் கடந்தும் இழு பறியில் தொடரும் தோட்டத் தொழி லாளர்களின் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் சம்பளப் பேச்சுகள் நேற்றும் படுதோல்வியிலேயே முடிந் துள்ளன.

முதலாளிமார் சம்மேளனத்துக்கும் கூட்டு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் பலகட்டப் பேச்சுகள் நடைபெற்றுள்ள நிலையில் நேற்று மீண்டும் பேச்சுகள் ஆரம்பமாகின.

இராஜகிரியவில் அமைந்துள்ள தொழில் அமைச்சில் இடம்பெற்ற இந்தப் பேச்சுகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், பெருந் தோட்டக் கமிட்டி, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் உள் ளிட்ட கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத் திடும் மூன்று தொழிற்சங்கங்களும் கலந்துகொண்டன. அத்துடன், முதலாளிமார் சம்மேளனம், தொழில் அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதி களும் கலந்துகொண்டனர்.

“இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 1,000 ரூபா என்ற சம்பளக் கோரிக் கையிலிருந்து ஒருபோதும் பின் வாங்காது. இன்றைய (நேற்று) பேச் சுகளின்போது 500 ரூபாவை அடிப் படைச் சம்பளமாக தருவதாக முத லாளிமார் சம்மேளனம் தெரிவித்தது. ஆனால், நாங்கள் 500 ரூபா அடிப் படைச்சம்பளம் என்ற கோரிக்கையை அடியோடு நிராகரித்துவிட்டோம். தற்போது வழங்கப்படும் 620 மொத்த சம்பளத்தையும் காட்டிய ஓர் உயரிய தொகையை அடிப்படைச் சம்பளமாகக் கூறும் பட்சத்திலேயே பேச்சுகளுக்கு இணங்குவோம் என்றோம். எங்களது கோரிக்கைகளை பரிசீலிப்பதாக முதலாளிமார் சம்மேளனம் தெரி வித்தது. வெகுவிரைவில் மீண்டும் பேச்சுகள் இடம்பெறும். இம்முறை ஒரு இணக்கப்பாட்டை எட்ட முடியும்” என்றார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் முத்துசிவலிங் கம். (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை பரமலிங்கம்
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)



வேலணை வடக்கு சோளாவத் தையைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபரோவை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமலிங்கம் கடந்த (22.08.2016) திங்கட்கிழமை கால மாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிய ரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான வைத்திலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புனித வதியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) பாசமிகு கணவரும், குகநேசன், ஜெயகணேசன், கீதாஞ்சலி, மணிமேகலை, சுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன், பாக்கியலட்சுமி, காந்திமதி ஆகியோரின் அருமைச் சகே தரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2016) ஞாயிற் றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

135, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்: சகோதரர் வே. சண்முகநாதன், பெறாமக்கள் (யசோ, பாமா)

### திருமதி பஞ்சாட்சரராணி யோகானந்தராசா



டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகத்தைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சாட்சரராணி யோகானந்த ராசா நேற்று (26.08.2016) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - செல்லமுத்து தம்பதியின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர் களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியின் அன்பு மரு மகளும் காலஞ்சென்ற Lion செ. யோகானந்தராசாவின் அன்பு மனைவியும் பிரியதர்சினி (London), துஷ்யந்தன் (Eng, Project Manager London), புருஷோத்தமன் (Releationship Manager Cargills Bank, Chunnakam) ஆகியோரின் அன்புத்தாயாரும் துளசீதரன் (London), கேமசுஜி (London), சாந்திரேகா (வயம்ப பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் மெலிசா, அரொன், சேசன், கீரன், ஹரீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் திருமதி கு. திலகவதி ந.லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குலசிங்கம், தங்கலட்சுமி இராமச்சந்திரன் (Colombo), செ.லட்சுமிகாந்தன் (London), செ.கிருபானந்தன் (France), செ. கருணாகரன் (Germany), ப.புனிதமலர் (Canada), செ.மனோரஞ்சித மலர் (Colombo), சி.கனகாம் பிகைமலர் (மேல் முறையீட்டு மேல்நீதி மன்ற நீதிபதி, யாழ்ப்பாணம்) கு.சிவஞானசௌந்தரவல்லி, இ. அனுசியா (London) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
021 2242899,
077 920 2497

தகவல் :
குடும்பத்தினர்

## பெரேராவுக்கு அபராதம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் மோதல் போக்கைக் கடைப்பிடித்த குற்றத்துக்காக இலங்கை அணியின் சகலதுறை வீரர் பெரேராவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இரண்டாவது ஒருநாள் ஆட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 288 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 206 ஓட்டங்களில் சுருண்டு தோல்வியடைந்தது. ஆஸ்திரேலிய ஆரம்ப வீரரான வோர்ணரை பெரேரா வீழ்த்தியவுடன் வோர்ணரின் முகத்துக்கு நேராக வந்து சில வார்த்தைகளைப் பரிமாறிவிட்டுச் சென்றார். இது பன்னாட்டுக்கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் மோதல் போக்கைக் கடைப்பிடித்த குற்றமாகக் கருதப்பட்டு, குறித்த ஆட்டத்துக்கான கட்டணத்திலிருந்து அவருக்கு 15 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான ஸ்ராக்குக்கும் எச்சரிக்கை விடப்பட்டது. தனது பந்துப் பரிமாற்றத்தின் நிறைவில் அவர் ஓட்டமெதனையும் எடுக்க முற்படாமல் இருந்த சந்திமல்லுக்கு எதிராக பந்தை எறிந்தமைகாகவே இந்த எச்சரிக்கை. (ம)





## சிறந்த கால்பந்தாட்ட வீரராக ரொனால்டோ மீண்டும் தெரிவு

2015ஆம், 2016ஆம் ஆண்டு பருவகாலத்துக்கான சிறந்த ஐரோப்பிய கால்பந்தாட்ட வீரராக போர்த்துக்கலின் தலைவரான ரொனால்டோ தெரிவாகினார்.

வழக்கமாக ரொனால்டோ, மெஸ்ஸி இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவுகின்ற போதிலும், இம்முறை தெரிவுப்பட்டியலில் கூட மெஸ்ஸி இடம்பிடிக்கவில்லை. மாறாக வேல்ஸ் அணியில் கரீத் பலே, பிரான்ஸின் கிரீஸ்மன் ஆகியோரே போட்டியில் இருந்தனர். இவர்களைப் பின்தள்ளி ரொனால்டோ விருதை வென்றார்.

2013 ஆம், 2014 ஆம் ஆண்டு பருவகாலத்துக்கான விருதையும் ரொனால்டோவே வென்றிருந்தார். மொத்தத்தில் 2013ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அவரே சிறந்த ஐரோப்பிய கால்பந்தாட்ட வீரராக உள்ளார். (ம)

## இலங்கை அணியின் எதிர்காலம் மெண்டிஸ்

### என்கிறார் மத்தியூஸ்

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தின் எதிர்காலமாக, இளம் வீரர் குசல் மெண்டிஸ் மாறுவார் என, அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்தார்.

சங்கா, மகேலவின் ஓய்வின் பின்னர் இலங்கை மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வந்தது. இலங்கையின் கிரிக்கெட்டின் பின்னடைவான காலமாக இக்காலம் கணிக்கப்பட்ட நிலையில் நடைபெற்றுவரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இலங்கை மீண்டெழும் என்ற நம்பிக்கை துளிர்த்துள்ளது. குறிப்பாக இலங்கை அணியில் இளம் வீரரான குசல் மெண்டிஸ் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தினார். சதங்கள், அரைச்சதங்கள் என நொறுக்கித் தள்ளும் அவரை இலங்கை கிரிக்கெட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் எனவும், சங்கா, மகேல இருவரில் ஒருவரின் இடத்தை பிரதியீடு செய்யவல்லவர் என்றும் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன. இந்த நிலையில் இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் இவ்வாறான ஓர் கருத்தைத் தெரிவித்தார்.

எமக்கு, மிகப்பெரிய வீரராக அவர் மாறப்போகிறார். எங்களது துடுப்பாட்டத்தில் எதிர்காலமாக அவரே இருக்கப் போகிறார். இவ்வாறு அவர் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருந்தால், இலங்கை அணிக்கு அவர் அதிசயங்கள் பலவற்றைச் செய்வார். அவருக்கு மிகச்சிறப்பான வாழ்த்துகளை நான் தெரிவிக்கிறேன். வித்தியாசமான வகையான வீரர் அவர் என மத்தியூஸ் புகழ்ந்து தள்ளியுள்ளார். (ம)




## ஐ.சி.சி. விசாரணைகளிலிருந்து சமரநாயக்க விடுவிப்பு



இலங்கை கிரிக்கெட் சபையின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுநர்களில் ஒருவராகச் செயற்பட்டிருந்த அநுர சமரநாயக்க மீது முன்வைக்கப்பட்டிருந்த ஆட்ட நிர்ணயக் குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டதாகப் பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது.

இலங்கை அணியின் வீரர்கள் சிலரை ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அநுர சமரநாயக்க, பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். ஆனால் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோது அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாததால் அவரை விடுவிப்பதாகப் பன்னாட்டு கிரிக்கெட் சபை அறிவித்தது.

இருப்பினும், இலங்கை கிரிக்கெட் சபையால் தனியாக நடத்தப்பட்ட வேறொரு விடயம் சம்பந்தமான ஒழுக்காற்று விசாரணைகளில், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது.

கொழும்பு ஆர். பிரேமதாச விளையாட்டரங்கிலுள்ள கிரிக்கெட் அக்கடமியில், விருந்தினர்களைக் கொண்டு சென்றார் என்ற விடயம் சம்பந்தமாகவே இந்த விசாரணை இடம்பெற்றிருந்தது. இதிலேயே அவரது குற்றம் நிரூபிக்கப்பட்டது. (ம)

## மெஸ்ஸிக்கு அங்கீகாரம்

2015 ஆம், 2016 ஆம் ஆண்டு பருவகாலத்தில் பதிவான ஆகச் சிறந்த கோலாக மெஸ்ஸியின் கோலே தெரிவு செய்யப்பட்டது. பார்சிலோனா விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற ரோமா அணிக்கு எதிரான ஆட்டத்தில் பார்சிலோனா 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி கோலொன்றைப் பதிவுசெய்தார். கிட்டத்தட்ட ஆறு ரோமா அணியின் வீரர்களைக் கடந்து சென்று மெஸ்ஸி குறித்த கோலைப் பதிவுசெய்தார். இந்தக்கோலே 2015 ஆம், 2016 ஆம் ஆண்டு பருவகாலத்தில் பதிவான ஆகச் சிறந்த கோலாக தெரிவு செய்யப்பட்டது. (ம)



## பெடரர், நடால் இணைகின்றனர்

புகழ்பெற்ற ரென்னிஸ் வீரர்களான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரரும், ஸ்பெய்னின் ரபேல் நடாலும் ஒன்று சேர்ந்து இரட்டையர் ஆட்டங்களில் விளையாட உள்ளனர். பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனம் லேவர் கிண்ணம் என்ற தொடரை அறிமுகம் செய்துள்ளது. ஐரோப்பிய வீரர்களை எதிர்த்து உலக வீரர்கள் இதில் மோதவுள்ளனர். அமெரிக்க ரென்னிஸ் தொடர் முடிவடைந்து இரு வாரங்களில் இந்தத் தொடர் நடைபெறும். முதலாவது தொடர் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. ஐரோப்பிய அணியில் இடம்பிடித்தள்ள பெடரரும், நடாலும் இணைந்து இரட்டையர் ஆட்டங்களில் களமிறங்க முடிவு செய்துள்ளனர். இதை இருவரும் உறுதிசெய்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிஞ்சிக்குமரன், நவஜீவன்ஸ், லூட்ஸ் சுப்பர் எட்டு சுற்றுக்குத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம், ஓக. 27
பொலிகை பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன சுப்பர் எட்டு சுற்றுக்களுக்கு முன்னேறின.

**குறிஞ்சிக்குமரன் – சேவியர்**

பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக முன்னெடுத்துவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுப்பர் எட்டு சுற்றுக்குத் தகுதி பெறும் ஆட்டங்களில் முதலாவதில், குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகமும் சக் கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 29 ஆவது நிமிடத்தில் குருபரனின் உதவியுடன் முதல் கோலைப் பதிவுசெய்தது குறிஞ்சிக் குமரன். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. 48 ஆவது நிமிடத்தில் சென். சேவியர் அணியின் முன்கள வீரர் கனிஷ்ரன் பதில் கோலைப் பதிவுசெய்தார். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது குறிஞ்சிக்குமரன் அணி.

**நவஜீவன்ஸ் – சிவானந்தா**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணியின் ரவிசாந் பதிவுசெய்த கோலே ஆட்டத்தின் ஒரே கோலாகவும் அமைந்தது.

**றோயல் – சென். லூட்ஸ்**

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிந்தது முதல் பாதி. சென். லூட்ஸ் வீரர் ரமேஸ் இரண்டாம் பாதியில் கோலொன்றைப் பதிவசெய்தார். அதுவே ஆட்டத்தின் ஒரே கோலாகவும் அமைந்தது. (ம-108-422)



### வெளியானது பூப்பந்தாட்டத்தரப்படுத்தல்

## கரோலினாவின் ஆதிக்கம் நீண்டு நிலைபெறுகிறது

பன்னாட்டு பூப்பந்தாட்டச் சங்கம் தனது புதிய தரப்படுத்தலை நேற்று வெளியிட்டது. உலகச் சம்பியனாகவும், ஒலிம்பிக் சம்பியனாகவும் வலம்வரும் ஸ்பெய்னின் கரோலின் மரின், பன்னாட்டு பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் தரப்படுத்தலிலும் தனது முதலிட அந்தஸ்தைத் தக்க வைத்துள்ளார்.
தரப்படுத்தலில் முதலிடத்தில் தொடர்கின்றமையைத் தவிர, முதல் பத்து இடங்களுக்குள்ளும் உள்ள ஒரேயொரு ஐரோப்பிய நாட்டவர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைக்கிறது. சீனாவின் லீ ஸ்குவாய் இரண்டாவது இடத்திலும், ஜப்பானின் நொசோமி ஒகுஹாரா மூன் றாம் இடத்திலும், சீனாவின் பிறிதொரு வீராங் கனையான வாங் நான்காவது இடத்திலும், தாய்லாந்தின் ரச்சனொக் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். ஐந்தாவது இடத்திலிருந்த இந்தியாவின் சாய்னா நேவால், ஒலிம்பிக் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேறியமையால் 9 ஆவது இடத்துக்கு பின்தங்கினார். ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்தியாவின் பி.வி.சிந்து 10 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டார். (ம)

## கிண்ணம் வென்றது அண்ணா

யாழ்ப்பாணம், ஓக. 27
கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் அந்த அணியே சம்பியனானது.
அண்ணா வி.கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.
ஐந்து செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதல் செற்றை 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது அண்ணா.
இரண்டாவது செற்றை 18:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது நவஜீவன்ஸ்.
மூன்றாவது செற் 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் அண்ணாவின் வசமாக நான்காவது செற்றை 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது நவஜீவன்ஸ்.
முதல் நான்கு செற்களின் நிறைவில் இரு அணிகளும் 2:2 என்றிருந்தன.
இறுதி செற்றில் வெற்றி பெறும் அணி எதுவோ அதுவே சம்பியன் என்ற நிலை. 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய அண்ணா அணி 3:2 என்ற செற் கணக்கில் சம்பியனானது. (ம-108)






இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தப் போட்டிகளுக்கான ஒலிம்பிக் சுடர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று ஏற்றப் பட்டது. பல்கலைக்கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒலிம்பிக் சுடர் யாழ். பல்கலையில் ஏற்றப்படுவது இதுவே முதல் முறை. (ம-23)

## கலைமதி அணி முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 27
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தி வரும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் முன்னேற்றம் கண்டது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தைச் சேர்ந்த நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் கிளிநொச்சி கால்பந்தாட்டச் சங்கத்தைச் சேர்ந்த இளந்தளிர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 10 ஆவது நிமிடத்தில் கலைமதியின் முன்கள வீரர் பானுப்பிரியன் முதல் கோலைப் பதிவுசெய்தார். 18 ஆவது நிமிடத்தில் பதிலடிகொடுத்தது இளந்தளிர் அணி. 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் நகர்ந்துகொண்டிருந்தது. இறுதி நிமிடத்தில் கலைமதியின் நிசாந்தன் கோலைப் பதிவு செய்ய, முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு நகர்ந்தது நவிண்டில் கலைமதி அணி. (ம-108)

## டயமன்ஸ் – மேரிஸ் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஓக. 27
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ், நாவாந்துறை சென். மேரிஸ் அணிகள் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன.
இமையாணன் மத்தியின் மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இந்த ஆட்டத்துக்கு தலைமை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்வார். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரியோவில் பதக்கம் வெல்லாத வீரர்களுக்கு தண்டனை வழங்கவுள்ளதாம் வடகொரியா



ரியோ ஒலிம்பிக் தொடரில் பதக்கங்களை வெல்லாத வீர, வீராங்கனைகளை கடுமையான சுரங்க வேலைகளுக்கு அனுப்பி தண்டனை வழங்க வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் திட்டமிட்டுள்ளதாக அறியவருகிறது.

ரியோ டி ஜெனிரோ நகரில் சமீபத்தில் நடந்து முடிந்த ஒலிம்பிக் தொடரில் பங்கேற்ற வடகொரியா இரண்டு தங்கம் உள்பட 7 பதக்கங்களை வென்றது. ஆனால், அதன் எதிரிநாடான தென் கொரியா ஒன்பது தங்கம் உள்பட 21 பதக்கங்களை வென்றது. இது வடகொரியா ஜனாதிபதி கிம் ஜோங் உன்னை கோபமடையச் செய்துள்ளது. இதனால் அவர், ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லாத வீர, வீராங்கனைகளை சுரங்க வேலைகளுக்கு அனுப்பி தண்டனை வழங்கத்திட்டமிட்டுள்ளதாக அறியவருகிறது.

சுரங்க வேலைகளுக்கு அனுப்புவது மட்டுமல்லாமல் அவர்களின் நிவாரணங்கள், வீடுகள், ஊதியம் ஆகியவற்றின் தரங்களைக் குறைக்கவும் அவர் திட்டமிட்டுள்ளாராம். அதேநேரம் பதக்கங்களை வென்ற வீர, வீராங்கனைகளுக்கு வீடு, கார், பதவி உயர்வு, அதிகப்படியான நிவாரணங்கள் என பல சலுகைகளையும் அவர் அறிவித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடந்த உலகக்கிண்ண கால்பந்துத் தொடரில் போர்த்துக்கல் அணியிடம் வடகொரியா 7:0 என்ற கோல் கணக்கில் படுதோல்வி அடைந்தது. இதனால் வடகொரிய கால்பந்து வீரர்கள் நிலக்கரிச் சுரங்க வேலைக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## பன்னாட்டு அரங்கில் இன்றைய மோதல்கள்



பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இன்று மூன்று மோதல்கள் இடம்பெறவுள்ளன. ஒரு ரி-20, ஒரு ஒருநாள், ஒரு டெஸ்ட் ஆட்டங்களே அவ்வாறு இடம்பெறவுள்ளன.

**இந்தியா - தீவுகள்**

ரி-20 ஆட்டத்தில் இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் மோதவுள்ளன. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட தொடர் அமெரிக்காவில் இன்று ஆரம்பமாகிறது. இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு ஆட்டம் நடைபெறும்.

**இங்கி - பாக்**

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் லோட்ஸ் மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இன்றைய ஆட்டத்திலும் இங்கிலாந்து வெற்றிபெற்றால், இறுதி மூன்று ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே பாகிஸ்தானால் தொடரைக் கைப்பற்ற முடியும். எனவே இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி பாகிஸ்தானுக்கு உள்ளது. இலங்கை நேரப் படி பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும்.

**தெ.ஆபிரிக்கா - நியூசி.**

தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. தொடரில் இரு ஆட்டங்கள். முதல் டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்திருந்தது. எனவே இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணிக்கே கிண்ணம் என்பதால் ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகும். (ம-23)

## ஓமந்தையில் மைதானம் அமைக்க இலங்கை கிரிக்கெட் சபை திருப்தி



யாழ்ப்பாணம், ஓக. 27

வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கம் மைதானம் அமைப்பதற்காக ஓமந்தையில் ஒதுக்கிய இடத்துக்கு இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதிநிதிகள் திருப்தி தெரிவித்தனர்.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவருக்கான தேர்தல் அண்மையில் நடைபெற்றது. குறித்த பதவிக்கான போட்டியாளர்களில் ஒருவராக இருந்த திலங்க சுமதிபால, வவுனியா கிரிக்கெட் சங்கம் தனக்கு ஆதரவு தெரிவித்தால் வவுனியா மாவட்டத்துக்கு என கிரிக்கெட் மைதானமொன்றை அமைத்துத் தருவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் இதற்குரிய காணி வவுனியா கிரிக்கெட் சங்கமே தரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் வவுனியா பிரதேச செயலகத்தால் வவுனியா கிரிக்கெட் சங்கத்துக்கு ஓமந்தைப் பகுதியில் 20 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தக் காணியை இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதிநிதிகள் நேற்றுப் பார்வையிட்டுத் திருப்தி தெரிவித்தனர்.

மைதானம் வவுனியா கிரிக்கெட் சங்கத்துக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டும் மைதானத்துக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகும் என இலங்கைக் கிரிக்கெட் சபையின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இந்தத் தகவல்களை வவுனியா கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் வை. ரதீபன் உறுதிப்படுத்தினார்.

(ம-23)



## டில்சான் இலங்கையின் சொத்து தெரிவித்தார் அர்ஜுன ரணதுங்க

டில்சான் இலங்கைக் கிரிக்கெட்டின் சொத்து என வர்ணித்துள்ளார் இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த தலைவரான அர்ஜுன ரணதுங்க.

டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து டில்சான் ஏற்கனவே ஓய்வு பெற்றுவிட்ட நிலையில், ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நாளை நடைபெறவுள்ள ஒருநாள் ஆட்டத்துடன் ஒருநாள் தொடர்களிலிருந்தும், ஆஸிக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டாவது ரி-20 ஆட்டத்துடன் ரி-20 தொடர்களிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இந்த நிலையிலேயே ரணதுங்க டில்சானை இலங்கையின் சொத்து என வர்ணித்துள்ளார்.

ஓர் விளையாட்டு வீரராக டில்சான் இந்த நாட்டுக்கு ஆற்றிய சேவையை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்குவதென்பது இலகுவான விடயமல்ல. அத்தகைய பணியை அவர் செவ்வனே செய்துள்ளார். ஓர் பந்துவீச்சாளராகவும் அவரது செயற்பாடுகள் வியக்கும் படியாக அமைந்தன. அவர் இலங்கைக் கிரிக்கெட்டின் சொத்து. தனது ஓய்வின் பின்னர் அவர் பயிற்றுவிப்பாளராகவோ அல்லது முகாமையாளராகவோ தனது சேவையை தொடருவார் என்று எதிர்பார்க்கின்றேன் என ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

(ம)

## மேற்கிந்தியத் தீவுகள் - பாக். ஒக்ரோபரில் பகலிரவு டெஸ்ட்

மேற்கிந்தியத்தீவுகளுக்கும்பாகிஸ்தானுக்கும் இடையே ஒக்ரோபர் மாதத்தில் பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தை நடத்துவதில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டின் பக்கம் ரசிகர்களைக் கவரும் விதமாகவும், விறுவிறுப்புத் தன்மையை ஏற்படுத்தும் விதமாகவும் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. இந்த வரிசையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டத்தை பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக நடத்த இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் சம்மதம் தெரிவித்துள்ளன.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதலாவது ஆட்டம் ஒக்ரோபர் 13 ஆம் திகதியும், இரண்டாவது ஆட்டம், 21 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் 30 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

(ம)

றெறாசோ சிப்ஸ் (இந்தியா)
மலிவு விற்பனை
சகல நிறங்களும் அளவுகளும்
100 மூடைகளுக்கு மேல் மொத்தவிலை.
077 954 1877, 021 225 0186

விற்பனைக்கு உண்டு
பண்டத்தரிப்பு பிரதான வீதியில் தற்போது மக்கள் வங்கி இயங்கிக் கொண்டிருக்கும் கட்டடத்தில் 3 கடைகளும் அதன் பின்புறம் வீட்டுடன் 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உள்ளன.
(தரகர் வேண்டாம்)
077 157 9176, 077 801 4335



தீவுகளுக்கு எதிரான ரி-20 தொடருக்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள இந்திய அணி, நேற்றுப் பயிற்சியில் ஈடுபட்டது. ரசிகர் ஒருவர் உபதலைவரான கோக்லியின் படத்தை வரைந்து அவருக்கே பரிசளித்தார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.